விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka


சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 10 புதன்கிழமை (25.12.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 006



ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ


# நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்க முடியாது

## மகிந்தவின் அழைப்பை நிராகரித்தது கூட்டமைப்பு



(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்ற தெரிவுக்குழு நம்பகத்தன்மை அற்றது என்பதுடன் இதனூடாக நியாயமான அரசியல் தீர்வை அடைய முடியாது என்பதனால் அக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விசேட கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இதன்மூலம் தம்மோடு இணைந்து அரசியல் தீர்வை பெற்றுக் கொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் விடுக்கப்பட்ட அழைப்பு நிராகரிக்கப்பட்டுள்ளது.

20-ம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை சிறையில் உள்ள 32 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 6ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதவான் நீதிமனறம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

எல்லை மீறி மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதி 4 படகுகளுடன் முல்லைத்தீவு கடற்பரப்பில் வைத்து மேற்படி மீனவர்கள் 32 பேரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களது படகுகள் நான்கும் டொக்கையாட் கடற்படைத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் மீனவர்களை நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று செவ்வாய்க்கிழமை இவர்கள்

19-ம் பக்கம் பார்க்க

## பட்டதாரி பயிலுநர்கள் கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் இணைக்கப்பட்டுள்ள பட்டதாரிப் பயிலுநர்கள் நேற்று காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை பிரதேச செயலகத்தில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தமது நியமனம் இதுவரையில் வழங்கப்படாமைக்கு அதிகாரிகளின் அசமந்தப் போக்கே காரணம் என தெரிவித்த அவர்கள், எதிர்வரும் 26ஆம் திகதிக்குள் நியமனம் தொடரபான உரிய பதில் கிடைக்காத பட்சத்தில் யாழ். மாவட்டச் செயலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அவர்கள் எச்சரித்துள்

20-ம் பக்கம் பார்க்க

## தனித்து போட்டியிட மு.கா முடிபு!

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலில் தனித்து போட்டியிடப் போவதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

எதிர்வரும் மேல் மற்றும் தென் மாகாணசபைத் தேர்தல்களில் தனியாக போட்டியிட உள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 12-ம் திகதி மேல் மற்றும் தென் மாகாண சபைகள் கலைக்கப்பட உள்ளது. மார்ச மாதத்தில் தேர்தல் நடைபெறும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இத் தேர்தலில் மரச் சின்னத்தில் தனித்து போட்டியிடுவது பொருத்தமாக அமையும் என அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும் தேர்தலில் போட்டியிடுவது குறித்து இன்னமும் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

19-ம் பக்கம் பார்க்க

## த.தே.கூட்டமைப்பில் நான் சேரப் போவதில்லை

### அமைச்சர் டக்ளஸ் ஊடகங்களிடம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் சேரும் எண்ணம் எமக்கில்லை எனவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின அழிப்பதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்டதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றும் அமைச்சரும் ஈபிடிபியின் செயலாளர் நாயகமுமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற தொண்டர் ஊழியர்களின் போராட்டத்தை நிறைவு செய்து வைத்த பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:

அண்மையில் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முகம்காட்ட ஈ.பி.டி.பி விரும்புகிறது என்று தெரிவித்தி

02-ம் பக்கம் பார்க்க

## விஜயலட்சுமிக்கு தொலைபேசி மிரட்டல்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தின் பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேசுக்கு வெளிநாட்டுத் தொலைபேசி இலக்கங்களுக்கு ஊடாகவும் உள்ளூர் தொலைபேசி இலக்கங்களுக்கு ஊடாகவும் மிரட்டலும் பயமுறுத்தலும் விடுக்கப்பட்டுள்ளதாக வட மாகாணத்தின் உத்தியோகபூர்வ வட்டாரங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் தெரிவித்தன.

இவ்விடயம் தொடர்பில் சிரேஸ்ட பொலிஸ் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு

19-ம் பக்கம் பார்க்க




## கருத்தடை ஊசி தாய்க்கு எமனானது

(மன்னார்)

கருத்தடை செய்துகொண்ட இளம் தாய் ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஒன்று கற்பிட்டி பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

கற்பிட்டி, மணல்தோட்டம் பிரதேசத்தைச் சேர்ந்த கோமஸ் மேரி நிரோஜனி (வயது 24) என்ற 40 நாள் குழந்தை ஒன்றின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கற்பிட்டி பிரதேசத்திலுள்ள அரச வைத்தியருக்குச் சொந்தமான தனியார் வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் மாலை சென்றுள்ள இப்பெண் அங்கு கருத்தடைக்கான ஊசியை ஏற்றிக் கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து உயிரிழந்த பெண்ணின் தாயான ரீடா செல்வராணி (வயது 50) தெரிவிக்கையில்,

நான் எனது மகள் மற்றும் பேரப்பிள்ளையுடன் கற்பிட்டியிலுள்ள அரச வைத்தியருடைய தனியார் வைத்தியசாலைக்கு சென்றோம்.

மகளுக்கு கருத்தடை ஊசி ஏற்றிக் கொள்வதற்காகச் சென்றோம். அங்கு சென்ற பின்னர் எனது மகள் கைக்குழந்

19-ம் பக்கம் பார்க்க

## இலங். படையினருக்கான பயிற்சியைக் கண்டித்து இந்தியக் கடற்படை அலுவலகம் முற்றுகை

(சென்னை)

இலங்கை கடற்படைக்கு பயிற்சி கொடுப்பதை கண்டித்து, அவர்களை வெளியேற்றக் கோரி தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் நேற்று சென்னையில் உள்ள இந்திய கப்பற்படை அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம் நடைபெற்றது.

தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் தலைவர் ஆனூர் ஜெகதீசன் தலைமையில் இந்த போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தின்போது பேசிய அவர்,

இலங்கையில் நடந்த போரின்போது இந்திய அரசு 2009-ம் ஆண்டு இலங்கைக்கு ஆயுத உதவிகளை செய்து தமிழர்களுக்கு துரோகம் இழைத்தது.

இதனை மகிந்த ராஜபக்ஷவே வெளிப்படையாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான போருக்கு இந்தியா உதவிசெய்யவில்லை போரை நடத்தியதே இந்திய அரசு தான் என்று கூறினார்.

நேரு காலத்தில் இருந்தே

19-ம் பக்கம் பார்க்க

## தீயில் எரியுண்ட பெண் மரணம்

(கரவெட்டி)

எரிகாயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வந்த இளம்பெண்ஒருவர்நேற்றைய தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு மணற்காடு குடத்தனை பகுதியைச் சேர்ந்த யுனதாஸ் மேரி யுவிதா (வயது 23) என்ற ஒரு பிள்ளையின் தாயே உயிரிழந்துள்ளார்.

கடந்த 3ஆம் திகதி எரிகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில்

20-ம் பக்கம் பார்க்க


up to 25% CONDITIONS APPLY
Special offer
நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் விலைக்கழிவு.
For Quality Tiles & Sanitaryware
Ranjanas CERAMIC
# 212, Palaly Road, Jaffna / #05, Stanley Road, Jaffna.
Tel:- 021 222 0033 / 021 222 4777


## கடற்புலிகளின் முதுகெலும்பை முறித்தது நானே!

### மார்தட்டுகிறார் ரணில்

(கொழும்பு)

ராஜபக்ஷ அரசாங்கம் விடுதலைப் புலிகளைத் தனியே வன்னியில் இருந்து மட்டுமே அழித்ததே தவிர, அவர்களை கிழக்கில் இருந்து விரட்டி, கடற்புலிகளின் முதுகெலும்பை முறித்தது தாமே என்று ஐதேக தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஐ.தே.க தலைமையகமான சிறிகொத்தாவில் நடந்த அரசாங்க அச்சகப் பணியாளர் சங்கத்தின் 46வது ஆண்டு விழாவில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"ஐதேகவும் ஒரு போரை நடத்திக்கொண்டே, நீர் மின் சக்தி, [illegible]த்தொழில், வீடமைப்புத் துறைகளில் பாரிய திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

ஆனால், ராஜபக்ஷ அரசாங்கத்தைப் போன்று கடனுக்குள் நாம் நாட்டை தள்ளி விடவில்லை.

இந்தக் கடனை, பிறக்கப் போகும் தலைமுறைகளால்

19-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**மனத் தளர்வா?**
**தனிமையா?**
**தற்கொலை எண்ணமா?**

உங்களுக்காக நாங்கள் இருக்கின்றோம்.
உடனே அழையுங்கள்.
இரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

**கைகொடுக்கும் நண்பர்கள்**
**021 222 8117**

(C-5832)

## த.தே.கூட்டமை...

ருந்தார். அவ்வாறு கூட்டமைப்புடன் சேரும் எண்ணம் எமக்கில்லை. எமது கட்சியை அழிப்பதற்கு பிரபாகரனால் உருவாக்கப்பட்டதே கூட்டமைப்பு ஆனால் அவர்களால் எமது கட்சியினைஒன்றும்செய்ய முடிய வில்லை.

நான்பார்த்த வரையில் மூன்று கூட்டமைப்பு இருக்கின்றன. ஆரம்பத்தில் கூட்டமைப்பின் மாவை சேனாதிராசா தலைமையில் ஒரு கூட்டமைப்பு, பின்னர் இரண்டாவதாக வரதராஜப்பெருமாள் - சுரேஷ் பிரேமச்சந்திரன் இணைந்த கூட்டமைப்பு, மூன்றாவது ஈ.பி.டி.பியை அழிப்பதற்கு பிரபாகர னால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு என்றும் தெரிவித்தார்.

இதேவேளைதான நிரபராதி என்பதனை நீதிமன்றத்தி னூடாக நிரூபிப் பேன் என்று கைதுசெய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டுள்ள கந்தசாமி கமலேந்திரன் தனது சட்டத்தரணி மூலம் தனக்கு கடிதம்ஒன்றை அனுப்பியுள்ளதாகவும்.

தான் திட்டமிட்டு பழிவாங்கப்பட்டுள்ளேன் என்றும் கட்சிக்கும் உங்களுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதத்தில் நான் செயற்படவில்லை என்றும் கமலேந்திரன் தனது சட்டத்தரணி மூலம் தனக்கு தகவல் அனுபபியுள்ளார் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (செ-6)

## 2014 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தை பார்வையிடல்


வலி தென்மேற்கு பிரதேசசபையின் 2014ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தினை பிரதேசசபைத் தலைமை அலுவலகம் மற்றும் மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் ஆகிய உப அலுவலகங்களிலும் வலி தென் மேற்கு பிரதேச செயலகம், சண்டிலிப்பாயிலும் 26.12.2013 தொடக்கம் 01.01.2014 வரை அனைவரும் பார்வையிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவித்துக்கொள்ளலாம்.

திரு. ச. சிவகுமாரன்
தவிசாளர்,
வலி தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

(C-5988)

## மரண அறிவித்தல்

### திருமதி சுரேஸ்குமார் சிவலோஜினி



கலைவாணி வீதி, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுரேஸ்குமார் சிவலோஜினி 24.12.2013 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சுரேஸ்குமாரின் (உரிமையாளர் செல்வா எலக்றிக்கல்ஸ், திருநெல்வேலி) பாசமிகு மனைவியும் பிரணவி (யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை தரம் 3 மாணவி), மஹிஷா (யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை முன்பள்ளி மாணவி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆ.த.ஜெயராஜா (ஓய்வுபெற்ற அதிபர்) பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மகளும், தயாபரன், வித்தியாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் செ.செல்வரத்தினம் (ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர்) அன்னபாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகளும், கந்தசாமி-கனகேஸ்வரி, நாகேஸ்வரி-வைரமுத்து ஆகியோரின் பெறாமகளும், சாந்தகுமார், திவாகர், ஜெனிபஜீன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25.12.2013 (இன்று) புதன் கிழமை முற்பகல் 10.00 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பண்டத்தரிப்பு, விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் : செ.சுரேஸ்குமார் (கணவர்)
(உரிமையாளர் செல்வா எலக்றிக்கல்ஸ்,
திருநெல்வேலி)
0777 113 884

(5145)

## பத்தி மலர்க் காணிக்கை



திருமதி
**தம்பு செல்லமுத்து** (தம்பு ரீச்சர்)
(ஓய்வுபெற்ற கனிஷ்ட அதிபர், யா/மீசாலை வீரசிங்கம் ம.வி)
திதி : 25.12.2013

இணையில்லா வாழ்வை எமக்களித்து
குடும்பத்தில் அனைவரையும் உயரவைத்து
வாழ்வாங்கு வாழ வழி அமைத்து
வீரசிங்கம் பள்ளிதனில் குருப் பணி ஏற்று - நீங்களும்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து - இன்று
இறையடி சேர்ந்து பதினொரு ஆண்டுகள் சென்றாலும்
இறையருளில் திளைத்த தங்களுக்கு மலர்க்காணிக்கை
செலுத்தி வணங்குகின்றோம் அம்மா............
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மலர்வு 29.04.1940
உதிர்வு 26.12.2002

'திருவேரகம்'
அல்லாரை, மீசாலை.

கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவுகள்.

(5142)

**NORTH LEAD**

**COMPUTER & ACCESSORIES WHOLESALER, COMPUTER REPAIRING & SERVICES, COMPUTER AND LANGUAGE CLASSES, COMPUTER PRINTING & DESIGNING, TECHNOLOGY A/L 2016 CLASSES**

Tel : 021-222 4459, 0772533390, 0774192275, Fax : 021-222 4460

**DIPLOMA IN ACCOUNTING PACKAGE AND SOFTWARE DEVELOPMENT**

அரச, தனியார்துறை ஊழியர்கள், உயர் வகுப்பு, பல்கலைக்கழக, தொழில்நுட்பக் கல்லூரி மாண-வர்கள் மற்றும் கணக்கியல் துறை சார்ந்த அனைவருக்குமான Quick-books, Tally, Sage Peachtree என்பவற்றைக் கொண்ட கற்கை நெறிகள் மூன்று மாத காலத்தில் விரிவான முறையில் பயிற்றுவிக்கப்படும்.

விஷேட மென்பொருள் வடிவமைத்தல் பயிற்சி வகுப்புக்கள் பிரபல மென்பொருள் வடிவமைப்பாளர்களின் மூலம் உங்களுக்காக ஆரம்பித்துள்ளோம். பிரத்தியேகமான முறையில் தனியாகவோ அல்லது குழுவாகவோ மூன்று மாத காலத்தில் பயிற்றுவிக்கப்படும்.

**SINHALA & ENGLISH CLASSES**

அரச, தனியார் உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் A/L முடித்தவர்கள், அரசமொழி சிங்கள பரீட்சைக்குத் தோற்ற இருப்பவர்களுக்கான மிகவும் இலகு முறையில், குறுகிய காலத்தில், குறைந்த கட்டணத்தில் பயிற்சியினை முடித்துக் கொள்ள. மூன்றே மாதங்களில் மொழியை இலகுவாக எழுத, வாசிக்க, பேச, ஆரம்பத்தில் இருந்து அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும்.. பரீட்சை முடிவுகளின் பின்னர் சான்றிதழ்களும் வழங்கப்படும்..

**TECHNOLOGY CLASSES A/L 2016**

தொழில்நுட்ப பிரிவு A/L 2016

- Bio System Technology. (உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்)
- Engineering Technology. (பொறியியல் தொழில்நுட்பம்)
- Science for Technology. (தொழில்நுட்பத்துக்கான விஞ்ஞானம்)
- Agriculture & Science. (விவசாய விஞ்ஞானம்)
- Information Communication Technology... (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்)

ஆகிய கற்கை நெறிகளுக்கான வகுப்புகள் யாவும் தகுதி வாய்ந்த தொழில்நுட்பத்துறை சார்ந்த பட்டதாரி ஆசிரியர்களினால் முழுமையான செய்முறைப் பயிற்சிகள், Multymedia உடன் கூடிய விளக்கங்களுடனும் யாழ் நகரில் முதல் முறையாக எமது நிறுவனத்தில் ஆரம்பமாகவுள்ளது.

**ஆரம்பம்: 04.01.2014 சனிக்கிழமை 25.12.2013இல் இருந்து அனுமதிகளை பெற்றுக் கொள்ளலாம்..**

**INTEL DUAL CORE 3RD GEN, FULL SET**

Intel Dual Core 3rd Gen Processor
Intel 61, I-7 Support Mother Board
500 GB Toshiba Hard Disk
2GB DDR III Kingstan Ram
24x LG or Samsung DVD Multy Recorder
Porch ATX High End Casing
19"Samsung, V.Sonic, LG Or AOC LED
650W Techfine UPS (AVR Inbuild)
Computer Table
2.1 Woofer, Keyboard, Mouse & Pad..
Rs : 51,850/=, I-3 Fullset : 58,650/=

**COMPUTER ACCESSORIES SALES**

Intel 61 Mother Board: 7900
Intel Dual Core Processor: 8450
Intel Core I-3 Processor: 16500
500GB Toshiba Hard Disk: 7700
1 TB Toshiba Hard Disk: 10750
1 TB Western Digital H.Disk: 11250
Porch ATX High End Casing: 2750
2GB DDR-III Kingstan Ram: 3500
4GB DDR-III Kingstan Ram: 5900
24x Samsung & LG Dvd Writer: 2650
650W Techfine UPS Avr Inbuild: 4450
1200W Techfine UPS Avr Inbuild: 9250
19" Samsung, HP LED Monitor: 12750
19" View Sonic, LG, AOC LED: 12350

**FACILITIES :** Computer Environment Lab, Computerized Base Instruction, Installment Payment, Flexible Time Schedule, Supporting Material for Learning, Multymedia Lecture Hall, E-Library System

Head Office : # 328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Branch : # 12, Kanagapuram Road Kilinochchi (பாரதி ஹோட்டல் அருகில்)

**SCIENCE HALL & அமுதன் கல்வி நிலையம்**
**(வைத்தியசாலை முன்பாக)**

சிவநகர் 7 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு

**தரம் 3 தொடக்கம் A/L வரையான அனைத்து வகுப்புகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்**

2016 இற்கான A/L விஞ்ஞான/ கணிதப் பிரிவு

ஆரம்பம் 26.12.2013 நேரம் காலை 9.00 மணி

உயிரியல்-A .டில்சான் (B.Sc) வ.வஜிந் (B.Sc HONS)
பௌதீகவியல்:-T.தேவதாஸ் (B.Sc MED) SLES)
S.K.கைறேகன் (B.Sc HONS)
இணைந்த கணிதம்:-K. சுதன் (B.Sc, M.Sc)
S. மயூரன் (B.Sc)
இரசாயனவியல்:- K. வாணிமுகுந்தன் (B.Sc,M.Sc)
S. மகேஸ்வரன் (பிரபல ஆசிரியர் SP.Trd.Sci)
விவசாய விஞ்ஞானம் :- N. சாந்தகிரி (SP.Trd. Agri)

**கலைப் பிரிவு 2016**

தமிழ் S.S மோகன் ( BA HONS)
இந்துநாகரிகம் S. துஸ்யந்தன் (பிரபல ஆசிரியர்)
புவியியல் T. கேசவன் BA HONS
வரலாறு R.R. ஆனந்தன் ( BA FINAL)
அரசியல் S. சந்திர்குமார் ( BA HONS)

- 2014, 2015 க்கான விஞ்ஞான, கணித, கலைப் பிரிவு வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
- தரம் 3 தொடக்கம் 11 வரையான வகுப்புக்கான அனைத்து பாடங்களும் வழமையான ஆசிரியர் குழாமால் கற்பிக்க ப்படுகின்றது.
- தரம் 5 க்கான புலமை பரீட்சை விசேட வகுப்புக்கள் நடைபெறுகிறது.
- அனைவருக்குமான சிங்கள வகுப்பும் நடைபெறுகின்றது.

(5131) நிர்வாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## தவறான பாடம்!

ஒரு ஊரிலே ஒரு நபர் இருந்தார்.

அவனுக்குக் கடவுள் பக்தி மிகவும் அதிகம்.

அடிக்கடி கோயிலுக்குப் போவார். கடவுளை மன்றாடுவார்; அதன்பின் காட்டுக்குப்போவார்; விறகு வெட்டுவார்; அதைக் கொண்டு போய் விற்பனை செய்வார்.

ஓரளவுக்கு வருமானமும் அவரை அணுகியது.

அதை வைத்துக் கொண்டு நிம்மதியாக வாழ்க்கை நடத்தினார்.

ஒரு நாள் வழமை மாதிரி அவர் காட்டுக்குப் போகும்போது அங்கே ஒரு நரியைப் கண்டார்.

அந்த நரிக்கு முன்னங்கால் இரண்டுமே இல்லை. ஏதோ விபத்திலே இழந்து விட்டது போல இருக்கு. அது பாட்டுக்கு ஒரு மரத்தடியிலே உட்காந்திருந்தது.

அதை அவர் பார்த்தார்.

அப்போது அவர் மனசுக்குள்ளே ஒரு சந்தேகம்...

"இந்த நரிக்கு இரண்டு காலும் இல்லை... அப்படி இருக்கும் போது இது எப்படி வேட்டையாடி தன்னுடைய பசியை போக்கிக் கொள்ள முடியும்?"

இவ்வாறு யோசிக்க ஆரம்பித்தார்.

இப்படி யோசித்துக் கொண்டு இருக்கும் போது அந்தப் பக்கமாக ஒரு புலி பயணித்தது...

அதைப் பார்த்தவுடனே இவர் ஓடிப்போய் ஒரு மரத்துக்குப் பின்னால் ஒளிந்து கொண்டார். நடப்பவற்றை அவதானிக்க ஆரம்பித்தார்.

அந்தப் புலி என்ன செய்தது என்றால்... ஒரு பெரிய மானை அடித்து இழுத்துக் கொண்டு வந்தது... அதை சாப்பிட்டது...

சாப்பிட்டது போக மீதியை அப்படியே அங்கேயே போட்டு விட்டுச் சென்றது.

[illegible] சென்ற பின்னர் காலில்லாத அந்த நரி மெதுவாக நகர்ந்து அதை அண்மித்து வந்தது.

மிகுதியாக இருந்ததை சாப்பிட்டது... திருப்தியாக இருந்தது.

இவ்வளவையும் மரத்துக்குப் பின்னாடி ஒளிந்து கொண்டிருந்த அந்த நபர் கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இப்போது அவர் யோசிக்க ஆரம்பித்தார்.

"இரண்டு காலும் இல்லாத ஒரு வயதான நரிக்கே ஆண்டவன் சாப்பாடு போடுகிறான்... அப்படி இருக்கும் போது... தினமும் கோயிலுக்குப்போய் சாமியை வழிபடும் நமக்கு சாப்பாடு போடாமல் விட்டு விடுவானா? நமக்குக் கடவுள் பக்தி அதிகம். நாம் எதுக்கு அநாவசியமாக வெயிலிலும் மழையிலும் கஷ்டப்பட வேண்டும். எதற்காக வேர்வை சிந்தி விறகு வெட்ட வேண்டும்?" என யோசித்தார்.

அதன்பின்னர் அவர் காட்டுக்கே போகவில்லை.

கோடாலியை தூக்கியெறிந்து விட்டார்.

பேசாமல் ஒரு மூலையிலே உட்காந்து விட்டார்.

அப்பப்போ கோயிலுக்கு மட்டும் போயிட்டு வருவார்.

"[illegible]டவுள் என்னைக் காப்பாற்றுவார்... அவர் நமக்கு வேண்டிய[illegible]ணவைக் கொடுப்பார்" அப்படியென்று நம்பினார், கண்ணை மூடிக் கொண்டார்.

கோயில் மண்டபத்தின் ஒரு தூணிலே சாய்ந்து உட்கார்ந்து கொண்டார்..

நாட்கள் நகர்ந்தன. சாப்பாடு வந்த பாடில்லை!

இவர் பசியாலே வாடிப்போனார். உடம்பு இளைச்சுப் போனது. எலும்பும் தோலுமாக உடல் வெளிப்பட்டது.

ஒரு நாள் இரவு நேரம். கோவிலிலே இவரைத் தவிர யாருமே இல்லை. இவர் மெதுவாக கண்ணைத் திறந்து கடவுளைப் பார்த்தார்...

"ஆண்டவா... என்னுடைய பக்தியிலே உனக்கு நம்பிக்கையில்லையா...? நான் இப்படியே பட்டினி கிடந்து சாக வேண்டியது தானா? காட்டிலே அந்த நரிக்கு புலி மூலமாக சாப்பாடு கொடுத்தாய்! அதைப் பார்த்துவிட்டுத்தானே இங்கே வந்தேன்... என்னை இப்படி தவிக்கவிட்டாயே... இது நியாயமா?" என்று வேண்டினார்..

இப்போது கடவுள் வாயைத் திறந்து சுறலானார்..

"முட்டாளே! நீ பாடம் கற்றுக் கொள்ள வேண்டியது நரியிடமிருந்து இல்லை! புலியிடமிருந்து!" என்றார்.

இப்படி ஒரு கதையை நம்ம பெரியவங்க சொல்றது உண்டு.

இதே மாதிரித்தான் நாமும் வாழ்க்கையிலே பல சந்தர்ப்பங்களில் தவறான பாடங்களைக் கற்றுக் கொள்கிறோம். அல்லது சரியாக படித்தாலும் பிழையாக அர்த்தம் புரிந்து கொள்கிறோம். அதனாலே தான் வாழ்க்கையிலே நிறைய குழப்பங்களை சந்திக்க வேண்டியிருக்கிறது.

ஒரு சிறிய பையன்.

ஒரு பூனையைப் பிடித்து... அதன் காதிலே பாலை ஊற்றிக் கொண்டிருந்தான்.

அவனது தகப்பன் அதைப்பார்த்துவிட்டுத் திட்டினார்..

"டேய்...! அந்த வாயில்லா ஜீவனை ஏண்டா கஷ்டப்படுத்துகிறாய்?" என்று கத்தினார்.

"வாயில்லா ஜீவன் என்று நீங்கள் தானே சுறுகின்றீர்கள்...! அதனாலேதான் அதன் காதிலே பாலை ஊற்றுகிறேன். குடிக்கட்டும்" என்றான்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# நவி அம்மையின் அறிக்கைக்கு பின்னரே இலங்கை அறிக்கையை முன்வைக்கும்

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு

ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைப் பேரவையில் எந்தவொரு சவாலையும் எதிர்கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் தயாராகவே இருக்கின்றது. இலங்கைக்கு எப்போதும் உதவி செய்துவரும் சீனா, ரஷ்யா, கியூபா, அல்ஜீரியா போன்ற நாடுகள் இம்முறை ஐ.நா. மனிதவுரிமைப் பேரவையில் இடம்பிடிக்கின்றமையின் காரணமாக எமக்கு வலுவான நிலைமை மனிதவுரிமை பேரவையில் காணப்படுகின்றது என்று மனிதவுரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட தூதுவர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 25 ஆவது கூட்டத் தொடரில மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடரபில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளார்.

அந்த அறிக்கையை பார்த்த பின்னரே இலங்கை தனது அறிக்கையை முன்வைக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் 25 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் அது தொடர்பிலான இலங்கை அரசாங்கத்தின் தயார் நிலை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் இந்த விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

இம்முறை மனிதவுரிமைப் பேரவை அமர்வில் மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளமையின் காரணமாக அதனை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராகி வருகின்றது. அந்த அறிக்கை எவ்வாறு அமையும் என்று எங்களுக்கு தெரியாது.

யுத்தத்துக்குப் பின்னரான இலங்கையை பொறுத்தமட்டில் இலங்கையானது பல்வேறு வகையான முன்னேற்றங்களை வெளிப்படுத்தி வருகின்றது. இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றும் செயற்பாட்டில் பாரிய முன்னேற்றத்தைக் காட்டியுள்ளோம்.

இந்நிலையில் எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னரும் பாரிய முன்னேற்றங்களை வெளிப்படுத்த எதிர்பார்க்கின்றோம். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் அமுல்படுத்திவருகின்றோம். பாதிக்கப்பட்ட வடக்கு பிரதேசங்களில் பாரிய முன்னேற்றங்களை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் முன்னெடுத்துள்ளது.

இந்நிலையில், யுத்தத்துக்குப் பின்னரான இலங்கையில் நாங்கள் முன்னேற்றத்தை வெளிப்படுத்தியுள்ளமையின் காரணமாக ஐ.நா. மனிதவுரிமைப் பேரவையில எவ்வகையான சவாலையும எதிர்கொள்வதற்கு தயாராகவே இருக்கின்றோம். இலங்கை தொடர்பில் எழுப்பப்படும் கேள்விகளுக்கும் பதிலளிப்போம்.

குறிப்பாக இம்முறை மனிதவுரிமைப் பேரவையில இலங்கைக்கு ஆதரவான நாடுகள் இடம்பெற்றுள்ளன. விசேடமாக சீனா, ரஷ்யா, கியூபா மற்றும் அல்ஜீரியா ஆகிய நாடுகள் எமக்கு உதவி செய்யும் நாடுகளாக உள்ளன. எனவே அந்த நாடுகளின் பிரசன்னம் எமக்கு வெகுவான வலுவை மனிதவுரிமைப் பேரவையில அளித்துள்ளது.

எனவே நாங்கள் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின்25 ஆவது கூட்டத் தொடருக்கு தயாராகிவருகின்றோம். எவ்வகையான நிலைமையையும் சவாலையும எதிர்கொள்ளவும் தயாராக உள்ளோம். காரணம் பாரியளவில் முன்னேற்றங்களை நாங்கள் வெளிப்படுத்தியுள்ளோம் என்றார்.

இம்முறை மனிதவுரிமைப் பேரவையின் 25ஆவது கூட்டத் தொடருக்கு இலங்கையிலிருந்து இவரின் தலைமையில் உயர்மட்ட தூதுக்குழு கலந்துகொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் 25 ஆம் திகதி ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பான தனது அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார்.

நவநீதம்பிள்ளை கடந்த வருடம் ஓகஸ்ட் 25 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த நிலையில் நாட்டின் மனித உரிமை நிலைமைகள் குறித்து மதிப்பீடுகளை மேற்கொண்டிருந்தார்.

அத்துடன் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்புக்களையும் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார். அந்தவகையிலேயே அவர் இலங்கை தொடர்பான அறிக்கையை மனிதவுரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இது இவ்வாறு இருக்க ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான விசேட அறிக்கையாளர் டாக்டர் சலோகா பெயானி இம்மாத ஆரம்பத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு வடக்கில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் ஆராய்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 60 - 100 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 100 | 100 |
| தக்காளி | 70 | 60 | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 20 | 20 | 30 | 40 |
| கரட் | 40 | 40 | 60 | 80 |
| பூசணி | 25 | 30 | 40 | 40 |
| புடோல் | 30 | 40 | 50 | 50 |
| வாழைக்காய் | 40 | 30 | 180 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 - 200 | 230 | 100 | 120 - 240 |
| பெரிய வெங்காயம் | 60 - 120 | 160 | 140 | 100 |
| பாகற்காய் | 150 | 160 | 30 | 160 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 20 | 30 | 50 | 50 |
| பயற்றங்காய் | 60 | 100 | 50 | 80 |
| லீக்ஸ் | 60 | 60 | 80 | 100 |
| பீற்றூட் | 50 | 60 | 50 | 80 |
| கறிமிளகாய் | 100 | 100 | 140 | 160 |
| முருங்கைக்காய் | - | - | - | 320 |
| போஞ்சி | 90 | 80 | 90 | 80 |
| கத்தரி தம்புள்ள | 50 | - | - | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 | 35 |
| தேசிக்காய் | 60 | 60 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40-50 | 40 | 30 - 40 |
| இராசவள்ளி | 120 | 120 | 80 - 140 | 150 |

# இராசி பலன்

25.12.2013

(மார்கழி 10, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு

அட்டமி பின்னிரவு 3.14 மணிவரை

உத்தரம் பிற்பகல் 3.59 மணிவரை

இராகுகாலம் 12.26-1.56 மணிவரை

சுபநேரம் 4.56-6.26 மணிவரை

**மேடம்** ஆரோக்கியமான நாள், ஆசைப்பட்ட பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பகைவர்கள் விலகுவர், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**இடபம்** திட்டமிட்ட காரியங்களில் மாற்றம் செய்யும் எண்ணம் உருவாகும், ஆரோக்கியத்தில் கவனமெடுக்க வேண்டிய நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மிதுனம்** மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், புதிய தகவல்கள் வந்து சேரும் நாள்.

**கடகம்** பெயரும் புகழும் கூடும் நாள், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், கூட்டு முயற்சிகள் வெற்றிதரும், உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன்வருவர்.

**சிங்கம்** வாக்கு மேன்மையுண்டு, எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** வெகுமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள், நண்பர்கள் உதவியுண்டு.

**துலாம்** சோம்பலை விலக்குவது நல்லது, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், பிதா சிந்தையுண்டு.

**விருச்சிகம்** தனதானிய சேர்க்கையுண்டு, உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், போசன நன்மையுண்டு, தொழில் நன்மையுண்டு.

**தனுசு** பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், அந்நிய தேசத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மகரம்** தொழிலில் மந்தநிலை காணப்படும், ஆன்றோர் சந்திப்புண்டு, பயணங்களால் நன்மையுண்டு, தந்தை வழி உறவினரால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**கும்பம்** எதிர்பாராத மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், போசன சுகமுண்டு, செலவுகள் அதிகரிக்கும், வேலைச்சுமை கூடும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**மீனம்** திடீர் பயணங்களால் நன்மையுண்டு, அபூர்வ சந்திப்புண்டு, முயற்சிகள் கைகூடும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மனோதைரியம் அதிகரிக்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்புலன்ஸ் படகு சேவை விரைவில் சீராக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் தற்போது கடமையில் ஈடுபட வேண்டிய வைத்தியர் விபத்துக்குள்ளாகி சுகயீன விடுமுறையில் இருப்பதனாலே அங்கு சேவை இடம் பெறவில்லையென பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேற்குறித்த பிரதேசத்தில் வைத்திய சேவை இடம் பெறாமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் விளக்கம் அளிக்கையில், நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் இரு வைத்தியர்கள் கடமையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இந்நிலையில், கடந்த வாரம் ஒரு வைத்தியர் விபத்துக்குள்ளாகி சுகயீன விடுமுறையில் உள்ளார். மற்றைய வைத்திய உத்தியோகத்தர் கடமையில் ஈடுபட்டு வந்தார்.

ஆயினும், அவ் வைத்திய உத்தியோகத்தர் அவசரமாக தமது சொந்த தேவை காரணமாக அவருக்கு விடுமுறை அனுமதிக்கப்பட்டிருந்தது.

இதற்கு மாற்று ஒழுங்காக வைத்திய உத்தியோகத்தர் ஒருவரை அப்பிரதேசத்தில் சேவையாற்ற ஏற்பாடு செய்யப்பட்டது.

அவர் கடமையைப் பொறுப்பேற்க கால தாமதம் ஏற்பட்டதனால் சேவை தடைப் பட்டுள்ளது. அவர் நேற்று முன்தினம் முதல் கடமையில் ஈடுபட்டுள்ளார்.

அத்தோடு அம்புலன்ஸ் படகு சேவையானது கியூ மெடிக்கா நிறுவனத்தினால் நிர்வாகிக்கப்பட்டு வருகின்றது. அச் சேவையும் இன்னும் ஓரிரு தினங்களில் நடைபெறும் என அந் நிறுவத்தினர் தெரிவித்துள்ளனர் என்றார். (அ-9)




# பயிற்சிகளுக்கு பதிவு செய்யலாம்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச விதாதா வள நிலையத்தில் இணையத்தள வடிவமைத்தல் (Website development) பயிற்சிநெறி நாளை வியாழக் கிழமை காலை 9.30 மணிக்கும் MS Office கணனி கற்கைநெறி எதிர்வரும் ஜனவரி மாதம் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

இதில் இணையத்தள வடிவமைத்தல் பயிற்சி நெறியில் பங்குபெற விரும்பும் மாணவர்கள் காலை 9:30 மணிக்கு நேரடியாக வகுப்பிற்கு சமுகமளிக்க வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

அத்தோடு MS Office கணனி பயிற்சி நெறியில் பங்கு பெற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 31ஆம் திகதி செவ்வாய்க் கிழமைக்கு முன்னர் விதாதா நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இறந்தவர்களை நினைவு கூரல்

(யாழ்ப்பாணம்)

அனர்த்தத்தின் போது இறந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வு நாளை வியாழக் கிழமை காலை 9.25 மணி முதல் 9.27 மணி வரையான நேரத்தில் மௌன அஞ்சலியுடன் ஆரம்பமாகவுள்ளது.

இதுவரை இதில் அனர்த்த அவசரபதிலுறுத்தல் மற்றும் முன்னாயத்த செயற்பாடுகளில் வினைத்திறனுடன் இணைந்து செயற்பட்டமைக்கான பாராட்டுச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார். (அ)

# சிசுக்கொலை தொடர்பில் பெண்ணொருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். உரும்பிராய் செல்வபுரம் தெற்கு பகுதியில் சிசுவொன்றின் சடலம் மீட்கப் பட்டமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் பெண்ணொருவரை கைதுசெய்துள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பெண் வைத்தியசாலைக்குச சிகிச்சை பெற்றுக்கொள்வதற்காக சென்றபோது சந்தேகத்தின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உரும்பிராய் செல்வபுரம் தெற்கு பகுதியைச் சேர்ந்த 24 வயதான பெண்ணொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உரும்பிராய் பகுதியில் எரிக்கப்பட்ட பின்னர் நிலத்தில் புதைக்கப்பட்ட நிலையில், சிசுவொன்றின் சடலம் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை மீட்கப்பட்டது.

இச்சிசு எரிக்கப்பட்டு பின்னர உரைப் பையினுள் சுற்றி நிலத்தில் புதைக்கப் பட்டிருந்தது.

இச்சிசுவின் சடலத்தை யாழ். நீதவான் நீதிமன்றத்தின் பதில் நீதவான் சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் கோப்பாய் பொலிஸார் மீட்டிருந்தனர்.மீட்கப்பட்ட சிசு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

கைது செய்யப்பட்ட அப்பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தனது கணவர் அவுஸ்திரேலியாவில் பணிபுரிவதாகவும் தானும் அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்காக படகில் சென்றபோது அப்படகு விபத்துக்குள்ளாகி இந்தோனேசியாவில் கரையொதுங்கியதாகவும் அவர் தெரிவித்தார்.

அங்கு தமது படகு முகவருடன் ஏற்பட்ட தொடர்பு காரணமாக தான் கர்ப்பமடைந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பெண்ணை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளதோடு தற்போது அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ-4)




# நியமனம் கோரி போராட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் கீழ் கடமையாற்றும் 126 பட்டதாரிப் பயிலுநர்கள் நேற்றுக்காலை 9 மணி முதல் பிரதேச செயலக வளாகத்தினுள் பணிப்பாளர் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் பட்டதாரி பயிலுநர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்ட போதிலும் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுகளில் கடமையாற்றும் தம[illegible] இதுவரை நியமனக்கடிதங்கள் வழங்கப்படவில்லை. இந் நியமனக் கடிதங்கள் வழங்கப்படும் வரை பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-9-29)

# அபிவிருத்தி செயற்பாடுகள் திருப்தியளிக்கவில்லை

**அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு**

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் வேலைத்திட்டங்கள், சேவைகள் திருப்தியளிக்கவில்லையென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகர சபையின் ஒளிவிழா நிகழ்வு நேற்று முன்தினம் மாநகர சபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர் யாழ்.நங்கையின் சிலையினையும் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாநகர சபையின் ஆட்சிப் பொறுப்பினை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஏற்ற பின்பு கடந்த கால வேலைத்திட்டங்கள், சேவைகள் திருப்தியளிக்கவில்லை. இருந்தாலும் பரவாயில்லை


இன்னும் 9 மாதங்கள் தேர்தலுக்கு. தேர்தலுக்காக நாங்கள் எதனையும் செய்பவர்களில்லை.

மக்களின் சேவைகளைக் கருத்திற் கொண்டு குறிப்பிட்ட காலகட்டத்துக்குள் பலருடைய ஆலோசனைகளையும் பெற்று நிறைவான சேவையினை வழங்க திட்டமிட்டுள்ளோம்.

மேலும் 2015 ஆம் ஆண்[illegible] மீண்டும் யாழ்.மாநகரசபையின் ஆட்சியினை பெறுவோம் என்ற நம்பிக்கையுள்ளது.

இந்த முறை செய்ய முடியாமல் போனவற்றை செய்ய வேண்டிய ஏனைய வேலைகளையும் முன்னெடுப்போம். பல வித்தியாசமான செயற்பாடுகளை முன்னெடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் உள்ளிட்ட மத குருமார்கள், வடக்கு மாகாணசபையின் பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஷ், யாழ். மாநகர சபையின் செயலாளர் செ.பிரணவநாதன் மற்றும் மாநகர சபையின் உறுப்பினர்கள், ஊழியர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)


அல்வாயூர் கவிஞர் நாடக மன்றத்தினர் நடத்திய கலாபூஷணம் மா. அனந்தராசன் அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் மா. நடராஜ சுந்தரம் கலாபூஷணம் மா. அனந்தராசன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் வடமாகாண சபை உறுப்பினர் வே. சிவயோகன் வாழ்த்துரை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும்

## ஆயர் இராயப்பு யோசப்பு கோரிக்கை



(மன்னார்)

மன்னார், திருக்கேதீஸ்வரம் பகுதியில் இதுவரை 10 இற்கும் மேற்பட்ட மனித எச்சங் கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்றுமுன் தினம் மாலை மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் மூன்றாவது நாளாக குறித்த மனித புதைகுழி உள்ள இடத்துக்கு சென்று பார்வையிட்டதோடு, எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை தோண்டி மனித எலும்புக் கூடுகளை மீட்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பொலிஸா ருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை மனித எலும்புக்கூடுகள் தண்ணீர்க்குழாய் இணைப்பு வேலைகளின் போது எதேச்சையாக கண்டு பிடிக்கப்பட்டமையை தொடர்ந்து குறித்த பகு திக்கு கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்கள் நீதவான் ஆனந்திகனகரட்ணம் சென்று பார்வையிட்டதோடு, இவர் முன்னிலை யில் மனித புதைகுழியை தோண்டும் பணிகள் இடம்பெற்றன.

இதன்போது 10 இற்கும் மேற்பட்ட மனித எலும்புக் 'கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. சில மனித எலும்புக் கூடுகள் துண்டு துண்டுகளாக மீட்கப்பட்டன. பல முழுமையாக மீட்கப்பட்டன.

இந்நிலையில் மனித எலும்புக் கூடுகள் தொடர்ச்சியாக கண்டு பிடிக்கப்பட்டு வருகின் றமையால் சட்ட வைத்திய நிபுணரின் ஆலோ சனையை பெற்றுக் கொள்ள வேண்டும் என மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி நீதவானின கவனத்திற்கு கொண்டுவந்தார்.

இந்நிலையில் சட்ட வைத்திய நிபுணருக்கு அழைப்பு விடுக்கப்பட்டதை தொடர்ந்து அநுரா தபுர சட்ட வைத்திய நிபுணர் ரரட்ண நேற்று முன்தினம் மாலை சம்பவ இடத்திற்கு வருகை தந்தார்.

மனித சடலங்களின் எச்சங்கள் வீதிக் கரைக ளில் இருப்பதால் வீதியில் அகழ்வு பணிகளை மேற்கொள்கின்றமையோடு அருகில் உள்ள காடுகளை அகற்றி பணிகளை தொடர வேண் டியுள்ளது என்று நிபுணர் தெரிவித்தார்.

இந்நிலையில் குறித்த வீதியில் அகழ்வு பணிகளை மேற்கொள்ள நடவடிக்கைகளை எடுக்குமாறும் வீதி அபிவிருத்தி திணைக் கள அதிகாரிக்கு உத்தரவிடப்பட்டது. குறித்த பகுதி களிலுள்ள காடுகளை துப்புரவு செய்ய போதி யளவு ஊழியர்களை தயார்ப்படுத்த மன்னார் பொலிஸ் அத்தியட்சகருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மனிதப் புதைகுழிகள் காணப்படுகின்ற குறித்த இடத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.30 மணி முதல் அகழ் வுகளை மேற்கொள்ள நடவடிக்கை களை எடுக்க உத்தரவிடப்பட்டமையோடு நேற்றுமுன்தினம் மாலை முதல் சனிக்கிழமை வரை குறித்த பகுதிக்கு உரிய பாதுகாப்புக்களை வழங்க வேண டும் என்றும் திடீர் என ஏற்படக்கூடிய மழை , வெயில் ஆகியவற்றில் இருந்தும் எச்சங்களை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை மீட்கப்பட்டுள்ள மனித எலும் புக் கூடுகள் இராணுவத்தினரால் போர்க்காலங் களில் கடத்தப்பட்டு காணாமற் போன தமிழ் உறவுகளின் எலும்புக் கூட்டு களாக இருக்கலாம் என மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வணக் கத்திற்குரிய இராயப்பு யோசப் ஆண்டகை சந்தேகம் வெளியிட்டுள்ளதோடு, இப் பாரிய மனித புதைகுழி தொடர்பில் சர்வதேச விசா ரணை அவசியம் வேண்டுமெனவும் வலியுறுத் தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில்,

போரின் போதும் போரின் பின்னரும் வடகிழக்கில் பெரு மளவிலான இளைஞர், யுவதிகள காணாமற் போயிருந்தனர்.

இவ்வாறு காணாமற் போன வர்களுக்கு என்ன நடைபெற்றது என்பது தெரியவில்லை. இராணு வம் கூட பலர் முன்னிலையில் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளைஅழைத்துசென்றது. அவர்களுக்கும் என்ன நடந்தது என்பது யாருக்குமே தெரியாது.

வடகிழக்கில் இதுபோன்ற பல மனிதப்படுகுழிகள் கண்டறி யப்பட்ட போதிலும் இவை தொடர்பில் முழுமை யான நீதி விசாரணை எவையும் இடம்பெறவில்லை.

அவை ஏதே ஒரு காரணத்தி னால மறைக்கப்பட்டு வந்ததோடு, விசாரணை களும் இடைநிறுத்தப் பட்டன.

ஆகையினால் இவை தொடர்பில் நம்பக ரமான சர்வதேச விசாரணையொன்று அவ சியம் என்றார் அவர். இவ்வாறு மீட் கப்பட்ட மனித புதைகுழியினால் மன்னாரில் பெரும்பதற்றம் நிலவி வருவதோடு, பலரிடையே ஒருவித அச் சநிலையையும் ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-4)

## எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருநாட்களாக எரிபொருள் இல்லை

(மல்லாவி)

ஒட்டுசுட்டானிலுள்ள முத்தையன் கட்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குரிய எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த இரண்டு நாட்களாக டீசல், மண்ணெண் ணெய், பெற்றோல் ஆகிய எரிபொருட்கள் இன்மையால் மக்கள் பல மைல் தூரத்திற்கு அப்பாலுள்ள எரிபொருள் நிலையத்தை நாடவேண்டிய அவலநிலைக்குட்பட்டுள் ளனர்.

கடந்த இரண்டு நாட்களுக்கு மேலாக எரிபொருட்களின் கையிருப்பு முடிவடைந்த நிலையில் நேற்று வரை சங்கத்தினால் அதற் கான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப் படாமையில், மக்கள் பல மைல் தூரத்திற்கு அப்பாலுள்ள முள்ளியவளைக்கும் மாங் குளத்திற்கும் சென்று எரிபொருளை பெற வேண்டிய துர்ப்பாக்கிய நிலையேற்பட் டுள்ளது. எனவே இது தொடர்பில் உரிய தரப்பினர் கவனமெடுத்து உதவ வேண்டு மென மக்கள் கோரிக்கையொன்றை முன் வைத்துள்ளனர். (அ-9-15)

## க.பொ.த. சா/தர பரீட்சையின் முன்னணிப் பெறுபேறுகள்

**யா/விக்னேஸ்வரக் கல்லூரி கரவெட்டி**

***கணிதப் பிரிவு***

தி.கஜகரன் -3ஏ, க.எழிலரசி- ஏ2பி, தி.பிரமிளா -3சி, செ.நிசாந்தன் -2சிஎஸ்.

***உயிரியல் பிரிவு***

அ.ராஜ்கரன் -ஏ2பி, தே.சத்தியா -2பிசி, க.கௌதமி -பி2சி, செ.திங்கரன் -3சி.

***வர்த்தகப் பிரிவு***

அ.தேவகமால்- 2ஏசி, க.தேன்மொழி- ஏ2சி.

***கலைப் பிரிவு***

த.சிந்துஜா- ஏபிசி, ந.லக்சிகா -2பிசி, ந.அருணிகா- ஏ2பி, ந.தேவிகா -ஏபிசி, செ.விதுர்சன் -2பிசி, த.செவ்வந்தி -ஏ2பி.

**யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்**

***வர்த்தகப் பிரிவு***

சி.மதீசன்- 2ஏபி, வீ.நிலக்ஷன் -ஏபிசி, க.கலைச்செல்வன் -2பிசி.

***கலைப் பிரிவு***

வி.தர்சினி- ஏபிசி, இ.துவாரகா- ஏ2சி, இ.வஸ்மியா- ஏ2சி.

**யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்**

***கலைப் பிரிவு***

க.லிந்துஜா-2ஏபி, த.குகராஜி-ஏபிசி, தே.தனுஜா-ஏ2சி,பு.யுனிற்றா- ஏ2சி, ஆ.ரஜீத்-3பி, ந.அனுஜா-2பிசி, அ.விஜந்தினி- ஏ2சி, கெ.றொசான்ந்-பி2சி.

***வர்த்தகப் பிரிவு***

ரா.பிரவீணா -பி2சி.


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து (V) நட்சத்திரம்: பரணி 3 கி.பா: 20உயரம்: 5'6" தகைமை/தொழில் A/L / Supper Market (UK - Not PR) தொ.இ: B/2688 | பிறப்பு: 1980 இந்து (V) நட்சத்திரம்: பூரம் 3 கி.பா: 56 செவ் 2 ல் உயரம்: 5' தகைமை/தொழில்: O/L, தையல் தொ.இ: G/711 |
| பிறப்பு: 1981 இந்து (V) நட்சத்திரம்: திருவாதிரை 1 கி.பா: 29 செவ் 8 ல் உயரம்: 5'8" தகைமை/தொழில்: A/L / தபால் ஊழியர் தொ.இ: B/2690 | பிறப்பு: 1972 இந்து (Pa) நட்சத்திரம்: ரேவதி கி.பா: 34 செவ் 4 ல் உயரம்: 5' தகைமை/தொழில்: ஆசிரியராக பணி புரிந்தவர். தற்போது அவுஸ்ரேலியாவில் (PR) தொ.இ: G/791 |
| பிறப்பு: 1977 இந்து (V) நட்சத்திரம்: மகம் 4 கி.பா: 70 ½ செவ் 1ல் உயரம்: 5'8" தகைமை/தொழில் O/L/ சொந்த வியாபாரம தொ.இ: B/2691 | பிறப்பு: 1981 இந்து (V) நட்சததிரம்: மகம் 4 கி.பா: 5 செவ் 12 ல் உயரம்: 5'3" தகைமை/தொழில்: A/L, Nursing, IELTS / தாதி அலுவலர் தொ.இ: G/792 |
| பிறப்பு: 1981 இந்து (V) நட்சத்திரம்: கார்த்திகை 4 கி.பா: 33 ¾ சூரி செவ் 2ல் உயரம்: 5'7" தகைமை/தொழில்: A/L / மேற்பார்வையாளர் (UK - PR) தொ.இ: B/2692 | பிறபபு: 1987 இந்து (Na) நட்சத்திரம்: பூரம் 3 கி.பா: 30 ½ செவ் 2 ல் உயரம்: 5'2" தகைமை/தொழில்: A/L தொ.இ: G/795 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இளைஞர் பாராளுமன்றின் ஐந்தாவது அமர்வுகள்

(மானிப்பாய்)

இளைஞர் பாராளுமன்றத்தின் ஐந்தாவது அமர்வுகள் எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் மகரகமவில் அமைந்துள்ள இளைஞர் பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளன.

இவ் அமர்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்த 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட அறிக்கையினை மையமாகக்கொண்டு விவாதம் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக இளைஞர் விவகாரம் மற்றும் திறன்கள் விவகார அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும கலந்து கொள்ளவுள்ளார்.

இரு நாட்கள் இடம்பெறவுள்ள இவ் அமர்வின் முதல் நாளின் சிறப்பு விருந்தினராக திறைசேரி செயலாளர் டீ.பி.ஜயசுந்தர, இரண்டாம் நாள் நிகழ்வின் தேசிய மொழி மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சகல உறுப்பினர்களும் அமர்வுகளில் தவறாது பங்குபற்றுமாறும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு முன்பாக ஒவ்வொருவரினதும் வருகைகளை மகரகம ஸ்ரீலங்கா யூத் மத்தியஸ்தானத்திற்கு வருகை தந்து உறுதிப்படுத்துமாறு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாட்டுப் பணிப்பாளர் மிலிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற அமர்வுகளில் தொடர்ச்சியாக பங்கேற்காதவர்கள் இளைஞர் பாராளுமன்ற உறுப்புரிமையிலிருந்து நீக்கப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-9-23)

# கல்வியாண்டு காலக் குறைப்புக்கு எதிராக மாணவர்கள் போராட்டம்




(பேராதனை)

இணைந்த சுகாதாரக் கற்கை நெறியில் பல்கலைக்கழகம் மேற்கொண்ட மாற்றத்தை கண்டித்து பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்றது. இணைந்த சுகாதார கற்கைநெறியின் கல்வியாண்டு குறைப்பினால் 4 வருட பட்டத்தில் உள்ள முக்கியமானதும் அவசியமானதுமான நடைமுறைக்குரிய சில பாடப்பிரிவுகளுடன் ஆராய்ச்சிக் கருத்திட்டத்தில் (Research) பங்குபற்றும் வாய்ப்புமமாணவர்களுக்கு கிடைக்கப் பெறுவதில்லை.


இதன் விளைவாக இணைந்த சுகாதார பட்டதாரிகளினால் பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டிய பரந்த சேவைக்கு வரையறைகள் அமைக்கப்பட்டு சுதந்திர சுகாதார சேவையினை பொதுமக்களுக்கு பெற்றுக்கொள்ள இருக்கும் உரிமையானது பறிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரமான சுகாதார சேவையை அனுபவிக்க சகல பொதுமக்களுக்கும் உரிமை உள்ளது. சுகாதார சேவையின் தரத்தை உயர்த்துவதற்கு இணைந்த சுகாதாரப் பட்டப்படிப்பை பாதுகாக்க வேண்டியது எம் அனைவரினதும் பொறுப்பாகும்.

அதற்காக நாம் அனைவரும் ஒன்றுபட்டு கற்கைநெறியின் கல்வியாண்டு காலக் குறைப்பைத் தடுத்து அனைத்து மாணவர்களுக்கும் 4 வருட இணைந்த சுகாதார பட்டத்தை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டிய காலம் பிறந்துள்ளது.

இதன் ஆரம்ப கட்டமாக பேராதனைப் பல்கலைக்கழக நுழைவாயிலில் சத்தியாக்கிரக போராட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இப்போராட்டமானது இப் பிரச்சினைக்கான தீர்வு கிட்டும் வரையில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்ப டுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (அ-36)





யாழ்.பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினர் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-கௌரிகாந்தன்)

# தின ஒழுக்கத்தில் சித்தமருத்துவம் கூறும் பருவ காலங்களும் ஆரோக்கிய உணவுப் பழக்கவழக்கங்களும்

நாம் குடியிருக்க ஏற்ற காலநிலை, வளமான மண், நல்ல நீர் இருந்த இடங்களில் தான் சிறந்த நாகரிகங்கள் தோன்றி வளர்ந்திருக்கின்றன. நம்மைச் சுற்றியுள்ள இயற்கை-வேதிம-உயிரியல் காரணிகள் (காற்று, வெப்பநிலை, வெயில், மழை, செடி-கொடி-தாவரங்கள், மரங்கள், நீர் போன்றவை) தான் நமது உடல் நலத்தையும் உயிர்ப் பிழைப்பையுங்கூட முடிவு செய்கின்றன. இப்படிப்பட்ட நல்ல சுற்றுச்சூழல்தான் இனி வரும் காலத்திலும் நம் வாழ்வைத் தீர்மானிக்கப்போகின்றன.

நமது உடல் நலத்திற்கு வருமுன் தடுப்பு எப்படியோ அப்படியே சுற்றுச் சூழலும் ஒரு கட்டாயத் தேவை. களங்கமுற்ற நீர், மொட்டையடிக்கப்பட்ட காடுகள், மாசுபட்ட மண் ஆகியவற்றை தூயதாக மீட்டுப் பெறுவது அவ்வளவு எளிதல்ல. தூயகாற்று, மண், வளிமண்டலம், நீர் இன்றி மனித இனம் உயிர்வாழ இயலாது. உயிர்ப்பளிக்கும் சுற்றுச் சூழலை சித்தமருத்துவம், அழகாக அண்டத்திலுள்ளதே பிண்டம் எனும் கோட்பாட்டிற்குள் உள்ளடக்கியுள்ளது.

அதாவது மனித உடலும் மண், நீர், காற்று, ஆகாயம், வளி எனும் ஐம்பூதங்களால் ஆனது. அதேபோல் உடம்பும் ஐம்பூதங்களால் ஆனது. எனவே சுற்றுச்சூழல் மாறுபாடுகள் நிச்சயமாக உடலில் மாற்றங்களை ஏற்படுத்தும்.

எனவே, நாம் ஆரோக்கியமாக வாழ வேண்டுமாயின் பருவகாலங்களான இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி காலங்களை அனுசரித்து உட்கொள்ளவேண்டிய, தவிர்க்க வேண்டிய உணவு முறைகளைக் கையாண்டு ஆரோக்கியத்தை பேணி வருதல்வேண்டும்.

தைப்பொங்கலுடன் ஆரம்பமாவது அதாவது தைமாதம் முதல் ஆனிமாதம் வரையுள்ள பகுதி உத்தராயணம் என்றும் ஆடிப்பிறப்புடன் ஆரம்பமாகும் அதாவது ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரையுள்ள ஆறுமாதகாலம் தட்சணாயனம் எனவும் அழைக்கப்படும்.

எனவே பருவகாலங்களுக்கு ஏற்ப வாத, பித்த, கப தாதுக்களின் விருத்தி குறைவுக்கு ஏற்ப நாம் உணவு முறைகளையும் பழக்க வழக்கங்களையும் மாற்றி அமைத்துக் கொள்ளல் அவசியமாகும். இளவேனிற் (சித்திரை-வைகாசி) காலத்தில் கபம் அல்லது நெய்ப்புத்தன்மை அதிகரிக்கும். எனவே, வறட்சியும் வெம்மையுமுள்ள கைப்பு, கார்ப்பு, துவர்ப்புச் சுவைகள் இக்காலங்களில் உபயோகிக்க வேண்டும்.

முதுவேனில் (ஆனி-ஆடி) மாதங்களில் வாதம் தன்னிலையிலிருந்து விருத்தியடைந்து கபம் தன்னிலையடையும். இதனால் நெய்ப்பும் குளிர்ச்சியுமுடைய இனிப்புச் சுவைகளை எடுக்கலாம். கார்காலத்தில் (ஆவணி, புரட்டாதி) இதில் இரு தாதுக்கள் குழப்பமடைகின்றன. அதாவது வாதம் வேற்றுநிலை விருத்தி (கூடியளவு அதிகரித்து) பித்தம் தன்னிலையில் விருத்தியடையவும் செய்கின்றன. எனவே, இக்காலத்தில் நெய்ப்பு, வெம்மையும் கலந்து பயன்படுத்த வேண்டும்.

எனவே, இனிப்பு, புளிப்பு, உப்புச் சுவைகளை உட்கொள்ளவேண்டும். கூதிர் காலத்தில் (ஐப்பசி, கார்த்திகை) பித்தம் வேற்றுநிலை விருத்தி (கூடியளவு அதிகரித்தல்), வாதம் தன்னிலையடைகிறது. எனவே, வறட்சியும் குளிர்ச்சியுமுடைய இனிப்பு,கைப்பு, துவர்ப்புச் சுவைகள் உபயோகிக்கத் தகுந்தவை.

முன்பனிக்காலத்தில் (மார்கழி, தை) வாதம் தன்னிலை அடைகின்றது. எனவே, நெய்ப்பும் குளிர்ச்சியுமுடைய, இனிப்பு, புளிப்பு, உப்புச் சுவைகளை பயன்படுத்தலாம். பின்பனிக்காலத்தில் (மாசி, பங்குனி) கபம் தன்னிலையில் விருத்தியடைவதால் நெய்ப்பும், குளிர்ச்சியுமுள்ள, இனிப்பு, புளிப்பு, துவர்ப்புச் சுவைகளை உபயோகிக்கலாம். பொதுவாக சித்திரை, வைகாசி வேப்பம்பூ பச்சடி, வேப்பம்பூ வடகம் பயன்படுத்தப்படுகின்றது. வேப்பம்பூ கபத்தை சமப்படுத்துவதுடன் புழுக்கொச்லி (Vermifuge) அதாவது கிருமிகளை அழிக்கும் தன்மை, இரத்தத்தை சுத்திகரிக்கும், கொழுப்பைக் கட்டுப்படுத்தும் தன்மை ஆகிய இயல்புகள் உண்டு.

சித்திரை பௌர்ணமியில் சித்திரைக் கஞ்சி பயன்படுத்தப்படுகின்றது. இதில் சிவத்தப் பச்சரிசியுடன் பல்வேறு காய்கறிகளையும் தேங்காய் முதலியன சேர்த்து கூட்டாஞ்சோறு சமைத்து பயன்படுத்துவார்கள். இந்த உணவு முறையில் உடலிலுள்ள பசித்தீ சாந்தமாகி உடலுக்கு குளிர்ச்சியையும் கொடுக்கும் ஒரு போசாக்குணவாகும். சிவத்தப்பச்சரியில் போலிக்கமிலமும் காணப்படும். இச்சத்து இரத்த, நரம்பு விருத்திகளுக்கு அவசியமாகும்.

வைகாசி மாதங்களில்தான் இலுப்பைப் பூக்களும் கிடைக்கும். இக்காலங்களில் இலுப்பைப்பூக்களை சேகரித்து உலர்த்தி சர்க்கரை சேர்த்து துவைத்து சாப்பிடலாம். இதனால் இரும்புச்சத்துக் கிடைப்பதோடு கபத்தைக் கட்டுப்படுத்தி ஆனி, ஆடி மாதங்களில் அதிகரிக்கவிருக்கும் வாதத்தையும் தன்னிலைப் படுத்தும். இலுப்பைப்பூ மலர ஆரம்பிக்கும் போது அதில் பிரக்ரோசு மிகுதியாக இருக்கும். நன்கு மலர்ந்ததும் அது குளுக்கோசாக மாறும். பூ உதிரும் போது அதில் சுக்குரோசு அதிகரிக்கும். இறுதியில் அது Inverted Sugar ஆக மாறும்.

ஆனி, ஆடி மாதங்களின் தொடக்கப் பகுதிகளில் வில்வம்பூக்கள் கிடைக்கும். இவ் வில்வம்பூக்களை பயன்படுத்தி கோப்பிப் பொடி தயாரித்து பயன்படுத்துவதால் ஜடராக்கினி எனும் பசித்தீயை சாந்தப்படுத்தி பசியைப் போக்கி, வாதத்தையும் சமப்படுத்தும்.

இதேபோல் இக்காலத்தில் கிடைக்கும் காத்தோட்டிக்காயை நெய்யில் பொரித்து பயன்படுத்துவதாலும் வாதத்தைச் சமப்படுத்தி ஜடராக்கினியையும் சாந்தப்படுத்தும். இதேபோல்தான் இக்காலங்களில் பயன்படுத்தும் ஆடிக்கூழுமாகும். இவ் இனிப்புச் சுவையுடைய ஆடிக்கூழானது அதிகரிக்க வாதத்தை கட்டுப்படுத்தும்.

இவ்வாறு இயற்கை நமக்குப் பல அரிய

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

மூலிகைகளையும் அவற்றின் பாகங்களையும் மனிதனின் ஆரோக்கியத்திற்கு ஏற்ற வண்ணமே வழங்குகின்றது. ஆனால் எம் மக்களுக்கு விழிப்புணர்வின்மையோ, மூலிகையின் பயன்பாடுகள் பற்றிய அறிவின்மையோ இயற்கையுடன் இணைந்து வாழ்வதில் ஏற்பட்ட நாகரிக வளர்ச்சியோ இவற்றின் தார்ப்பரியம் விளங்காமல் உணவு முறைகளை எமது சீதோஷ்ண நிலைக்கு மாறுபாடாகவே உண்டு ஆரோக்கியத்தைத் தொலைத்து விடுகிறார்கள். எனவே, இயற்கை தரும் மூலிகைகள் பற்றி அதி கவனம் எடுத்தல் மக்களின் கட்டாய தேவையாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மேய்ப்பனின் பிரகடனம் அரசியலமைப்பை மீறுகிறது

## சீறுகிறது தர்மபால பரம்பரை அமைப்பு

இலங்கையில் "ஈழம்" என்ற கத்தோலிக்க தனி இராச்சியத்தை ஏற்படுத்துவதற்கு கர்தினால் மல்கம் ரஞ்சித்தலைமையிலான கத்தோலிக்க சபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும், சர்வதேசத்துடனும் இணைந்து சதித்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது என்று "தர்மபால பரம்பரை" அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

எனவே, பாப்பரசரின் இலங்கை விஜயம் தொடர்பாக அரசாங்கம் மீள் பரிசீலனை செய்யவேண்டுமென்றும் அந்த அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

கொழும்பு விஜேராம மாவத்தையிலுள்ள சௌசிரிபாயாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தர்மபால பரம்பரை அமைப்பின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவ் அமைப்பு மேற்கண்டவாறு தெரிவித்தது.

இங்கு உரையாற்றிய இவ் அமைப்பின் ஏற்பாட்டாளர் அஸ்கிரிய பீடத்தின் முக்கியஸ்த தேரரான தம்மானந்த தேரர்,

கர்த்தினால் மெல்கம் ரஞ்சித் தலைமையிலான கத்தோலிக்க சபை அண்மையில் வெளியிட்டுள்ள "மேய்ப்பனின் பிரகடனம்" இலங்கையில் பிரிவினை வாதத்தை தூண்டும் விதத்திலும் அரசியலமைப்பை மீறும் விதத்திலும் அமைந்துள்ளது.

இப் பிரகடனத்தில் இலங்கை சிங்கள பௌத்த நாடல்ல என்றும் தமிழரின் தாயகக் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடிப்படையாக வைத்து சுயநிர்ணய உரிமை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்ற வாதத்திற்கு உயிரூட்டப்படுகிறது.

இன்று "மேய்ப்பனின் பிரகடனம்'' ஊடாக கூட்டமைப்புடனும் சர்வதேசத்துடனும் இணைந்து ஈழம் என்ற கத்தோலிக்க இராச்சியத்தை ஏற்படுத்தும் சதியை முன்னெடுத்துள்ளனர்.

இவ்வாறான சக்திகள் அரசாங்கத்தின் உயர் மட்டங்களுடன் நல்லுறவை பேணி வருவதோடு பலர் ஆலோசகர்களாகவும் உள்ளனர்.

இவர்கள் அன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கத்தை ஆட்சிப் பீடமேற்ற உழைக்காதவர்கள்.

எனவே, அரசாங்கம் இவர்கள் தொடர்பில் கவனமாக இருக்க வேண்டும்.

முன்னாள் பாப்பரசரும் பௌத்த மதத்தை கடுமையாக விமர்சித்து நூலொன்றை எழுதிய பின்னரே இலங்கை வந்தார்.

தற்போதைய பாப்பரசர் இலங்கை வருவதை எதிர்க்கவில்லை. ஆனால் மேற்கண்ட பின்னணிகளை அரசாங்கம் ஆராய வேண்டும்.

அது மட்டுமல்லாது அவரது இலங்கை விஜயம் தொடர்பாக மீள சிந்திக்க வேண்டும். கத்தோலிக்க சபை இவ்வாறான தொரு பிரகடனத்தை வெளியிட்டது தொடர்பில் மன்னிப்பு கேட்க வேண்டும்.

நாட்டின் அரசியலமைப்பை மீறி எவராலும் செயற்பட முடியாது. அனைவரும் அரசியலமைப்பிற்கு கட்டுப்பட்டவர்கள்.

இலங்கை சிறிய நாடு. அதுவும் சிங்கள பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழும் நாடு.

அவ்வாறானதோர் நிலையில் ஏன் இங்கு கர்தினால் ஒருவர் நியமிககப்பட வேண்டும் என்பது தொடர்பாக சிந்தித்து பார்க்க வேண்டும்.

இவ்விடயம் தொடர்பாக அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்த உத்தேசித்துள்ளோம்.

இந்து மதத்தை பாதுகாக்க செயற்பட்ட மகேஸ்வரன் மற்றும் ஆனந்த சங்கரியின் உறவினர்களின் பின்னணியிலும் இச்சபையே உள்ள தென றும் அவர் தெரிவித்தார். (அ-2)

## இலங்கையருக்கு சிறைத்தண்டனை

(டுபாய்)

இலங்கையை பிறப்பிடமாகக் கொண்ட அமெரிக்க பிரஜை ஒருவருக்கு டுபாய் நீதிமன்றம் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

ஐக்கிய அரபு இராச்சிய கலா சார விழுமியங்களுக்கு புறம்பான வகையில் செயற்பட்டமைக்காக இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க பிரஜை உள்ளிட்ட எட்டு பேருக்கு ஐக்கிய அரபு இராச்சிய நீதிமன்றம் ஒரு ஆண்டு சிறைத் தண்டனை விதித்துள்ளது.

காணொலி ஒன்றை குறித்த நபர்கள் இணையத்தில் உலவ விட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் நாட்டின் கலா சாரத்திற்கு குந்தகம் ஏற்பட்டுள்ளதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அவருக்கு 2 ஆயிரத்து 725 அமெரிக்க டொலர் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## மாநகர சபையில் மாதாந்த கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் மாதாந்தப் பொதுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெறுமென செயலாளர் சி.தா.தர்மரட்ணம் அறிவித்துள்ளார். (அ-2)

## மதுபான கடைகள் இன்று மூடப்படும்

(கொழும்பு)

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு நாடு முழுவதிலும் உள்ள சகல மதுபானக் கடைகளும் இன்று மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்படுகிறது.

கலால் திணைக்கள ஆணையாளர் நாயகம் வசந்த ஹபுவாரச்சிக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு மதிப்பளிக்காது கடைகளை திறக்கும் மதுபானக் கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு கடைகளை திறக்கும் நபர்களை கைது செய்யவிசேட தேடுதல் வேட்டை நடத்தப்படவுள்ளது. (அ-2)



யாழ்.கல்வி வலயத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒளிவிழா நேற்று முன்தினம் யாழ்.கல்வி வலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் மாணவிகளின் கலை நிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# வடக்கைச் சேர்ந்த மாணவர்களில் அதிகமானோர் பல்கலைக்கு தகுதி

## ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்தை ஒழித்து வடக்கில் சமாதான சூழலை உருவாக்கியதன் பிரதிபலனே தற்போது அங்கு ஏற்பட்டுள்ள கல்வி வளர்ச்சியாகும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்றுள்ள மாணவர்கள் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தனர். இதன் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

வடக்கில் இருந்து இம்முறை அதிகளவான மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்கு செல்லக் கூடிய தகைமைகளைக் கொண்டிருப்பது நாட்டின கல்வித்துறைக்குக் கிடைத்த வெற்றியாகுமென ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வடக்கில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு அங்கு சமாதானம் உதயமாகியுள்ளதோடு அதன் பிரதிபலனாக தற்போது வடக்கின் மாணவர்கள் கல்வியில் முன்னணியில் திகழ்கின்றனர். வரலாற்றில் முதல் தடவையாக க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பெருமளவிலான மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்கு தகைமை பெற்றிருப்பது வட மாகாணத்தில்தான் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

புத்தகங்களுக்குப் பதிலாக சயனைட் குப்பியை கழுத்தில் தொங்க வைத்து சிறுவர் படையணியில் சேர்க்கப்பட்ட வடக்கின் சிறுவர்கள் இனறு கல்வியில் சாதனை படைத்து வருகின்றனர்.

இது இந்த நாட்டின் கல்வித் துறை பெற்றுக் கொண்ட மாபெரும் வெற்றியாகும் என கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தெற்கிலுள்ள பாடசாலைகளுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் போல் எதுவித குறைவுமன்றி வடக்கிற்கும் பெற்றுக் கொடுக்கப் பட்டு வருகின்றன.

இம்முறை க. பொ.த. உயர் தரத்தில் அகில இலங்கை ரீதியில் ஒவ்வொரு பாடங்களிலும் அதிஉயர் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்கள் ஜனாதிபதியைச் சந்தித் துள்ளனர்.

அவர்களை ஜனாதிபதி வாழ்த்தியுள்ளதுடன் மக்கள் வங்கி தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான காசோலைகளை அந்த மாணவர்களுக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## இராமேஸ்வரம் மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்

(சென்னை)

கடலில் தவறிவிழுந்த கடற்படை வீரரை காப்பாற்ற உதவவில்லை என்று இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் கண்மூடித்தனமாக தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக இந்திய ஊடகச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இலங்கை கடற்படையினர் வழக்கம் போல கடல் எல்லையில் நேற்று முன்தினம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது, கப்பற்படைக்கு சொந்தமான படகில் இருந்த இராணுவ வீரர் தவறி கடலில் விழுந்துவிட்டார்.

அப்போது அந்தப் பகுதியில் மீன்பிடிக்க வந்த இராமேஸ்வரம் மீனவர்கள் இராணுவ வீரரைக் காப்பாற்ற முயற்சி செய்யவில்லை என்று கூறப் படுகிறது.

அதனை தொடர்ந்து மீனவர்கள் 4 பேர் மீது இலங்கை கடற்படையினர் திடீரென்று தாக்குதல் நடத்தினர்.

அப்போது, மீனவர்களின் படகை சேதப்படுத்தியும், அவர்கள் வைத்திருந்த வலையை கிழித்தும், மீனவர்களின் மீது கற்களை எறிந்தும் தாக்குதல் நடத்தினர்.

இதில் 20இற்கும் மேற்பட்ட மீனவர்கள் காயமடைந்தனர். அவர்கள அனைவரும் தற்போது, வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதற்கிடையே இலங்கை சிறையிலுள்ள 210 மீனவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி புதுக்கோட்டை மற்றும் காரைக் கால் பகுதியில் உள்ள சுமார் 54இற்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களை சேர்ந்தவர்கள் உண்ணாவிரத போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் இராமேஸ்வரம் மீனவர்கள் மீதான தாக்குதல் சம்பவம் மீனவர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. (அ-2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிபி சக்கரவர்த்தி!

முன்னொரு காலத்தில் சிபி என்ற ஒரு சக்கரவர்த்தி உசீனா தேசத்தை ஆண்டு வந்தான். அவன் மனிதர்களிடம் மட்டுமல்லாது, பறவைகள், மிருகங்கள் என அனைத்து உயிரினங்களிடமும் மாறாத அன்பு கொண்டிருந்தான். கருணைக்கும், கொடைத் திறனுக்கும் பெயர்பெற்ற மன்னர்களில் சிபி பலராலும் போற்றப்படுபவர். காரணம், அவனுடைய பரந்த மனமும், தயாள குணமும்தான். சிபியின் இந்த கீர்த்தி தேவலோகத்தையும் எட்டியது. தேவேந்திரன் சிபிச் சக்கரவர்த்தியை சோதிக்க விரும்பினான். அக்கினி பகவானையும் உடன் அழைத்துக்கொண்டு, தான் ஒரு கழுகு வடிவத்திலும் அக்கினி பகவான் ஒரு புறா வடிவத்திலும் பூமிக்கு வந்தனர். வேகமாக பறந்து வந்த கழுகு, புறாவைத் துரத்திக் கொண்டு வந்தது.

ஏழை எளியோருக்கு உதவுவதைத் தம் கைகளாலேயே செய்ய விரும்புபவன் சிபி. அன்று தம் நந்தவனத்தில் அப்படி ஏழைகளுக்கு உணவளித்து முடித்து அரண்மனைக்குத் திரும்ப நினைத்தபோது, சிபியின் கைகளில் ஒரு புறா வந்து விழுந்தது. அந்தப் புறாவின் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. என்னை எப்படியாவது காப்பாற்றுங்கள் என்று கேட்பதுபோல அதன் முகம் மிகவும் பரிதாபமாக இருந்தது. அரசனின் மடியில் அப்படியே



சுருண்டு கிடந்தது. அதனை ஆதரவுடன் கையில் எடுத்து தடவிக் கொடுத்தான். அப்போது ஒரு பெரிய கழுகு அவர்கள் முன்னால் வந்து நின்றது. சிபியின் மடியில் இருந்த புறாவை தம் கூரிய கால் நகங்களால், கவ்வி எடுத்துச் செல்ல முயன்றது. சிபி மன்னன் அதைத் தடுத்து நிறுத்தினான். புறா பயத்தில் மிகவும் நடுங்கிப்போனது. அப்போது ஒரு அதிசயம் நடந்தது.

அந்தக் கழுகு மனிதனைப்போலவே பேச ஆரம்பித்தது. அரசே, என்னுடைய இரையை நான் உண்பதை நீ ஏன் தடுக்கிறாய்? என்னைத் தடுக்காமல் அந்தப் புறாவை கீழே விட்டு விடு. நான் எடுத்துக் கொண்டு போகிறேன் என்று அதிகாரம் செய்தது.

நீ யார் என்றே எனக்குத் தெரியவில்லை. ஆனால், மனிதனைப் போலப் பேசும் உன் வல்லமை என்னை பெரிதும் வியப்படையச் செய்கிறது. எதுவானாலும் இந்தப் புறா தற்போது என் அடைக்கலமாக வந்திருக்கிறது. அதைக் காப்பாற்ற வேண்டியது என்னுடைய கடமை. ஆகவே, இந்தப் புறாவை விட்டுச் சென்றுவிடு.

நீ அதை எடுத்துச் செல்வதை என்னால் அனுமதிக்க முடியாது என்றான் சிபி.

உடனே அந்தக் கழுகு, அரசே உனக்கு எல்லா உயிரும் சமம்தானே. அப்படியிருக்க, என் இரையை உண்ணவிடாமல் என்னைத் தடுப்பது நியாயமில்லையே. நீ எல்லோருக்கும் நியாயம் சொல்ல கடமைப்பட்டவன். அப்படியிருக்க என்னையும் நீதானே காப்பாற்றவேண்டும்? பசியால் வாடும் என் நிலை என்ன? நான் பசியால் இறந்துபோக வேண்டுமா? என்று கோபமாகக் கேட்டது.

அந்தக் கழுகின் வாதம் நியாயமாகப்பட்டதால், சற்றே மனம் வருந்தி, அதனிடம் உனக்குத் தேவையான வேறு எது வேண்டுமானாலும் கேள். நான் அதைத் தருகிறேன். பாவம் அந்த புறாவை மட்டும் விட்டுவிடு என்று கூறினான்.

உடனே இதுதான் சமயம் என்று அந்தக் கழுகு. அரசே! எனக்கு மாமிசம் உடனே வேண்டும்! அது மனித மாமிசமாக இருந்தாலும் கூட பரவாயில்லை. என்னால் பசி தாங்க முடியவில்லை! உடனே உணவிற்கு ஏற்பாடு செய் என்றது.

சற்றே யோசித்த மன்னன் சிபி, உன் பசியைப் போக்க வேண்டியது என் கடமைதான். அதற்காக இன்னொரு உயிரைக் கொல்ல எனக்கு மனம் வரவில்லை. உனக்கு மாமிசம் தானே வேண்டும். இதோ இந்த புறாவின் எடைக்குச் சரியாக என் தொடையில் இருந்து சதையை வெட்டித் தருகிறேன். நீ உண்டு பசியாறலாம் என்று சொல்லி, உடனே சேவகர்களை அழைத்து தராசைக் கொண்டுவரச் சொன்னான். தராசில் ஒரு புறம் புறாவை வைத்துவிட்டு மற்றொருபுறம் தன் தொடையில் இருந்து சதையை கொஞ்சம் கொஞ்சமாக வெட்டி வைக்கிறான்.

ஆனாலும், அந்த தராசு இறங்கவே இல்லை. உடனே தானே ஏறி அதில் அமர்ந்த மறு நொடி தராசு சமநிலைக்கு வந்தது. அடுத்த நிமிடம் அந்த புறாவும் கழுகும் தங்கள் சொந்த உருவமான, அக்கினி தேவன் மற்றும் இந்திரனாகவும் மாறி, அவனை அன்புடன் தடவிக் கொடுக்க, அவன் தொடையில் சதை வெட்டி எடுக்கப் பட்டதால் ஏற்பட்ட ரணமும் மறைந்தே போனது. அரசன் மகிழ்ந்து அந்த தேவர்களிடம் ஆசி பெற்றான். அவர்களும் சிபிச் சக்கரவர்த்தி அனைத்து நலன்களும் பெற்று நீடுழி வாழ வேண்டும் என்று ஆசி கூறிச் சென்றனர்.

தம் உயிர் போலவே பிற உயிரையும் எண்ண வேண்டும். நம்மைவிட எளிய உயிர்களுக்கு இயன்றவரை நாம் அடைக்கலம் கொடுக்க வேண்டும். அதுவும் ஒரு தலைமைப் பதவியில் இருப்பவன் தன்னை நம்பி இருப்போருக்கு தன்னலமின்றி சேவை செய்வதோடு, தர்ம, நியாயம் தவறாமல் நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறதல்லவா?

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆




- 800-சார்மேன் புனித உரோமப் பேரரசனாக முடிசூடினான்.
- 1000- ஹங்கேரிப் பேரரசு முதலாம் ஸ்டீபனின் கீழ் கிறிஸ்தவ நாடாக உருவாக்கப்பட்டது.
- 1066-முதலாம் வில்லியம் பிரித்தானியாவின் மன்னனாக முடிசூடினான்.
- 1643-கிறிஸ்மஸ் தீவு கண்டுபிடிக்கப்பட்டு பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் ரோயல் மேரிக்கப்பலின்தலைவன்வில்லியம்மைநோர்ஸ் என்பவரால் இத்தீவுக்கு கிறிஸ்மஸ் தீவு எனப் பெயரிடப்பட்டது.
- 1741-ஆண்டர்ஸ் செல்சியஸ் தனது செல்சியஸ் வெப்பமானியைக் கண்டுபிடித்தார்.
- 1758-ஹேலியின் வால்வெள்ளி ஜொனான் பாலிட்ச் என்னும் ஜேர்மனியரால் அவதானிக்கப்பட்டது.
- 1868-அமெரிக்க உள்நாட்டுப் போரில் ஈடுபட்ட அனைத்து கூட்டமைப்புப் படைவீரர்களுக்கும் பொது மன்னிப்பை அமெரிக்க அதிபர் அண்ட்ரூ ஜோன்சன் அறிவித்தார்.
- 1914-முதலாம் உலகப்போர்:-ஜேர்மனிக்கும் பிரித்தானியாவுக்கும் இடையில் கிறிஸ்மஸ் தினம் போர்நிறுத்தம் நடைமுறைக்கு வந்தது.
- 1926-ஜப்பானின் டாயிஷோ மன்னன் இறந்தான். அவனின் மகன் ஹிரோஹிட்டோ அரசனானான்.
- 1941-இரண்டாம் உலகப்போர்:-ஹொங்கொங் மீதான ஜப்பானின் முற்றுகை ஆரம்பமாயிற்று.
- 1947-சீனக் குடியரசின் அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது.
- 1977-இஸ்ரேல் பிரதமர் பெகின் எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத்தை சந்தித்தார்.
- 1979-சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ்தானில் தனது படைகளை பெருமளவில் இறக்கியது.
- 1989-ருமேனியாவின் முன்னாள் கம்யூனிசத் தலைவர் நிக்கொலாய் செய்செஸ்குவுக்கும் அவரது மனைவிக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டனர்.
- 1990-உலகளாவிய வலையத் திட்டம் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.
- 1991-சோவியத் தலைவர் பதவியில் இருந்து மிக்கைல் கொர்பச்சோவ் விலகினார். அடுத்தநாள் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டது.
- 1991-உக்ரேன் சோவியத் ஒன்றியத்தில் இருந்து விலகியது.
- 2004- காசினி விண்கப்பலில் இருந்து சனிக் கோளின் சந்திரனான டைட்டானில் இறக்குவதற்காக ஹியுஜென்ஸ் என்ற சேய்க்கலம் விடுவிக்கப்பட்டது. இது ஜனவரி 14, 2005 இல் டைட்டானில் இறங்கியது.

### பிறப்புக்கள்

- 1642-ஐசக் நியூட்டன், ஆங்கில இயற்பியலாளர் மற்றும் கணிதவியலாளர் (இ.1727)
- 1876-முகமது அலி ஜின்னா, பாகிஸ்தானைத் தோற்றுவித்தவர் (இ.1948)
- 1906-ஏர்ணஸ்ட் ருஸ்கா ஜேர்மனிய இயற்பியலாளர், நோபல் விருதாளர் (இ.1988)
- 1924-அடல் பிஹாரி வாஜ்பாய், முன்னாள் இந்தியப் பிரதமர்
- 1949-நவாஸ் ஷெரீப், பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர்
- 1974-நக்மா, இந்திய நடிகை

### இறப்புக்கள்

- 1796-வேலு நாச்சியார், ஆங்கிலேயருக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண் போராளி (பி.1730)
- 1931-பா.வே.மாணிக்க நாயக்கர், அறிவியல் தமிழ் வளர்த்த தமிழறிஞர் (பி.1871)
- 1977-சார்லி சாப்ளின், ஹாலிவுட் நடிகர் (பி.1889)
- 1994-ஜெயில் சிங், முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் (பி.1961)
- 2006-தமிழோவியன், இலங்கையின் மலையகத்தின் மூத்த இலக்கியவாதியும் கவிஞரும்

### சிறப்பு தினம்

கிறிஸ்மஸ்- கிறிஸ்து இயேசுவின் பிறப்புவிழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளைக் கண்டு ஏன் பயம்?



ஆன்மீகம் 76

மாயாஜாலக் கதைகளும், அம்புலி மாமா கதைகளும் நமக்கு சகஜம். ஆனால், கேட்பதற்கு அம்புலிமாமா கதைபோல் தோன்றினாலும், சத்குரு வுக்கு தன் சிறுவயதில் ஏற்பட்ட சில விடயங்களை நம்மால் நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. இது சாத்தியம்தானா எனப் புரியவில்லை.

**சத்குரு:-** என் தாத்தா வீட்டில் ஒரு மாட்டுக்கொட்டகை இருந்தது. அங்கே இரண்டு மாடுகள் கட்டப் பட்டு இருக்கும். இருட்டில் பார்த் தால், மாடுகளின் கண்கள் மட்டும் பெரிய கோலிக் குண்டுகளாகத் தெரி யும். இரவுகளில் அதைக் காட்டி, கும்மா வந்திரும் என்று சொல்லி, என் அத்தைகள், மாமிகள் எல்லோரும் குழந்தைகளைப் பயமுறுத்திச் சாதம் ஊட்டுவார்கள்.

அதே மாட்டுக் கொட்டகையைக் காட்டி, சாதம் ஊட்டுவதற்காக என் னையும் பயமுறுத்த முனைந்தார்கள். அது கும்மா இல்லை, பசுமாடு என்று சொல்லிச் சிரித்தேன். அவர்கள் வாய டைத்துப் போனார்கள். அதுபற்றிப் பல நாட்கள் ஆச்சரியப்பட்டுப் பேசிக் கொண்டு இருந்தார்கள்.

எனக்கு ஏன் இருளைப் பார்த்து பயம் வரவில்லை? எளிமையான கார ணம்தான். மற்றவர்களுக்கு இருட் டில் மாட்டின் கண்கள் மட்டும் புலப் பட, எனக்கோ மொத்த மாடும் தெரிந் தது. அன்றைக்கே, இருளில் மற்றவர் களைவிடத் தெளிவாக என்னால் பார் க்க முடிந்தது. இருள் எனக்கு ஒரு போதும் பிரச்சினையாக இருந்ததில்லை.

எத்தனையோ முறை வனங்களில் சுற்றித் திரிந்திருக்கிறேன். 11 வயதில் ஒருமுறை மூன்றுநாட்கள் காட்டில் தனியாக அலைந்திருக்கிறேன். இரவு களில் பயன்படுத்த ஒரு தீப்பெட்டி கூட என்னிடம் கிடையாது. இருள் என் னிடம் நட்பாகவே இருந்திருக்கிறது.

மூன்று நாட்களுக்கு நான் வீடு திரும்பாததால், என்னைக் கண்டுபிடி க்க வீட்டில் பல முயற்சிகள் நடந்தன. ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டரும் என் னைத் தேடிக்கொண்டு இருந்ததாக அறிந்தேன். நான் வீடு திரும்பியபோது, எல்லோருக்கும் ஒரு கேள்விதான் பெரி



தாக இருந்தது. இரவுக்ளில் தூங்கு வதற்கு என்ன செய்தாய்? ஏதாவது பாழடைந்த கோயில் இருந்ததா?

இல்லை. இருட்டிலும் காட்டில் நடந்துகொண்டுதான் இருந்தேன். ஓய்வெடுக்க நினைத்தபோதெல்லாம் ஏதாவது ஒரு மரக்கிளையில் போய்த் தங்கினேன் என்றேன்.

அடப்பாவி! இருட்டைக் கண்டால் உனக்கு பயமாக இல்லையா? என்று கேட்டார்கள். என்னால்தான் இருட் டில் வெகு தெளிவாகப் பார்க்க முடிந் ததே... நான் பார்த்த எதுவும் என்னைப் பயமுறுத்துவதாக இல்லை என்றேன். என் அப்பா தலையில் அடித்துக் கொண்டார். ஐயோ, இந்தப் பையனு க்கு பயமே இல்லையே! இவனுக்கு என்ன ஆகப்போகிறதோ?

(தொடரும்)


**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# பிரியங்கா நளினியை மிரட்டினார்..?

***பக்கா விஜயா***

**கேள்வி:-** இத்தனை வருடச்சிறை வாழ்க்கையில் உங்கள் மனதை வெகுவாக பாதித்த சம்பவம் ஏதாவது?

**பதில்:-** இந்தச் சிறையில் பக்கா என்ற விஜயா என்று ஒரு கைதி இருக்கிறாள். கடந்த 24 ஆண்டுகளாக அவள் சிறையில் இருக்கிறாள். கழைக்கூத்தாடியான அவளது நடனத்தில் கவரப்பட்ட ஒருவர் அவளைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். ஆனால், அவரு டைய வீட்டில் சாதியைக் காரணம் காட்டி, இவர்களின் திருமணத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஊரை விட்டு விரட்டிவிட்டனர். அதன்பிறகு இருவரும் கழைக்கூத்தாட்டம் நடத்தி பிழைத்து வந்துள்ளனர். ஒருநாள்



இரவு ரோட்டோரத்தில் தூங்கிக்கொண்டி ருந்த அந்தப் பெண்ணிடம் ஒருவன் தவறாக நடக்க முயற்சி செய்துள் ளான். இதையடுத்து கணவன் மனைவி இருவரும் அவனைக் காலால் அடித்துவிரட்டி உள்ளனர். அதில் காயம்பட்ட அவன் இறந்து விட்டான். இவர்களை கைது செய்த பொலிஸ், இறந்தவனிடம் இருந்து 500 ரூபாயை திருடுவதற்காக இவர் கள் அவனைக்கொலை செய்தார் கள் என்று குற்றம்சாட்டி இரண்டு பேரையும் சிறையில் அடைத்துவிட்ட னர். கணவன் ஆண்கள் சிறையிலும் இந்தப்பெண் இங்கும் என இரண்டு பேரும் ஆயுள்தண்டனைக் கைதிகளாக இருக்கின்றனர். அந்தப் பெண் மன நிலை பாதிக்கப்பட்டு இப்போது ஒரு குழந்தையைப் போல் உளறிக்கொண்டி ருக்கிறாள். ஒட்டுமொத்த சிறைக்கும் அவள் செல்லப்பிள்ளை. அவளை விடுதலை செய்வதற்கும் விடுதலை யானவுடன் ஏற்[illegible] பகங்கள் தயா[illegible] சிறை நிர்வாகம் அவளை வெளியே அனுப்ப மறுக்கிறது.

இப்போது என்னுடைய விடுதலையை விட நான் அவளுடைய விடுதலைக் காகத்தான் அதிகமாக என் வழக்கறி ஞரிடம் கோரிக்கை வைத்துள்ளேன்.

**மிரட்டிய பிரியங்கா....**

**தொடரும் மர்மங்கள்**

**கேள்வி:-** மில்லியன் டொலர் கேள்வியாக இருக்கிறது பிரியங்கா- நளினி சந்திப்பு... என்ன நடந்தது அந் தச் சந்திப்பில்?

**பதில்:** அன்று சிறைச் சாலை வழக்கத்துக்கு மாறாக பரபரப்புடன் இருந் தது. திடீரென பரபரப்புக் கள் ஓய்ந்து பேரமைதி நிலவும்படி கட்டுப் பாடுகள் விதிக்கப்பட்டன. ஒட்டுமொத்த கைதிகளும் செல்களுக்குள் அடைக் கப்பட்டுவிட்டனர். யாருக்கும் எதுவும் புரியவில்லை. என்னை மட்டும் சிறைத் துறை கண்காணிப்பாளர் அவரது அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கு பிரியங்கா அமர்ந்திருந்தார். எனக்குச் சட்டென அடையாளம் தெரியவில்லை. ஆனால், எஸ்.பி. சொன்னதும் அதிர் ச்சியும் கொஞ்சம் பயமாகவும் இருந் தது. பிரியங்காவும் நானும் மட்டும் தான் அங்கு இருந்தோம். என் அச்சத்தை அதிகரிப்பதுபோல், பிரி யங்காவின் முகம் இறுக்கமாகவும் அவரது பார்வை கோபமாகவும் இருந் தது. என்னைப் பார்த்த உடனேயே, ஒரு பொலிஸ் அதிகாரியைப்போல் [illegible] தொனியில் விசாரி க்க [illegible]த்தார். கேள்விகள் மேல் கேள்விகள். தன் தந்தை கொல்லப் பட்ட அன்று நீ ஏன் அங்கு போனாய்? உனக்கு முதலிலேயே தெரியுமா? அவர்கள் உனக்கு எப்படிப் பழக்கம்? நோக்கம் என்ன? என்று வரிசையாகக் கேள்விகள் கேட்டார். அதற்கு நான் எனக்குத் தெரிந்த விவரங்களைக் கூறினேன். ஆனால், அந்தச் சந்திப்பில் நடந்த மற்ற விவரங்கள் மிகமிக முக்கியமானவை. ஆனால், அவற்றை சொல்வதற்கான நேரம் இது அல்ல. காலம் நினைத்தால் அதற்கான வாய்ப்பை எனக்கு வழங்கும். அப் போது அந்த விவரங்களை வெளி யிடுவேன்.

**விடுதலை பற்றி...**

**கேள்வி:** உங்கள் விடுதலை தள் ளிப்போனது பற்றி என்ன நினைக் கிறீர்கள்?

**பதில்:** இந்த வழக்கில் கைதாகி சிறையில் உள்ளவர்களில் விடுதலை யாவதற்கான வாய்ப்பு எனக்கு மற்ற வர்களைக் காட்டிலும் அதிகமாக இருந்தது. அதற்காக முன் விடுதலைக் குழு அமைக்கப்பட்டு பல கட்ட பரிசீலனைகளுக்குப் பிறகு என் விடுதலையை ஒப்புக்கொண்டனர்.

ஆனால், அப்போது இருந்த தி.மு.க. அரசாங்கம், ராயப்பேட்டை இன்ஸ் பெக்டரிடம் ஒரு அறிக்கை வாங்கி, நளினி வெளியே வந்தால் ராயப் பேட்டையில்தான் தங்குவார். அது வி.வி.ஐ.பி மற்றும் வி.ஐ.பி க்கள் நிறைந்த பகுதி. அதனால், அவர்களுக்கு ஆபத்து நேரிடலாம் என்று அறிக்கை கொடுத்தது. அதன் பேரில் என்னுடைய விடுதலை தடைப்பட்டுள்ளது. இது அரசியல் வழக்கு என்பதால்தான், இதில் தலையிட யாரும் விரும்பவில்லை. சிறையில் பிறந்த எனது குழந்தைக்கு மூன்று வயதாக இருக்கும்போது உடல்நலக் குறைவு ஏற்பட்டது. தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தான் அப்போதும் முதல்வராக இருந்தார். அவர் மனிதாபிமானத் துடன் நடவடிக்கை எடுத்து என்னு டைய குழந்தையின் உயிரைக் காப் பாற்றினார். அதுபோல் என்னுடைய விடுதலை விவகாரத்திலும் அவர் நடவடிக்கை எடுப்பார் என்று நம்பு கிறேன்.

-ஜூனியர் விகடன்- (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நத்தார் சிறப்

## ஒளி பெறுவோம்

குழந்தை ஒன்று பிறந்தது
குவலயமும் மகிழ்ந்தது
ஏழை இடையர் குடிலிலே -மகிழ்
சோலையாக மகன் பிறந்தார்
நட்சத்திரங்கள் வழிகாட்ட
ஞானியரும் தொடர்ந்து வந்து
மனுமகனை வணங்கினர்
காணிக்கைகளும் கொடுத்தனர்
வானதூரரும் வாழ்த்தினர்
கானமழை பொழிந்தனர்
ஞானமகன் பாலன் தன்னை
நாமும் வாழ்த்தி மகிழ்வோமே...
பால இருள் நீங்கி ஒளி பெறுவோமே

*ஜெ.நந்தினி,*
*உசன்*







## மார்கழி கிறிஸ்மஸ் பெருநாள்

புனித மேரியின் புதல்வன்
பூமியிற் பிறந்த பொன்னாளை
மனித குலமொன்றி வாழ்த்தும்
மார்கழி கிறிஸ்மஸ் பெருநாள்
மாட்டுத் தொழுவத்திற் பிறந்து
மரணத்தின் பின்னுயிர்த் தெழுந்து
வாட்டிய துயரினை வென்று
வாழ்வினைக் காட்டிய வழிநாள்
ஏரோது மன்னனின் ஆட்சி
இயற்றிய கொடுமையின் காட்சி
வேரோடத் தீமைகள் களைந்த
விண்ணகத் தரசரின் திருநாள்
இனமத பேதங்க ளின்றி
இதயங்கள் அன்பால் ஒன்றி
மனுக்குலம் மண்ணில் தழைக்க
மார்கழி தந்தது இந்நாள்
உலகினில் இயேசு கிறிஸ்து
உதித்திட்ட கிறிஸ்மஸ் நாளை
அழிவிலா ஆனந்தத் தோடு
அனைவரும் கொண்டாடி மகிழ்வோம்
பாலகன் இயேசுவின் பிறப்பு
பாரினுக் குணர்த்திய பொறுப்பு
வாழ்வதன் உயரிய மாட்சி
வையகந் தனிலிறை ஆட்சி

*செ.திருநாவுக்கரசு, நல்லூர்*

## வடக்கு மாகாண ஆளுநரின் நத்தார் தின செய்தி



எம் இதயங்கள் தோறும் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நத்தார் பெருநாளின் செழிப்பும் மகிழ்ச்சியும் பரந்து எங்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கின்றன.

இயேசு கிறிஸ்து பிரானின் ஜனனத்தை குறிப்பிடுவது நத்தார் பெருநாளாகும். உலகின்கண் சமா தானம் மலர்வதை நத்தார் குறிப்பிடுகின்றது. மூன்று தசாப்தகால யுத்த சூழ்நிலையிலிருந்து விடுபட்ட இலங்கை வாழ் மக்கள் இப்போது எவ்வித பயமுமின்றி நத்தாரை கொண்டாடுகின்றார்கள். மக்களுடைய அபிலாசைகள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. விசேடமாக வடபகுதி வாழ் மக்கள் தற்போதைய நிலைபற்றி திருப்திப்பட்டவர்களாய் தமது எதிர்காலத்தைப்பற்றி அரசாங்கத்திலும் ஜனாதிபதி அவர்களிலும் நிறைய நம்பிக்கை வைத்துள்ளார்கள் .

இருபத்தாறு வருடங்களுக்கு பின்னர் வடமாகாண சபைக்குரிய தேர்தல்கள் நடைபெற்றது. இந்த நாட்டில் வசிக்கும் சகல சமூகத்தினருக்குமிடையில் நல்லிண க்கத்தை ஏற்படுத்துவதற்கு இச் செயற்பாடு ஒரு குறிப்பிடக்கூடிய மைல் கல்லாகும் . தங்களுக்கு சந்தோஷமானதும் மகிழ்ச்சிகரமானதுமான நத்தார் உரித்தாகுக என்று வாழ்த்துகின்றேன்.

ஜி.ஏ.சந்திரசிறி ,
வட மாகாண ஆளுநர்

## நம்பிக்கையில் மலரட்டும் நத்தார்

ஒளி விழாக்கள் கோலாகலமாக கொண்டாடி மகிழும் கிறிஸ்து பிறப்பு விழாவில் உலகமே இன,மத, மொழி, நாடு கடந்து கொண்டாடி வருவது மகிழ்வூட்டும் நத்தார் நினைவுகளே.

சொந்த மண்ணில் அகதியாக அன்று இறையேசு பாலனின் பிறப்பு எமது இல்லங்களில் பாலன் குடில்கள் மூலம் நினைவூட்டப்படும் அடை யாளமாகும். சத்திரத்திலும் இடமில்லாதவர் இன்று சரித்திர நாயகனாக உலகில் நினைவு கூரப்படுகிறார். **கலங்காதீர் உங்களுக்கு ஓர் நற் செய்தி எமக்காக மீட்பர் . ஒருவர்** பிறந்துள்ளார் என்ற நம்பிக்கை வார்த்தைகள் இன்றும் நம்பிக்கை இழக்காது வாழ்ந்தவர்கள் அனுபவங்களில் இறை நம்பிக்கை எமது வாழ்வுக்கு விடுதலை தரும் என்பதனை பாலகயேசுவின் பிறப்பின் மூலம் உணர்ந்து கொள்வோம். பகிர்ந்து கொள்வோம். துணைக்கரங்களாக இணைந்து வாழ்த்துவோம்.

செ. யோசப்பாலா, செயலர், கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்

## மனுமகனின் பிறப்பில் மனிதர் ந

கடவுள் பிறப்பெடுத்து உலகிற்கு வருகிறார் என்று நாம் காலம் காலமாக நம்பிவருகின்றோம். இந்த
கறையுண்டு என்பதைத்தான் கடவுளின் பிறப்புகள் நமக்கு உணர்த்துகின்றன.
அப்படி கடவுள் உலகில் இயேசுவாக பிறப்புக் கொண்ட ஒரு நிகழ்வைத் தான் கிறிஸ்தவர்கள் கிறி
களையும் படைப்பனைத்தையும் அழிவினின்று காக்கவும், அவையனைத்தும் நி[illegible]நிலையா
கிறிஸ்து பிறப்பில் இந்த இறைவாக்கு இன்று நிறைவேறுகிறது. பெத்லகேமில் கன்னிமரியிடம் பிறந்த இயேசு
ணிலிருந்து உண்மை முளைவிட்டது. விண்ணிலிருந்து நீதி கீழ்நோக்கியது. கிறிஸ்து எங்கே பிற
என பார்க்கும்போதும், உண்மை இவ்வுலகில் கன்னிமரியிடம் பிறப்பெடுத்ததைக் காண்கின்றோம்.
கிறிஸ்துவின் பிறப்பின் நிகழ்வுகளை உற்றுக் கவனித்தால் அவை இன்று வசதியும் செல்வமும் ப
திறனும் மிக்க நமது சமுதாயத்திற்கு தேவையான பல பேருண்மைகளை தாங்கியனவாக உள்ள
கிறிஸ்துவினுடைய பிறப்பு மின்விளக்குகளும் மீடியாவெளிச்சமும் நிறைந்த சூழலிலோ, படிப்பறி
குடியிருப்பிலோ நிகழாமல், ஆள் அரவமற்ற இருளான இடத்தில், கண்டுகொள்ளப்படாத ஆட்டிடைய
தது. வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அவர் எதிரானவர் அல்ல. மாறாக, அவற்றில் மறைந்திருக்
களின் மட்டில் நமது கவனத்தைத் திருப்புவதற்காகவே எனலாம்.
புதிய பொருளாதாரப் புரட்சியாக இருக்கின்ற உலகமயமாக்குதல் பல வளர்ச்சிகளை வென்றெடுத்துள்ள
பின்னணியில் உள்ள தளர்ச்சிகள், புறக்கணிப்புகள், மறுக்கப்படுதல்கள், மறக்கப்படுதல்கள் மற்று
களும், சொகுசு சாதனங்களும், தொலைத்தொடர்பு சாதனங்களும் அக்கறைக் காட்டப்பட்டு அத்தியாவசி
இதற்கு எடுத்துக்காட்டு இன்றைய உலகில் குடும்ப உறவிலும் பாதிப்பு ஏற்படுத்திவிட்டுள்ளது. கண
அதிகரித்துக் கொண்டேபோகிறது. பல அறைகள் கொண்ட மாளிகையை போன்ற வீடுகள் மலிந்து
குழந்தைகளுக்கு கேட்டதெல்லாம் கிடைத்துவிடுகிறது. ஆனால் பெற்றோரின் உடனிருப்பு கிடைப்
வகையான உணவுகள், ஆனால் அவை ஊட்டச்சத்து குன்றிப்போனவை. தொலைதூரங்களை இ
கண்டுகொள்ளப்படுவதில்லை. அலைபேசி கொண்டு யாரோடு எல்லாமோ எங்கங்கோ இருப்பவர்களோடு பேசுமு
குகின்றோமா? இது உறக்கமா? அல்லது மயக்கமா? மனிதவாழ்வு களவாடப் பட்டுள்ளதே! சிறைபி
னும் பெருவிழாவை கொண்டாடும் நாம் ஓர் உறுதி கொள்வோமா? கிறிஸ்துவின் பிறப்பு, சாதி, சம
தடைகளைத் தகர்த்தெறிந்து கிறிஸ்துவிற்காய் எம்மையே அடுத்தவருக்கு தாரைவார்த்து கொடுப்
எம்மில் அர்த்தம் பெறும்.
ஆழமாக வடுக்களைத் தந்து காயமுறவைத்த, பிரிவினைகளைச் சுமக்கவைத்த போர் போய்முடிந்து
கிறது. இவ்வேளையில் இயேசுவின் பிறப்பால் ஆசீர்வதிக்கப்பட்டு நாட்டுமக்களாகிய நாம் அன்பை எம
உண்மை மீதான மதிப்பு, மனிதருக்கான மாண்பு தழைத்தோங்கிட செய்வோம்.
அன்பும் உண்மையும், நீதியும் அமைதியும் சந்தித்தன. பெத்லகேமில் மரியன்னையிடம் பிறந்த
மகன், கடவுள் வரலாற்றில் தோன்றினார்.
அவரின் பிறப்பு அனைத்து மனித குலத்திற்கும் புது வாழ்வின் முளையானது. ஒவ்வொரு நில
முளைவிடட்டும். அனைவருக்கும் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா வாழ்த்துக்களும் புதுவருட வாழ்த்து

ம.பிரான்சிஸ்க்-கத்தோலிக்க சுதந்திர ப





மானிப்பாயில்... பஜாஜ் மோட்டார் சைக்கிள் விற்பனை காட்சியறை
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்டின் சேவை முகவர் றஞ்சித் மோட்டோர்ஸ் (எம்மிடம் கொள்வனவு செய்யப்படும் அனைத்து மோட்டார் சைக்கிள்களுக்கும் மேலதிகமாக இரண்டு சேர்விஸ் வழங்கப்படும்)
BRS Motor Engineers
BAJAJ
311, யாழ்.வீதி, மானிப்பாய்,
தொ.பே.: 0773107549, 0772269883, 021 2255228
றஞ்சித் மோட்டோர்ஸ்
றஞ்சித் றிப்பயறிங் அன் சேர்விஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## மாண்டவர் மீண்டும் உயிர்த்து

இறை இயேசுவின்...
அன்பு வாசகத்தில்...
கேளுங்கள் கிடைக்கும் என்றார்
கேட்காமலே சாட்டையடி
முட்கிரீடம் பாச சிலுவை
மூன்றும் கொடுத்தார்
தட்டுங்கள் திறக்கப்படும் என்றார்- அவரை
சிலுவையிலிட்டு தட்டியறைந்தார்கள்
பரமபிதா மீண்டும் உயிர்த்தெழுந்தார்
பாவிகளை பழிவாங்க அல்ல
அவர்களின் பாவங்களை
மாண்டவர் மீண்டும் உயிர்த்தார்

*அ.சீதாராம்*
*பருத்தித்துறை*

## நல்வழியைக் காட்டிட வாருமையா

விண்ணக ஒளியாய் திகழ்கின்ற விடிவிளக்கே
மண்ணகம் வந்து மலர்ந்த புது மலரே
பாவ இருள் நீக்கவந்த பகலவனே
பாவிகள் எம்மை மீட்டிட வாருமையா

தேடும் மாந்தர்க்கு தெவிட்டாத திரவியமே
கூடும் மக்களின் குறையகற்றும் குலமகனே
நாளும் பொழுதும் ஏங்குகின்ற எம்மவர்க்கு
நல் வழியை காட்டிட வாருமையா

அளவிட முடியாத அருட்பெருங் கடலே
புகழ்ந்திடத் தோன்றும் புண்ணிய சீலனே
எம்மன அகந்தையை அகழ்ந்திட வேனும்
செம்மனச் செம்மலே வந்திட வேண்டுமையா

*சிங்கராயர் வசீகரன்*
*மானிப்பாய்*

## மனிதர் நாம் மனவுறுதியெடுப்போம்!

நம்பிவருகின்றோம். இந்த உலகுக்கும் கடவுளுக்கும் உறவு உண்டு. கடவுளுக்கு இந்த உலகின்மீது அக் ின்றன.

த் தான் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துமஸ் பெருவிழாவாகக் கொண்டாடிவருகின்றனர். பொதுவாக கடவுள் மக ைத்தும் நி[illegible]நிலையான வாழ்வைக் கொண்டிருக்கவேண்டும் என்ற காரணத்திற்காக பிறக்கின்றா கன்னிமரியிடம் பிறந்த இயேசுவில் பேரன்பும் உண்மையும் சந்தித்தன, நீதியும் நிறைவாழ்வும் முத்தமிட்டன. மன கியது. கிறிஸ்து எங்கே பிறந்தார் என்ற கேள்வியை எழுப்பும்போதும், உண்மை இவ்வுலகில் முளைத்தது த்ததைக் காண்கின்றோம்.

ன்று வசதியும் செல்வமும் பணபலமும் படைபலமும் ஆயுதபலமும் அறிவியல் வளர்ச்சியும் தொழில்நுட்பத ளை தாங்கியனவாக உள்ளன.

றைந்த சூழலிலோ, படிப்பறிவு நிறைந்த அறிஞர்களின் மத்தியிலோ, செல்வம் கொழித்த வசதிகள் மலிந்த கொள்ளப்படாத ஆட்டிடையர்கள் மத்தியில், அழுக்கான மாட்டுக் குடிலில் நிகழ்ந்தது.கடவுள் இவ்வாறு பிறந் ாக, அவற்றில் மறைந்திருக்கும் முரண்பாடுகளையும், அவலங்களையும் சுட்டிக்காட்டி வாழ்வின் அவசியங்

ச்சிகளை வென்றெடுத்துள்ளது. வசதிகளையும் வருவாயையும் பெருக்கித்தந்திருக்கின்றது. ஆனால் அவற் றின் ள். மறக்கப்படுதல்கள் மற்றும் வேரறுக்கப்படுதல் பெரும்பாலும் வெளிச்சத்திற்கு வருவதில்லை. ஆடம்பரங் றக் காட்டப்பட்டு அத்தியாவசியங்கள், இன்றியமையாதவைகள் கண்டுகொள்ளப்படாமல் விடப்பட்டுவிட்டன.

ஏற்படுத்திவிட்டுள்ளது. கணவனும் மனைவியுமாக கை நிறைய சம்பாதிக்க முடிகிறது. ஆனால் விவாகரத்து ய போன்ற வீடுகள் மலிந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அதில் வாழத்தான் போதிய மனிதர்கள் இல்லை. றோரின் உடனிருப்பு கிடைப்பதில்லை. உயரமான கட்டடங்கள், ஆனால் தாழ்வான எண்ணங்கள். வகை வ. தொலைதூரங்களை இணைக்க கம்பளம் விரித்தாற்போல நெடுஞ்சாலைகள், ஆனால் அடுத்த வீட்டார் கோ இருப்பவர்களோடு பேசமுடிகிறது. ஆனால் அடுத்திருப்பவரோடு உரையாட மனமில்லை. உணர்வே இன்றி உறங் வாட்ப் பட்டுள்ளதே! சிறைபிடிக்கப்பட்டுள்ளதே! இதனை வென்றெடுக்கவே மனுமகன் மனிதன் ஆனார் என் றிஸ்துவின் பிறப்பு, சாதி, சமயம், இனம், மொழி என்பவற்றை கடந்ததென்பதை எங்கும் எடுத்துரைப்போம். கு தாரைவார்த்து கொடுப்போம். அப்போது எம்பணிக்காய் இமயமே இறங்கி வரும். கிறிஸ்துபிறப்பு விழா

லைத்த போர் போய்முடிந்துள்ள இந்நிலையில் தற்போது மெதுமெதுவாக நம்நாட்டிற்கு அமைதி மொட்டவிழ க்களாகிய நாம் அன்பை எம்மண்ணில் வளர்த்து அனைவரும் ஒன்றிணைந்து நற்சமூகங்களை கட்டி யெழுப்பி சய்வோம்.

மரியன்னையிடம் பிறந்தவர், மனுக்குலத்திற்குள் மனுவுரு எடுத்துள்ளார். மனிதனாகப் பிறந்தார் இறை

ளயானது. ஒவ்வொரு நிலமும் நல்நிலமாக மாறி, அங்கு அன்பு, அமைதி, உண்மை, நீதி ஏற்கப்பட்டு க்களும் புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

க-கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

## நிரந்தர ஒளி நீடித்து நிலைக்கட்டும்



அவலங்களையும் துயரங்களையும் சுமந்து நின்ற நம் தேசம் இருள் விலகி நிற்கும் நிலையில் சமாதான சக் வாழ்வின் நிரந்தர ஒளி இங்கு நீடித்து நிலைக்க வேண்டும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தனது நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்தச் செய்தியில், மனித குலத்தின் மீட்சிக்காகவே கருணை மைந்தன் இயேசு பிரான் பிறப்பெடுத்து வந்தார் என்ற தளராத நம்பிக்கையில் உலகெங்கும் வாழும் கிறிஸ்தவ மக்கள் நத்தார் தினத்தை கொண்டாடி மகிழ்கின்றார்கள். அந்த மகிழ்ச்சியை எமது தேசத்தில் வாழும் மக்களோடு இணைந்து நாமும் கொண்டாடி மகிழ விரும்புகின்றோம்.

வாடி நின்று, வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்கள் என்று இங்கு யாரும் இருப்பதற்கு அனுமதிக்க முடியாது. சொந்த நிலங்களை இழந்தவர்கள் அந்த நிலங்களுக்கே திரும்ப வேண்டும். எமது நிலம் எமக்கே சொந்தம் என்ற உரிமை இங்கு வாழவேண்டும். இல்லாமையில் இருந்தும் வறுமையில் இருந்தும் எல்லோரும் இங்கு விடுபடல்வேண்டும்.

தனிமனித தவறுகள் மன்னிக்கப்பட வேண்டும் என்பதற்கு அப்பால் அந்தத் தவறுகள் மக்கள் சமூகத்தைப் பாதிக்கும் போது சட்டத்தின் முன்பாக தவறு செய்தவர்கள் நிறுத்தப்படல் வேண்டும்.

மானுட சமத்துவ நீதியும் மனித நேயப் பண்புகளும் இங்கு வாழவேண்டும். இதற்கு மதிநுட்ப சிந்தனைகளே எமது மக்களை வழிநடத்திச் செல்ல வேண்டும் எனத் தெரிவித்திருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் உலகத்தின் ஒளி பிறந்த நந்தார் தினத்தில் எம் வரலாற்று வாழ்விடங்கள் தோறும் வழி பிறக்க உழைப்போம் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## வருக வருக இயேசு பாலனே

மண்ணின் மைந்தனாய் பிறந்தவரே
மானிடராய்ப் பிறந்த எம்மை வழி நடத்துப வரே
வாழ்க்கைப் பாதையை சிலுவையில் சுமந்தவரே
வாழ்க்கையில் வசந்தத்தை அள்ளித் தந்தவரே
வானிலிருந்து வந்துதித்த இயேசுவே-உன்
வருகையும் வசந்தமாய் மலரட்டும்-நம்
வாழ்வில் இருளகற்றி ஒளியேற்ற- இந்
நன் நாளில் வருக வருக இயேசு பாலனே....

*பா.பொன்னொளி, அல்வாய்.*





PC PARK
அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்!
northern PC PARK

நத்தார் புதுவருட பண்டிகைக் காலத்தையொட்டி மாபெரும் மலிவு விற்பனை கணனி, லப்ரொப் வகைகள், பற்றரிகள், கெட்செற், கீபோட் மற்றும் அனைத்து வகையான கணனி உதிரிப்பாகங்களையும் மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
PC PARK


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கம்-ஜப்பானின் வழியிலா? தென்னாபிரிக்காவின் பாதையிலா?

போருக்குப் பின்னர், இலங்கையில் நிலையான அமைதியை ஏற்படுத்துவதற்கான சர்வதேச முயற்சிகள் பல்வேறு வழிகளிலும் தொடர்ந்து வருகின்றன.

அமெரிக்காவின் அணுகுமுறை ஒருவிதம், பிரித்தானியாவின் அணுகுமுறை இன்னொருவிதம், இந்தியாவின் அணுகுமுறை மற்றொரு விதம்.

இப்படிப் பல்வேறு நாடுகளும் பல்வேறு அணுகுமுறைகளைத் தமது நலன் மற்றும் இலங்கையுடனான நட்புறவின் தேவை, அல்லது அவசியப்பாடு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கையாண்டு வருகின்றன.



போர்முடியும் வரைக்கும் உலகின் பெரும்பாலான நாடுகளினது அணுகுமுறை, அதற்கு, ஏதோ ஒரு வழியில் ஆதரவு கொடுப்பதாகவே இருந்தது. அதாவது, விடுதலைப்புலிகளை ஒழிப்பதில் ஒருவித இணக்கப்பாடு காணப்பட்டது. அந்த ஆதரவு வெளிப்படையானதாக சில நாடுகளிடம் காணப்பட்டது. இன்னும் சில நாடுகளிடம் இரகசியமானதாக காணப்பட்டது. வேறு பல நாடுகளிடம், இணங்கியும் இணங்காததுமான மதில் மேல் பூனை அணுகுமுறை காணப்பட்டது.

விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் தான், இந்த அணுகுமுறை வேறுபாடுகள் மாற்றமடையத் தொடங்கின.

தமது எதிர்பார்ப்புக்கேற்ற வகையில் ஒவ்வொரு நாடுகளும் தமது அணுகுமுறைகளை வகுத்துக்கொள்ளத் தொடங்கின.

இந்த வகையில், போருக்குப் பின்னரும், இலங்கையுடன் உச்சக்கட்ட நெகிழ்வுத் தன்மையை சீனா, ரஷ்யா, கியூபா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் கடைப்பிடிக்கின்றன. இந்த நாடுகளுக்கு, போருக்குப் பின்னர், இலங்கையின் உள்ளநாட்டு மக்களின் நிலைமைகள், உரிமைகள் குறித்தோ எந்த அக்கறையும் இருக்கவில்லை. ஆனால், அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகள் அதற்கு எதிர்மாறாக, இலங்கையுடன் நெகிழ்ந்து கொடுக்காத அணுகுமுறையைக் கடைப்பிடிக்கத் தொடங்கின. இந்த நாடுகள், போருக்குப் பிந்திய நிலையான அமைதி, அரசியல் உறுதிப்பாடு, அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் போன்ற வற்றில் உச்சபட்ச அக்கறை செலுத்தின. இந்த இரண்டுக்கும் இடையில், இலங்கையுடனான உறவை விட்டுக் கொடுக்கவும் முடியாமல், அதேவேளை, போருக்குப் பிந்திய உள்நாட்டு நிலவரங்களால் திருப்தி கொள்ளவும் முடியாத நாடுகளும் உள்ளன.

இந்தியா, உள்ளிட்ட நாடுகளை இவ்வாறு குறிப்பிடலாம். போருக்குப் பிந்திய நான்கரை ஆண்டுகளிலும், இலங்கை அரசாங்கத்தின் போக்கில் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ள சூழ்நிலையில், ஜெனிவாவை மையப்படுத்திய அழுத்தங்கள் தீவிரமடைந்துள்ளன. எதிர்வரும் மார்ச் மாதம், ஜெனிவாவில், இலங்கைக்கு எதிரான நகர்வுகள் மேலும் தீவிரமடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்ற சூழலில், ஜப்பானும், தென்னாபிரிக்காவும், இந்த அரங்கினுள் பிரவேசிப்பதற்கான அறிகுறிகள் பலமாகத் தென்படுகின்றன.

அண்மையில் கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்க கொழும்பு வந்திருந்த தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமா, தமது நாட்டில் அமைக்கப்பட்ட உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை ஒத்த ஒரு ஆணைக்குழுவின் மூலம் போரின் காயங்களை ஆற்றும் யோசனையை அரசாங்கத்திடம் சமர்ப்பித்திருந்தார். அந்த யோசனையை முன்னிறுத்தி, பேச்சுக்கள் தொடங்கப்படுவதற்கான வாய்ப்புகள் காணப்பட்ட போதிலும், நெல்சன் மண்டேலாவின் மறைவும், தென்னாபிரிக்கத் தரப்பின் நேரமின்மையினாலும், இது இழுபறிக்குள்ளாகியுள்ளது.

இன்னொரு பக்கத்தில், ஜப்பானின் சிறப்புத் தூதர் யசூசி அகாசி இலங்கைக்கு தனது 23-வது பயணத்தை அண்மையில் மேற்கொண்டிருந்தார். ஜெனிவா நெருக்கடிகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான உபாயங்களை வகுத்துக்கொள்வதற்காகவே அரசாங்கம், யசூசி அகாசியை கொழும்புக்கு வரவழைத்ததாக ஒரு பேச்சு உள்ளது. அவர் கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசும் போது, சர்வதேச சமூகத்தினது எதிர்பார்ப்புகளை இலங்கை நிறைவேற்ற வேண்டும் என்றும், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய தருணம் வந்துள்ளதாகவும் கூறியிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பில் அவர், பொறுமையாக இருக்கும்படி, கூறி, இரா. சம்பந்தனிடம் வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டிய நிலையும் ஏற்பட்டது. அதேவேளை, அமைச்சர் ரவூப் ஹக்கீமுடனான சந்திப்பின் போது அவர், ஜெனிவா கூட்டத்தில், இலங்கைக்கு ஜப்பான் ஆதரவளிக்கும் என்று உறுதியளித்துள்ளார்.

அதாவது, அகாசி, மேடைக்கேற்ப நடனம் ஆடிவிட்டுப் போயுள்ளார்.

இது ஒன்றே அவரது நிகழ்ச்சி நிரல், பொதுவானதொன்று அல்ல என்பதை உணர்த்தி நிற்கிறது.

அதாவது, அவர் அரசாங்கத்தைக் காப்பாற்றும் எத்தனிப்பில் ஈடுபட்டுள்ளார் என்பது ஓ[illegible]க்கேனும் உறுதியாகிறது.

எதுவாயினும், [illegible]திர்வரும் மார்ச் மாதம் [illegible]பானின் வழியிலோ, தென்னா பிரிக்காவின் வழியிலோ, நல்லிணக்கத்துக்கான நகர்வுகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. இந்த இரண்டு நாடுகளுமே, நல்லிணக்கத்துக்கு முன்னுதாரணமான நாடுகள்.

இதில் ஜப்பான் வெளியக நல்லிணக்கத்துக்கு உதாரணம்.

தென்னாபிரிக்கா உள்ளக நல்லிணக்கத்துக்கு உதாரணம்.

இரண்டாம் உலகப் போரின் போது, ஹீரோசிமா, நாகசாகி ஆகிய தனது இரண்டு நகரங்களை அணுகுண்டுவீசி அழித்து, இலட்சக்கணக்கான மக்களைக் கொன்று, நிரந்தர ஊனமாக்கிய, அமெரிக்காவுடன், ஜப்பான் பகைமை பாராட்டவில்லை. போரின் முடிவில், அமெரிக்காவிடம் சரணடைந்த ஜப்பானுக்கு, சில ஆண்டுகளிலேயே நிபந்தனைகளுடன் விடுதலை அளித்தது அமெரிக்கா.

இன்றுவரை ஒஹினாவா உள்ளிட்ட பல இடங்களில் அமெரிக்கப் படைத் தளங்கள் உள்ளன. அமெரிக்காவின் விருப்பங்களை நிறைவேற்றும் வகையில், தனது வலிகளையும் சகித்துக்கொண்டு, அமெரிக்காவுடன் இன்றுவரை நெருக்கமான நட்புநாடாகத் திகழ்கிறது ஜப்பான்.

இது ஒருவகை நல்லிணக்கம்.

தோற்றுப்போனவர்கள், தாம் நிமிர்ந்து கொள்வதற்காக, வெற்றிபெற்றவர்களை கட்டி யணைத்த இராஜதந்திரம் அது. அதாவது, அமெரிக்காவிடம் சரணடைந்த ஜப்பான், விரோதப் போக்கை கடைப்பிடித் திருந்தால், நல்லிணக்கம் மட்டு மன்றி, ஜப்பானின் வளர்ச்சி கூடச் சாத்தியமாகியிருந்திருக்காது. ஏனெனில், ஜப்பானிய பொருளாதாரம் பெரிதும், அமெரிக்காவையே சார்ந்துள்ளது. எனவே, ஜப்பானின் அணுகுமுறையும ‍[illegible]ன்னுதாரணம் மிக்கதொன்றா[illegible]வே கருதப்படுகிறது.

அதபோல, தென்னாபிரிக்காவில் நடந்தது இதற்கு எதிர்மாறான அணுகுமுறை.

அங்கு போராட்டத்தில் வெற்றி பெற்ற கறுப்பர்களின் சார்பில், நெல்சன் மண்டேலா, தோல்வியுற்ற சிறுபான்மை வெள்ளையர்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்தினார். அதிகாரத்திலிருந்து வீழ்த்தப்பட்ட சிறுபான்மையினரான வெள்ளையர்களுடன், நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளாது போனால், நிலையான அமைதி சாத்திய மில்லை என்று நெல்சன் மண்டேலா உறுதியாக நம்பினார். அதனால், தனது இரண்டரை தசாப்தத்துக்கும் மேலான கொடிய சிறைவாழ்வு உள்ளிட்ட கறுப்பின மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளால் ஏற்பட்ட காயங்கள் அனைத் துக்கும் மன்னிப்பு அளிக்கும் முடிவுக்கு வந்தார். அதேவேளை, உண்மை நல்லிணக்க ஆணைக்குழு மூலம், பொறுப்புக் கூறும் கடப்பாட்டையும் அவர் நிறைவேற்றினார். அது தென்னாபிரிக்காவின் நிலையான அமைதிக்கு இன்றுவரை பயனுறுதியான செயற்பாடாகவே கருதப்படுகிறது.

இந்த இரண்டு நல்லிணக்க முயற்சிகளும், இப்போது இலங்கையுடன் தொடர்புடையதாகவே இருக்கின்றன.

இதில் எந்த வழி இலங்கைக்கு உகந்தது?

தமிழர் தரப்பு, தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா கடைப்பிடித்த அணுகுமுறையை விரும்புகிறது. அதாவது, போரில் வெற்றி பெற்றவர்கள், தோல்வியுற்ற சிறுபான்மையினரான தமிழர்களை அரவணைத்துக் கொள்ள வேண்டும் என்பதே அது.

ஆனால், அரசதரப்போ, மறுவழமாகச் சிந்திக்கிறது.

ஏன், தோற்றுப் போன ஜப்பானியர்கள், அமெரிக்காவுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொண்ட, உதாரணத்தைப் பின்பற்றினால் என்ன என்பது அவர்களின் நிலைப்பாடாக உள்ளது. ஆனால், நல்லிணக்கம் என்பது இன்று அவசியம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியதொரு தேவைப்பாடாக மாறியுள்ள நிலையிலும் கூட, கள யதார்த்தம் என்பது இந்த இரண்டு அணுமுறைகளையும் தொட்டுச் செல்லத்தக்க தொன்றாக இன்று வரை மாறவில்லை என்பதே உண்மை.

**தொல்காப்பியன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோதிடக் களம்

# நம்முடன் இருப்போரில் நல்லவர் யார்? வஞ்சகர் யார்?




மனம் என்ற ஒன்றைப் பற்றி சிந்திக்கும் போது நிறைய எண்ணங்கள் தோன்றுகின்றன. மனம்போல் வாழ்வு, உங்கள் எண்ணம், உங்கள் வாழ்க்கை, மனம் ஒரு குரங்கு, வாயு வேகம், மனோவேகம் மனம் போல் மாங்கல்யம்.

நல்லதை நினைத்தால் நல்லதே நடக்கும் என்று பல வகையான சொல் வழக்குகள் நினைவுக்கு வருகின்றன.

ஆக, ஒருவரின் வாழ்வென்பது அவரின் எண்ணம், சிந்தனைக் கேற்பதான் அமைகிறது அல்லவா? ஜோதிடரீதியாக மனம் என்பது 5 ஆமிடத்தைக் குறிக்கும். மனதின் காரகர் சந்திரன் ஆவார்.

சந்திரன் தேய்ந்து வளரும் அதிவேக கிரகம் ஆதலால், அவரின் காரகமான சிந்தனைகளும் மாறி மாறித் தோன்றி ஊஞ்சல் போல் விரைவாக சுற்றிச் சூழல்கின்றன.

முதலில் 5 ஆமிடம் என்ன கூறுகிறது என பார்ப்போம். புத்தி, நன்னடத்தை, மந்திரம், உபாசனை, மந்திரப் பிரயோகம், ஞானதிருஷ்டி, ஆழ்ந்த ஞானம், உறுதியான சிந்தை, பாண்டித்தியம், ஜெபம் ஆழ்ந்த சிந்தனை போன்றவற்றை 5 ஆமிட பாவகப் பலன்களாக உத்தரகாலம்ருதம் கூறுகிறது. இதே உத்தரகாலம்ருதம் சந்திரனைக் குறித்து புத்தி, அறிவின் நிலை, இதயம், திறமை போன்றவற்றைக் கூறுகிறது.

எனவே, ஒருவரின் எண்ணங்களைப் பற்றி அறிய 5 ஆமிடம் மற்றும் சந்திரனின் நிலையைக் காண வேண்டும்.

5க்குடையவர் சுபராகி, சுபர் பார்வை பெற்றிருப்பின், ஜாதகர் புத்திக்கூர்மை உடையவராகவும் நீதி அறிந்தவராகவும் இருப்பார். இதுபோன்ற ஜாதகத்தில் சந்திரனும் நல்ல நிலைமையில் இருப்பார்.

5 ஆம் அதிபதி 5இற்கு ஐந்தான 9 ஆமிடத்தில் சுபமாக இருப்பின், அத்தகைய ஜாதகர்களும் நீதி பரிபாலனம், நீதி நிர்வாகம், ஆய்வறிவு போன்ற சிந்தனைகள் மேம்பட்ட விடயங்களில் பிரபலமாக இருப்பர்.

5 ஆம் அதிபதி 5இல் இருந்தும் சுபத்தன்மை பெற்ற சந்திரனும் அமையப் பெற்றவர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவர்கள். போலித்தனம் இல்லாதவர்கள்.

சந்திரன், ராகு சேர்க்கையானது அதன் தசாகாலங்களில் பைத்தியம் பிடிக்க வைத்துவிடும்.

5 ஆம் அதிபதி நீசம் அல்லது மறைவு பெற்றும் சந்திரன் பாபர்களுடன் சேர்ந்தும் உள்ள ஜாதகர்கள் மனத்தெளிவு இல்லாதவர்களாக -புத்திமாற்றம் கொண்டவர்களாக இருப்பர்.

5 இல் நீச கிரகங்கள் உடையவர் கொடுமையான மனமும் புத்தியும் உடையவர்களாக இருப்பர்.

5ஆமிடம் அலைபாயும் சர ராசியாக இருந்து 5 ஆமிட லக்னாபதியும் அசுபத்தன்மை பெற்று 5இல் அசுபச் சந்திரன் அல்லது பலம் குன்றிய செவ்வாய் இருந்தால், அவர்கள் சுயபுத்தி இல்லாமல், பிறர் பேச்சையே கேட்டுக் கொண்டு ஒரு முடிவும் எடுக்க முடியாமல் திண்டாடுவார்கள்.( சராசரி என்பது எப்போதும் ஓடிக் கொண்டே இருக்கும் ராசி என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

அதுவே 5 ஆமிடமாக அமைந்து, 5 ஆம் அதிபதியும் சந்திரனும் கெட்டால் இதுபோன்ற நிலைமை கண்டிப்பாக உண்டாகும்)

5இல் வக்ரமடைந்த கிரகங்கள் இருந்தாலும் 5 ஆம் அதிபதி வக்ரமடைந்தாலும் இவர்கள் ஞாபக சக்தி இல்லாமல் மறதியுடையவராக இருப்பார்கள்.

இதுவே லக்னாதிபதியும் 5 ஆம் அதிபதியும் சுபமாகி பரிவர்த்தனையும் இருந்தாலும் 5 ஆம் அதிபதி கோண, கேந்திரத்தில் இருந்தாலும் நல்ல ஞாபகசக்தி உடையவராக இருப்பர்.

5 இல் நீச சந்திரன் இருப்போர், எப்போதும் பொறாமைத்தனத்துடனும் அடுத்தவர் நன்றாக இருந்தால் பொறுக்க மாட்டாதவர்களாகவும் எப்போதும் கெட்ட புத்தியுடன் அலை பவர்களாகவும் இருக்கிறார்கள்.

5 ஆம் அதிபதியும் 10 ஆம் அதிபதியும் பரிவர்த்தனையாக இருந்தால், மனதில் ஒன்றை நினைத்து விட்டால் அதை உடனடியாக நிறைவேற்றி விட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள். 5,11 ஆம் அதிபதிகள் பரிவர்த்தனையும் இதே பலனைத் தரும்.

5 ஆம் அதிபதி சுபராகி, 5இல் சுபர் இருந்து, 5 ஆம் அதிபதி கேந்திர கோணங்களில் இருப்பின் அவர் மிகவும் இரக்கமான மனம் உடையவராவர்.

இதற்கு மாறாக 5 ஆம் அதிபதி பாவியாக - அவரும் மறைவாக இருந்து, 5 இலும் பாவிகள் இருப்பின் அத்தகைய ஜாதகர்கள் ஈவு இரக்கமில்லாமல் இருப்பர்.

5 ஆம் அதிபதி நீசனாக இருந்து வேலைகளைச் செய்வதற்குரிய 10 ஆம் அதிபதி 5 இல் கெட்டுப் போய் இருந்தால் முட்டாள் தனமான வேலைகளைச் செய்து விட்டு, பின்பு உட்கார்ந்து புலம்புவார்கள்.

5இல் சுபர் இருந்து அங்கு 5 ஆம் அதிபதியும் பலமாக இருந்து, சுப அம்சம் பெற்றிருந்தும் 2 இல் செவ்வாய் இருப்பவர்கள், மனதுக்குள் நல்லவிதமாக- நியாயமாக நினைத்தாலும் பேசும்போது கோபமாகவே பேசுவார்கள்.

அதனால் இவர்களின் நல்ல மனம் யாருக்கும் தெரியாமல் போய் விடும்.

சிலருக்கு 5 ஆமிடம் பாபர் சம்பந்தம் பெற்றாலும் 2 ஆம் இடத்தில் சுபர் இருப்பின், இவர்கள் மனதில் ஆயிரம் கெட்ட எண்ணம் இருப்பினும் பேசுவது சர்க்கரையாக இனிமையாகப் பேசிவிடுவர்.

5 இலும் 2 இலும் பாபர் இருப்பவர்களின் மனம், வாக்கு இரண்டுமே கெட்டுப்போய் இருக்கும்.

5 ஆமிடத்தில் குரு இருப்பவர்கள் நல்ல மனோதிடம் உடையவர்கள்.

5 ஆமிடத்தில் செவ்வாய் இருந்தால் நன்றி உணர்ச்சி இருக்காது.

5 இல் உள்ள புதன் நிறைய யோசனைகளைக் கொடுப்பார்.

5 இல் தேய்பிறைச் சந்திரன் அல்லது மறைவு வீட்டு அதிபதியாகி 5 இல் இருந்தாலும் ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு யோசனை செய்வார்கள்.

காலப்போக்கில் பிறருக்கு இவர்களின் பேரில் நம்பிக்கையின்மை வந்துவிடும்.

5 இல் வளர்பிறைச் சந்திரன் இருந்தால் வேகமான- ஆனால் உருப்படியான எண்ணங்களுடன் இருப்பார்கள்.

5 இல் உள்ள சூரியன், தான் என்ற எண்ணத்தை அதிகம் கொடுப்பார்.

5 இல் உள்ள சுக்கிரன், கௌரவ எண்ணத்தை அதிகரிக்கச்செய்வார்.

5 இல் உள்ள ராகு, எதிர்மறையான யோசனைகளைக் கொடுப்பார்.

5 இல் உள்ள கேது தெய்வீக விடயங்களைக் கொடுப்பார்.

இதனிலும் மேன்மையான விடயம் ஒன்றுண்டு. நிறைய மகான்களின் ஜாதகத்தில் கேதுவை சனி பார்வை செய்திருப்பார். அல்லது சனி, கேது சம்பந்தம் இருக்கக் காணலாம்.

குரு, கேது சம்பந்தமும் நல்ல ஆன்மீக எண்ணங்களை ஜாதகருக்கு கொடுக்கும். சனி, கேது சம்பந்தம் தபசு யோகம் எனப்படுகிறது. எனவே, சனியும் கேதுவும் 5 ஆமிட சம்பந்தமும் இருக்கும். சாதாரண மக்களும் ஓரளவு தியாக உள்ளத்தோடு இருப்பார்கள்.

5 ஆமிடத்தில் பாபர் இருப்பினும் அவர் குரு பார்வை அல்லது குரு சாரம் வாங்கியிருந்தால் பிறர்மீது கோபம் ஏற்பட்டு அவரைப் பழி வாங்கவேண்டும் என்ற எண்ணம் முதலில் தோன்றினாலும் பின்பு மனம் மாறி நாம் என்ன அவனுக்கு கெடுதல் செய்வது, தெய்வமே தண்டிக்கட்டும் என்று ஒதுங்கி விடுவர்.

இதுவே 5 ஆமிடத்தில் பாபர் இருந்து அவரும் பாபகிரக சாரம், பார்வை பெறின் ஒருவரை வஞ்சம் வைத்தால் அவரை அழித்துவிட்டுத் தான் மறுவேலை செய்வார்கள்.

இவர்கள் எல்லாம் கலிகால ராட்சசர்கள்.

எல்லா, ஜோதிடக் கட்டுரைகளிலும் யாருக்கு எந்தவித பாதிப்பு உள்ளதோ அவர்களுக்கு பரிகாரம் கூறுவதுதான் வழக்கம்.

ஆயினும் மனம் சம்பந்தப்பட்ட விடயத்தில் மட்டும். குறிப்பிட்ட ஜாதகரை பாதிக்கப்பட்ட 5 ஆம் வீடு சந்திரன் உள்ள ஜாதகரைச் சுற்றியுள்ள குடும்ப உறுப்பினர்கள்தான் பரிகாரம் செய்ய வேண்டும். ஏனெனில் கெட்ட புத்தி, கெடுமனம் உடையோர், அடுத்தவர் களுக்கு கெடுதல் செய்வதிலேயே அதிக இன்பம் காண்பார்கள். அவர்களைச் சார்ந்து இருப்பவர்கள்தான் பெரும்பாடுபட்டுப் போய்விடுகிறார்கள்.

எனவே, மனம் சார்ந்த கெடுதல் உள்ள ஜாதகரோடு வாழ்பவர்கள் திங்கட்கிழமைதோறும் பால், பச்சரிசி, வெண்ணிற மலர்கள் போன்ற வெண்மை நிறப் பொருட்களை அருகிலுள்ள அம்மன் கோவிலுக்கு செலுத்தி பணிந்து வணங்குங்கள். கெடுபுத்தி நபர்கள், அமைதியாக இருந்து கொடுக்கும் இன்னல்கள் தாங்கொண்ணா துயரம் தரும். நிறைய வீடுகளில் வெளியில்கூட சொல்ல முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருப்பார்கள்.

அம்பாளை சரணடையுங்கள். அதுவும் பௌர்ணமியன்று அவளை வணங்குங்கள். அந்த தேவியால் மட்டுமே தீய குணமுள்ளோரிடமிருந்து சாதாரணமானவர்களைக் காக்க முடியும்.

# அரசுக்கெதிரான போராட்டங்களை நீதிமன்றை கொண்டு அரசு தடுக்கிறது

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

தொழிலாளர்களின் தலைவரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் எட்டு ஆண்டு கால ஆட்சியில் அரசாங்க ஊழியர்களுக்கு 600 ரூபா சம்பள உயர்வே வழங்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

சிறிகொத்தாவில் நடைபெற்ற தொழிற்சங்க நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தொழிற்சங்க நடவடிக்கைகளின்றி சம்பளங்களை உயர்த்திக் கொள்ள முடிவதில்லை.

உழைக்கும் வர்க்கத்தினர் அரசாங்கத்திற்கு வழங்கி வந்த ஆதரவு வெகுவாக குறைந்துள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டின் பின்னர் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் உயர்த்தப்படவில்லை.

அரச ஊழியர்களுக்கு சலுகை வழங்குவதாக அரசாங்கம் அறிவித்த போதிலும் சம்பள உயர்வோ, ஓய்வூதியக் கொடுப்பனவு அதிகரிப்போ பதிவாகவில்லை.

மக்களின் வாழ்க்கைச் செலவு வெகுவாக உயர்வடைந்துள்ளது.

கடந்த எட்டு ஆண்டுகளில் ஜனாதிபதி மஹிந்த, 600 ரூபா சம்பள உயர்வை மட்டுமே அரச ஊழியர்களுக்கு வழங்கியுள்ளார்.

தனியார் துறை மற்றும் பெருந்தோட்டத்துறை ஊழியர்களின் சம்பளங்களும் உயர்த்தப்படவில்லை.

அரச தனியார் துறையைச் சேர்ந்த ஊழியர்களின் சம்பளங்கள் 30 ஆயிரத்திற்கும் குறைவாகும்.

எனினும், மேல் மாகாணத்தில் தனியொரு நபரின் செலவிற்காக மாதாந்தம் 40ஆயிரம்தேவைபடுகின்றது.

சம்பள உயர்விற்காக நடத்தப்படும் போராட்டங்களை அரசாங்கம் நீதிமன்றங்களின் ஊடாக அடக்குமுறைக்கு உட்படுத்துகின்றது என ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். (அ-2)

# இலங்கைக்கு எதிராக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி பிரசாரம்

(கொழும்பு)

ஓய்வு பெற்றுக்கொண்ட இராணுவ அதிகாரியொருவர் அமெரிக்காவில் இலங்கைக்கு எதிராக பிரசாரம் செய்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்றுக்கொண்ட குறித்த இராணுவ அதிகாரி அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்த அதிகாரி, இலங்கை தொடர்பில் போலியான தகவல்களை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு வழங்கி வருவதாக சிங்களப் பத்திரிகையொன்று குற்றம் சுமத்தியுள்ளது.

வன்னிப் போரின் பின்னர் குறித்த இராணுவ அதிகாரி உள்ளிட்ட சிலர் அரசாங்கத்திற்கு எதிராக பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனை அறிந்து கொண்ட அரசாங்கம் குறித்த இராணுவ அதிகாரியை ஓய்வுறுத்தியுள்ளது.

2014 ஆம் ஆண்டு ஜெனீவா மனித உரிமைப் பேரவை மாநாட்டின் போது அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படவுள்ளன.

இது தொடர்பிலான தீர்மானத்திற்கு சாட்சியாக குறித்த இராணுவ அதிகாரியை அமெரிக்கா பயன்படுத்திக் கொள்ள உள்ளதாக சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்த இராணுவ அதிகாரி அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளுக்கு 100 பக்கங்களைக் கொண்ட சத்தியக் கடதாசி ஒன்றையும் வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் வளங்களை தேர்தலுக்கு பயன்படுத்துவதை தடுக்க நடவடிக்கை

**எதிர்வரும் மாகாண சபை தேர்தலை நீதியான முறையில் நடத்தும் நோக்குடன் அரச உடைமைகளை தேர்தல் பிரசாரங்களுக்கு பயன்படுத்துவதை தடுப்பது தொடர்பில் 14 சிபார்சுகளை தேர்தல் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரியவிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர் நஷனல் ஸ்ரீலங்கா அமைப்பின் நிறைவேற்று அதிகாரி எஸ்.பனுக்கே தெரிவித்தார்.**

கொழும்பு ரேணுகா ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த மாகாண சபை தேர்தல்களின் போது அரச உடைமைகள் பலவாறு தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட போதிலும் தேர்தல் ஆணையாளரின் பெரும் முயற்சியால் இதனை குறை தளவு தடுத்து நிறுத்த முடிந்தது. ஆகவே தேர்தல் ஆணையாளரின் மீது நம்பிக்கை வைத்து 14 சிபாரிசுகளை சமர்ப்பிக்கவுள்ளோம்.

கடந்த வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாண சபை தேர்தல்களின் போது அதிகார பீடத்தில் இருப்பவர்கள் பல்வேறு முறையில் தேர்தல் பிரசாரங்களுக்காக அரச உடைமைகளை பிரயோகித்தனர். இதற்கு அரசிற்கு மாத்திரம் குற்றம் சுமத்த முடியாது. அரசும் அதிகளவு துஷ்பிரயோகங்களை செய்துள்ளது. இருப்பினும் வடமாகாண சபைத்தேர்தலின் போது உள்ளூராட்சி மன்றங்களை ஆளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கூட அரச உடைமைகளை பிரயோகித்தனர்.

அத்துடன் பொது இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தது. அத்துடன் தேர்தலொன்றின் போது அரச உடைமைகள் பிரயோகம் செய்யப்படுமேயானால் அதனை நீதியான தேர்தலென கூற முடியாது. அத்தோடு அரச உடைமைகளை பிரயோகம் செய்வது மாத்திரமின்றி வன்முறைச் சம்பவங்களும் கூட தேர்தல் நீதியாகவும்? சுதந்திரமாகவும்? என்பதை தீர்மானிக்கும். இந்நிலையில் கடந்த மாகாண சபை தேர்தல்கள் நீதியான முறை நடைபெற்றதென கூற முடியாது.

இந்நிலையில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள மாகாண சபை தேர்தலை நீதியானதும் சுதந்திரமானதுமாக நடத்துவதற்கு முயற்சித்து வருகிறோம்.

கடந்த மாகாண சபை தேர்தல்களை நீதியான முறையில் நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார். எனவே தேர்தல் ஆணையாளரை நம்பிக்கை வைத்து எதிர்வரும் மாகாண சபைகளுக்காக வேண்டி 14 சிபார்சுகளை நாங்கள் தயாரித்து அதனை தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கவுள்ளோம்.

இதன்படி அதிகளவு செலவீனங்களையும் தேர்தல் வன்முறைகளைத் தடுக்கும் முகமாக மாகாண சபை தேர்தல்களை ஒரே தடவைகளில் நடத்த வேண்டும். அதேவேளை கட்டணம் செலுத்தியோ செலுத்தாமலோ பொது உடைமைகளை பிரயோகிக்கக்கூடாது. அத்துடன் அரச உடைமைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் குறித்த இலாகா அமைச்சர்களும் பொறுப்பு கூற வேண்டிய பொறிமுறையொன்றை அறிமுகம் செய்தல் வேண்டும்.

இதேவேளை, அரச வாகனங்களுக்கு அரச இலச்சினை பொறிக்கப்படுவதுடன் தேர்தல் அறிவிப்பு கிடைத்தவுடன் குறித்த மாகாண அமைச்சர்கள் தம்மிடமுள்ள அரச உடைமைகளை, பொது சொத்துக்களை கையளிக்க வேண்டும்.

அத்துடன் தேர்தல் ஆணையாளர் அனுமதியின்றி அரச சேவையில் நியமனங்கள் இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு வழங்கக்கூடாது.

அத்துடன் தேர்தல் பிரசார செலவீனங்களுக்கென எல்லை நிர்ணயம் அறிமுகம் செய்வதுடன் வேட்புமனு தாக்கல் தினம் அல்லது அதற்கு முன்பு வேட்பாளர்கள் தமது சொத்துக்கள் தொடர்பான விபரங்களை மாவட்ட தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

அத்துடன் அரச உடைமைகள் துஷ்பிரயோகம் தொடர்பான முறைகேடுகளை விசாரணை செய்வதற்காக ஓம்புட்ஸ்மன் போன்ற தேர்தல் நீதிபதியொருவரை நியமிக்க வேண்டும்.

இதேவேளை, வாக்குகளை எண்ணுமிடத்திற்கு கண்காணிப்பாளர்களையும் உள்வாங்கும் வகையில் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

அத்துடன் ஒளி ஊடுருவும் தன்மை கொண்ட வாக்குப் பெட்டிகளை உபயோகிப்பதனை ஊக்குவிக்க வேண்டும் என்ற 14 சிபார்சுகளை தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கவுள்ளோம். மேற்படி சிபார்சுகளை தேர்தல் ஆணையாளர் நாயகம் ஏற்றுக் கொள்வாரென நம்புகிறோம் என்றார். (அ-2)

# ஐக்கிய நாடுகளுக்கு விளக்கமளிப்பார் லலித்



இலங்கையில் நல்லிணக்கம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஐக்கிய நாடுகள் மனித வுரிமைகள் பேரவையில் விளக்கமளிக்கவுள்ளதாக இலங்கையின் ஆங்கில செய்தித்தாள் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

சிவில் சேவையாளர் என்ற அடிப்படையில் லலித் வீரதுங்கவின் விளக்கங்கள்தவதே அழுத்தங்களை குறைக்கக்கூடும் என்ற அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரசாங்கம் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கின்ற விடயங்கள் யாவும் உறுதிப்படுத்தப்படும்வகையில் காரணங்கள் முன்வைக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு நிலவுகிறது.

எனவே அதனை கருத்திற்கொண்டே லலித் வீரதுங்க மனித உரிமைகள் பேரவைக்கு செல்லவுள்ளார்.

வடமாகாண முதலமைச்சர் அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள் சர்வதேசத்தில் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

இராணுவ ஆளுநர் ஒருவர் வடமாகாணத்தை நிர்வகிக்கிறார் இராணுவ பிரசன்னம் குறையவில்லை. இராணுவம் பல பொதுத் துறைகளிலும் தலையிடுகிறது போன்ற குற்றச்சாட்டுக்களே அவையாகும்.

இந்நிலையில் வழமையாக அமைச்சர் மஹிந்த சமரசிங்கவே மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் சார்பில் பங்கேற்று வந்தார்.

ஆனால் அவர் அரசாங்கத்தின் ஒரு பிரதிநிதி என்ற அடிப்படையில் சர்வதேசத்தால் பார்க்கப்பட்டது.

இந்நிலையில் அண்மையில் இலங்கைக்கு வந்துசென்ற ஜப்பானின் இலங்கைக்கான விசேட பிரதிநிதி யசூசி அகாசியின் யோசனையின் பேரிலேயே லலித் வீரதுங்க அந்த இடத்தை நிரப்புவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவில் அதிகாரி ஒருவர் கூறும் கருத்துக்களை பொறுத்தவரையில் அவை இலங்கை மீது சர்வதேசத்தின் அழுத்தங்களை குறைக்கக் கூடும் என்று அகாசி தமது விஜய இறுதியில் தெரிவித்திருந்ததாக குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

# புலம்பெயர்ந்த மக்கள் நாடு திரும்ப வேண்டும்

## பாதுகாப்பு செயலாளர் அழைப்பு

(கொழும்பு)

இலங்கை தற்பொழுது கடந்த காலங்களில் எதிர்கொண்ட பிரச்சினைகளை சமாளித்து விரைவான மற்றும் சமமான வளர்ச்சியை நோக்கி செல்ல தயாராக உள்ளதால் நாட்டில் இருந்து புலம்பெயர்ந்த சகல சமூகத்தினரும் நாடு திரும்ப வேண்டும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், அறிவுசார்ந்த தொழிலாளர்கள் மற்றும் ஏனைய தொழில்சார் நிபுணத்துவம் பெற்றவர்கள் இலங்கையில் வசிக்கவும் தொழில்களை மேற்கொள்ளவும் தேவையான உகந்த சூழலை அரசாங்கம் உருவாக்க ஆர்வமாகவுள்ளது.

1980 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை நாட்டில் காணப்பட்ட நிச்சயமற்ற நிலைமை காரணமாக சிறந்த மற்றும் பிரகாசமான எதிர்காலத்தை அடைய வேண்டும் என்பதற்காக பல திறமைசாலிகள் நாட்டைவிட்டு பிற நாடுகளுக்கு புலம் பெயர்ந்தனர்.

மோதல்கள் காரணமாகவும் உயர்கல்விக்காகவும் சிறந்த இலாபகரமான தொழிலை பெறவும் சிறந்த தரமான வாழ்க்கையை அனுபவிப்பதற்காகவும் இவர்கள் நாட்டை விட்டு சென்றமை நாட்டுக்கு ஒரு பேரிழப்பாகும்.

நாட்டில் இருந்து வெளியேறிய சகல சமூகத்தினரும் தமது தாய் நாட்டுக்கு திரும்பக் கூடிய சூழல் ஏற்பட்டுள்ளதால், திரும்புவது குறித்து இவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றார். (அ-2)

# அடுத்த தேர்தல் குறித்து குழம்பி போயுள்ள ஐ.தே.க

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களில் கூட்டணி அமைத்து போட்டியிடுவதா அல்லது தனித்து போட்டியிடுவதா என்பது தொடர்பில் ஜனவரி மாதம் நடைபெறும் செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் தீர்மானிக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

வேறு அரசியல் கட்சிகளுடன் கூட்டணி அமைத்து போட்டியிடுவது தொடர்பாக இதுவரை இணக்கப்பாடுகள் எதனையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை என இந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும் அண்மையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 55 ஆவது தேசிய மாநாட்டில் பேசிய அந்த கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, அடுத்த தேர்தல்களில் எதிர்க்கட்சியில் உள்ள அரசியல் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கூறியிருந்தார்.

இதனிடையே ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க லண்டன் நோக்கி புறப்பட்டுச் சென்றுள்ளார். (அ-2)

# முற்றோதல்

அகில இலங்கை திருமுறை மன்றம் மாதந்தம் தோறும் நடத்தி வரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறை பாராயணம் இன்று புதன்கிழமை காலை 7 மணிதொடக்கம் யாழ்ப்பாண சத்திரச்சந்தி ஸ்ரீஞான வைரவர் தேவஸ்தானத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடை பெறவுள்ளது.

இதில் அனைவரும் பங்குபற்றி பயன் பெறுமாறு மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி கேட்டுள்ளார். (அ-2)


# நிர்வாக தெரிவுகளை அனுப்பி வையுங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள் 2014 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபைத் தெரிவை எதிர்வரும் ஜனவரி மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி விபரங்களை அனுப்பி வைக்குமாறு யாழ்.மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன் கேட்டுள்ளார்.

அதில் புதிய நிர்வாக சபை தெரிவு அறிக்கை இறுதி கணக்கு விபரம், வங்கி இலக்கம், வங்கிபெயர், முகவரி, தலைவர்/செயலாளர்/பொருளாளர் பெயர், தனிப்பட்ட முகவரி (வீட்டு முகவரி), தொலைபேசி இலக்கம் வீடு, கைத்தொலைபேசி இலக்கம், தற்போது உள்ள பதிவு இலக்கம், பதிவு செய்த திகதி, மாதம், ஆண்டு, வட்டாரம், கிராம அலுவலர் பிரிவு ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)





நெடுந்தீவு முகிலனின் பார்கரன் குறும்பட வெளியீடு அண்மையில் யாழ்.ராஜா திரையரங்கில் இடம்பெற்றது. இதன்போது படக்குழுவினர் இறுவெட்டை வெளியிட்டு வைப்பதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் வழக்குகளின் விசாரணையை தொடர்ந்து நடத்துவோம் காங்கிரசுக்கு ஆம் ஆத்மி எச்சரிக்கை



காங்கிரஸ் ஆதரவுடன் ஆட்சி அமைத்தாலும் பொதுநலவாய போட்டி முறைகேடுகள் உள்ளிட்ட ஊழல் வழக்குகளின் விசாரணையை தொடர்ந்து நடத்துவோம் என ஆம் ஆத்மி கட்சி தெரிவித்துள்ளது.

டில்லியில் காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் ஆட்சி அமைக்க துணை நிலை ஆளுநருடன் விருப்பம் தெரிவித்த பின்னர் இதனை ஆம் ஆத்மி கூறியுள்ளது. காங்கிரஸ் ஆதரவு கொடுத்தாலும் ஆட்சியில் அமர்ந்தவுடன் முதல் வேலையாக பொதுநலவாய முறைகேடு உள்ளிட்டவைகள் விசாரிப்போம் என சோனியா காந்திக்கு எழுதிய கடிதத்தில் கேஜ்ரிவால் கூறியுள்ளதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

ஊழல் வழக்குகளை விசாரிப்பதன் மூலம் ஆட்சி கவிழும் வாய்ப்பு இருப்பதாகவும் ஆம் ஆத்மி கூறியுள்ளது. இதனிடையே ஆம் ஆத்மிக்கு நிபந்தனையற்ற ஆதரவு அளிப்பதாக கூறிய காங்கிரஸ் மக்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றினால் மட்டுமே அக்கட்சிக்கு அளித்து வரும் ஆதரவு தொடரும் என்று கூறியுள்ளது.

இதனிடையே, கேஜ்ரிவால் ஆட்சி அமைக்க வாழ்த்து தெரிவித்துள்ள அன்னா ஹசாரே, ஆம் ஆத்மி அரசு நீண்ட காலம் இருப்பது சந்தேகம் என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஆம் ஆத்மி கட்சியின் முக்கிய தலைவர்கள் டில்லியில் ஒன்றுகூடி அமைச்சர்களின் பட்டியலை தயார் செய்ய வுள்ளனர். நாளைவியாழக்கிழமை டில்லியின் 7ஆவது முதல்வராக கேஜ்ரிவால் பதவி ஏற்பார். (2)

# இருநாட்டு மீனவர்களின் பேச்சுவார்த்தைக்கு தமிழக அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்

## சுதர்சன் நாச்சியப்பன் தெரிவிப்பு

**(காரைக்குடி)— இந்திய-இலங்கை மீனவர் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைக்கு தமிழக அரசு உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று மத்திய வர்த்தக மற்றும் தொழிற்றுறை இணையமைச்சர் இ.எம்.சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்தள்ளார்.**

காரைக்குடியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொள்ள வந்த போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் மீனவர்கள் பிரச்சினைக்கு மத்திய அரசு முக்கியத்துவமளித்து வருகிறது. இலங்கை மீனவர்கள் 203 பேர் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலையிலும் மற்றைய சிறைகளிலும் அடைக்கப்பட்டிருக்கும் தமிழக மீனவர்களுக்கு உதவ கொழும்பிலுள்ள துணைத்தூதரக அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்குமதிருகோணமலைக்குமெ அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அங்கு தமிழக மீனவர்களைப்பாதுகாப்பதற்கும்உணவு மற்றும்தேவையானமருந்து போன்றவை கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.




இரண்டு தரப்பு மீனவர்களையும் சென்னையில் அழைத்து பேச்சுவார்த்தையைத் தொடங்க தமிழக அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். தமிழக அதிகாரிகளை மத்திய அரசு அதிகாரிகள் பேச்சுவார்த்தைக்கு அழைக்கும்போது வரவில்லை. இதனால் தமிழக அரசின் நிலைப்பாடு பற்றி மத்திய அரசு புரிந்து கொள்வதில் தாமதம் ஏற்படுகிறது.

எனவே, உடனடியாக தமிழக அரசு பேச்சுவார்த்தைக்கு நாள் குறிக்க வேண்டும். அதற்கு மத்திய அரசு உதவிசெய்யத் தயாராக இருக்கிறது. இதனை கால தாமதம் செய்யாமல் டிசெம்பர் மாதம் இறுதி அல்லது ஜனவரி மாதம் முதல் வாரத்துக்குள் பேச்சுவார்த்தைக்கான இடத்தையும், நேரத்தையும் குறிப்பிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மக்களவைத் தேர்தல் கூட்டணியை தேசிய தலைமை முடிவு செய்யும். அதே நேரத்தில் தமிழகத்திலுள்ள பொறுப்பாளர்கள், எங்களை அணுகும் கட்சிகள் குறித்து மத்திய தலைமைக்கு தெரிவித்துக் கொண்டே இருக்கிறோம் என்றார். (2)

# கனடாவில் பனிப்புயல்; விமானங்கள் இடைநிறுத்தம்

## 11 பேர் உயிரிழப்பு



(ரொரண்டோ)

கனடாவில் ஏற்பட்டுள்ள பனிப்புயல் காரணமாக 11பேர் உயிரிழந்துள்ளதாகசெய்திகள்தெரிவிக்கின்றன.

கனடாவில் ஏற்பட்டுள்ள பாரிய பனிப்புயல் காரணமாக இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கனடாவின் பெரிய நகரமான ரொரண்டோ மற்றும் கிழக்கு பிராந்தியங்கள் அதிகளவில் பாதிப்படைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பனிப்புயல் காரணமாக 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் மின் விநியோகமின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுதவிர, பொதுப் போக்குவரத்து சேவைகள் சில பகுதிகளில் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

பல விமான சேவைகள் இரத்து செய்யப்பட்ட நிலையில், ரொரண்டோ, ஒட்டாவா மற்றும் மொன்றியல் விமான நிலையங்களில் ஏராளமான பயணிகள் தமது பயணத்தை தொடரமுடியாத நிலையில சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

ரொரண்டோ நகரத்தின் வரலாற்றில் இப்படியான பனிப்புயல் ஒன்றை முன்னர் சந்திக்கவில்லை என்று ரொரண்டோவின் முதல்வர் ரொப் போட் தெரிவித்துள்ளார்.

இந்தப் பனிப்புயல் காரணமாக கனடா மற்றும் அமெரிக்காவின் எல்லைப்பகுதிகளில் குறைந்தது 11 பேர் உயிரிழந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (2)

# உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்டனர் மீனவர்கள்

நாகையில் காலவரையறையற்ற உண்ணாவிரதப்போராட்டத்தில ஈடுபட்டு வந்த 3 ஆயிரம் மீனவர்கள், முதலமைச்சரின் உறுதி மொழியை ஏற்று தங்களது போராட்டத்தை நேற்று கைவிட்டனர்.

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள 210 தமிழக மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி நாகை மற்றும் புதுகையைச் சேர்ந்த 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடந்த சனிக்கிழமை முதல் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்நிலையில், மீனவப்பிரதிநிதிகள் நேற்று முன்தினம் சென்னையில்தமிழக முதல்வரை சந்தித்துப பேசினர். அப்போது முதல்வர், மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக அளித்த உறுதி மொழியை ஏற்று, தங்களது போராட்டத்தை கைவிடுவதாக அறிவித்துள்ளனர்.(2)



பாடசாலை மாணவர்கள் நத்தார் தாத்தா வேடமணிந்து கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடியதைப் படத்தில் காணலாம்

# முஷாரப் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்



தேசத்துரோக வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராக சென்ற பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தார்.

பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதியான பர்வேஷ் முஷாரப் மீது பெனாசிர் கொலை வழக்கு, தேசத்துரோக வழக்கு உட்பட 5 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

இதில் 4 வழக்குகளிலிருந்து பிணை பெற்ற அவர், நேற்று தேசத்துரோக வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜராக சென்று கொண்டிருந்தார்.

அப்போது வழியில் தேசிய சுகாதார நிறுவனம் அருகில் 5 கிலோ வெடிமருந்துகளுடன் 2 துப்பாக்கிகளும் ஒரு பையில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து அப்பகுதிக்கு வெடிகுண்டு நிபுணர்கள் விரைவாக வரவழைக்கப்பட்டு வெடிகுண்டை செயலிழக்க செய்தனர்.

இதனையடுத்து நீதிமன்றில் ஆஜரான அவரது சட்டத்தரணி எனது கட்சிக்காரரின் உயிருக்கு ஆபத்து இருப்பதால் அவர் நீதிமன்றில் இன்று ஆஜராக மாட்டார் என்று நீதிபதியிடம் தெரிவித்தார்.

வாய்மொழியாக நீங்கள் இவ்வாறு கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறிய நீதிபதி இது தொடர்பாக தனிமனுதாக்கல் செய்யுங்கள் என்று சட்டத்தரணிக்கு அறிவுறுத்தினா. இதனையடுத்து முஷாரப் காலை 11 மணிக்கு நீதிமன்றத்தில் தாமதமாகவே ஆஜர்படுத்தப்பட்டார்.

இவ்வழக்கை விசாரித்து வரும் பைசல் அராப் தலைமையிலான 3 நபர் கொண்ட பெஞ்ச், எதிர்வரும் ஜனவரிமாதம் முதலாம் திகதிக்கு வழக்கை ஒத்தி வைத்தனர். (2)

# தாய்லாந்தில் வேட்பாளர் பட்டியலை தாக்கல் செய்த தலைவர்கள் முற்றுகை

தாய்லாந்தில் நாடாளுமன்றத் தேர்தலையொட்டி வேட்பாளர்கள் பட்டியலை தாக்கல் செய்ய வந்த பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களை எதிர்க்கட்சியினர் முற்றுகையிட்டு தடுக்க முயன்றனர்.

தாய்லாந்தில் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியலை அரசியல் கட்சிகள் தாக்கல் செய்வதற்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கடைசி நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக, பாங்கொக்கில் உள்ள தாய்லாந்து-ஜப்பான் விளையாட்டு மைதானத்தில் சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதையறிந்த எதிர்க்கட்சியினர், நேற்று முன்தினம் காலையில் விளையாட்டு மைதானத்தில்குவிந்தனர். கட்சி வேட்பாளர்கள் பட்டியலைப் பதிவு செய்ய வந்த பல்வேறு அரசியல கட்சியினரை அவர்கள் தடுத்து நிறுத்தினர்.

ஆனால், பிரதமர் யிங்லக் ஷினவத்ராவின் பியூ தாய் கட்சியினர், எதிர்க்கட்சியினர் வருவதற்கு முன்பே அதிகாலை 4 மணிக்கே வந்து தங்களது வேட்பாளர்கள் பட்டியலை பதிவு செய்ததாக அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் புரோம்பாங்க் நோப்பரிட் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினரின் போராட்டத்தால், ஏராளமானோர் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் வேட்பாளர்கள பட்டியலை பதிவு செய்தனர். இதையடுத்து எதிர்க்கட்சியினர் பொலிஸ் நிலையத்தையும் முற்றுகையிட்டு, அவர்களை வெளியில்வர விடாமல் தடுத்தனர்.

இருந்தபோதிலும், அன்றைய தினம் காலை 8.30 மணிவரை 35 அரசியல் கட்சிகள் தங்களது வேட்பாளர்கள் பட்டியலை பதிவு செய்திருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தாய்லாந்து பிரதமர் யிங்லக் ஷினவத்ராவை பதவி விலக வலியுறுத்தி, தேசியக் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் நீண்ட நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டு.இந்து வாலிபர் சங்கத்தால் முல்லை. மாணவர்களுக்கு உதவி



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் மறைந்த மு.சிவபால னின் நினைவாக மாணவர்களுக் கான உதவிகள் முல்லைத்தீவு பிர தேச செயலக மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இதில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் ஊக் கிவிப்பு மற்றும் வறிய குடும்பங்களுக் கான சுயதொழில் முயற்சிக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன.

தாய், தந்தையை இழந்த 43 மாணவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் வங்கியில் வைப்பிலிட்டு வங்கி புத்தகங்கள் அந்தந்த மாண வர்களிடம் கையளிக்கப்பட்டன.

இவர்களின் கல்வி நடவடிக் கைக்காக இச்சங்கத்தால் தொடர்ந் தும் மாதாந்தம் பணம் வைப்பிலிடப் படவுள்ளது.

அத்தோடு இச்சங்கத்தின் வேண்டு கோளுக்கு இணங்க பல்கலைக் கழக தமிழ் மாணவர்களால் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான கற் றல் உபகரணங்கள் 43 மாணவர் களுக்கும் வழங்கப்பட்டன.

சுயதொழில் முயற்சிக்கான ஊக்குவிப்பு பணமாக 5 குடும்பங் களுக்கும் மொத்தமாக ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இச் செயற்பாடுகளுக்கு இச்சங் கத்தின் அங்கத்தவர்களும் புலம் பெயர்ந்து வாழும் உறவுகளும் பங் களித்து வருகின்றனர்.

இச் சங்கத்தின் இச் செயற்பாடு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என இந்து வாலிபர் சங்க உறுப் பினர் த.ரவீந்திரன் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் அன்ரனி ஜெகநா தன், இலங்கைக்காப்புறுதிக் கூட்டுத் தாபன யாழ்.கிளை சந்தைப்படுத் தல் முகாமையாளர் அ.சுபேசன் மற்றும் மு.திருக்குமரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ)

# செயலகம் மீது தாக்குதல் நடத்தியோருக்கு பிணை

மன்னார் நானாட்டான் பிரதேச செயலகம் மீது தாக்குதல் மேற் கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட 21 பேருக்கும் மன்னார் நீதவான் நீதி மன்றத்தினால் நேற்று முன்தினம் பிணை வழங்கப்பட்டுள்ளது.

நானாட்டான் பிரதேச செயலகம் மீது கடந்த 9 ஆம் திகதி திங்கட்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலுடன் தொடர் புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பொன்தீவு கண்டல் கிராமத் தைச் சேர்ந்த 65 பேரை முருங்கன் பொலிஸார் கைது செய்திருந்தனர்.


கைது செய்யப்பட்ட 65 பேரை யும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட போது 18 பேர் விளக் கமறியலில் வைக்கப்பட்டு ஏனைய 47 பேரும் பிணையில் விடுவிக்கப் பட்டனர்.


மேலும் முருங்கன் பொலிஸாரி னால் தேடப்பட்டு வந்த மூவர் மன் னார் பொலிஸில் சரணடைந்தனர். அந்த மூவர் உட்பட 21 பேரும் நீதி மன்ற உத்தரவின் பேரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்ட னர்.

பின்னர் 21 பேரும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது தலா 10 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சரீரப்பிணையிலும் செல்லுமாறும் எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி மன்றில் ஆஜ ராகுமாறும் நீதவான் ஆனந்தி கன கரட்ணம் உத்தரவிட்டார்.

இவர்கள் 21 பேர் சார்பாகவும் சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனித நாயகம் உட்பட சட்டத்தரணிகளான பிரிமூஸ் சிறாய்வா, ஜோன்தாசன் துசித், எஸ்.ஜெபநேசன் லோகு ஆகி யோர் மன்றில் ஆஜராகியிருந் தனர். (அ-9-250)

# வலம்புரி செய்தியையடுத்து மதகு அமைக்கப்படுகிறது





(கிளிநொச்சி)

அம்மாள் குளம் கிராமத்தையும் பாரதி கிராமத்தையும் இணைக்கும்




வீதியில் காணப்பட்ட பாரிய குழியை மூடி மதகு அமைக்கும் பணிகள் வலம்புரி செய்தியை அடுத்து மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்குறித்த வீதியில் பாரிய குழி காணப்பட்டது. இதனால் மழை காலங்களில் நீர்தேங்கி நிற்பதனால் பல விபத்துக்கள் தொடர்ந்து ஏற்பட் டன.

அதுமட்டுமின்றி கிளி.விவேகா நந்தா வித்தியாலயம் மற்றும் கிளி. பாரதி வித்தியாலய மாணவர்கள் இவ் வீதியினாலேயே பயணித்து வந்த நிலையில், பல அசௌகரி யங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இவ்வாறாக காணப்பட்ட பாரிய குழியை இல்லாமல் செய்ய உரிய வர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வலம்புரி வலியுறுத்தி இருந்தது.

இதனையடுத்து, கிளி. அம்பாள் குளம் சக்தி சனசமூக நிலையத்தி னர், கரைச்சிப் பிரதேச சபையின் துணைத் தவிசாளர் நகுலேஸ்வர னின் கவனத்திற்கு கொண்டு வந்த னர்.

இந்நிலையில் சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பாரிய குழியை மூடி மதகு அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (அ-9)

# தேர்தல் கடமை கொடுப்பனவு இதுவரை கிடைக்கவில்லை

வடக்கு மாகாணசபை தேர்தலின் போது துணுக்காய் கல்வி வலயத்தி லிருந்து கடமையாற்றிய அதிபர், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்க ளுக்கான கொடுப்பனவு இன்னும் வழங்கப்படவில்லையெனவும் ஏனைய திணைக்களங்களிலிருந்து கடமையாற்றியவர்களுக்கு இக்கொடுப் பனவு வழங்கப்பட்டு பல நாட்கள் ஆகிவிட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்று தெரிவாகிய வடமாகாண சபையின் மூன்றாவது அமர்வுக் கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இச்சபை தெரிவுக்கு கடமையாற்றிய துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ளவர்களுக்கான கொடுப்பனவு இதுவரை வழங்கப் படவில்லை.

இவர்கள் கடமையாற்றியதற் கான அத்தாட்சிப் பத்திரங்களை பூரணப்படுத்தி முல்லை.மாவட்ட அரச செயலகத்தில் ஒப்படைத்தா கவும் ஆயினும் கொடுப்பனவு கிடைக்கவில்லை எனவும் பாதிக் கப்பட்ட உத்தியோகத்தர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (அ-9-15)

# உலக வங்கியின் மாணவர்களுக்கான நிதி திரும்பிச் செல்லும் நிலையில்

## தடுத்து நிறுத்தக் கோரிக்கை

(மல்லாவி)

உலக வங்கியின் நிதி அனுசர ணையுடன் கல்வி அமைச்சினால் வடமாகாண கல்வித் திணைக்களத் தின் கீழுள்ள 12 கல்வி வலயங்களி லுள்ள பாடசாலைகளுக்கு ஒதுக்கப் பட்ட மாணவர் கற்றல் செயற்பாடு களுக்கான தர உள்ளீடு கொள்வன விற்கான நிதி பல கல்வி வலயங் களில் 400 இலட்சம் ரூபாவுக்கு மேல் செலவு செய்யாது இருப்பதாக வும் இவை திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கல்வியியலா ளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரிய வருவ தாவது,

உலக வங்கியின் நிதி அனுசர ணையுடன் கல்வி அமைச்சு பாட சாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான கற்றல் உபகரணக் கொள்வனவிற்கென பாடசாலை களின் தரத்திற்கு ஏற்ப ஒவ்வொரு வருடமும் பல மில்லியன் ரூபாய் களை வழங்கி வருகின்றது.

இவ்வாறு வழங்கப்படும் நிதி வலயக் கல்வித் திணைக்களங்க ளூடாக பகிர்ந்தளிக்கப்படுகின்றபோது, பாடசாலைகள் இதற்கான ஆசிரி யர்கள் மற்றும் மாணவர்கள் அடங் கிய குழுவொன்றை உருவாக்கி பொருட்கள் கொள்வனவு செய்து கொள்வனவு தொடர்பான விபரங் களையும் கோவைப்படுத்துகின் றது.

ஆயினும் சில பாடசாலைகளில் அதிபர்கள், ஆசிரியர்கள் ஒரு சிலரு டன் சேர்ந்து தரமற்ற பொருட்களை கொள்வனவு செய்வதுடன், தரகு பணத்தைப் பெற்ற சம்பவங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இன்னொரு பகுதி பாடசாலை கள் வருடம் முடிந்தும் கொள்வனவு செய்யாமல் இருப்பதனால் பல நூற்றுக்கணக்கான இலட்சம் ரூபா பணம் வலயக் கல்வித் திணைக் களத்திற்கு திரும்பவுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

இவ்வாறு திரும்புகின்ற நிதிக ளில் யாழ்.மாவட்டத்திலுள்ள ஒரு கல்வி வலயத்தில் 90 இலட்சம் ரூபா வும் முல்லை.மாவட்டத்திலுள்ள ஒரு கல்வி வலயத்தில் 70 இலட்சம் ரூபா வும் இதேபோன்று ஏனைய வல யங்களில் பல இலட்சம் ரூபாய்கள் திரும்பிச் செல்லவுள்ள தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவை தொடர்பாக வடக்கு மாகாண கல்வி அமைச்சு துரிதமாக செயற்பட்டு இந் நிதி திரும்பிச் செல் லாது தடுப்பதோடு, இவ்வருட முடி வுக்குள் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற் கொண்டு உதவவேண்டுமென கல்வியியலாளர்கள் பெற்றோர் களும் கோரிக்கை முன்வைத்துள் ளனர். (அ-9-15)

# வவு.தமிழ் சங்கத்தின் திருவாசக விழா

(குருமன்காடு)

வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்தும் திருவாசக விழா எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா ஆதிவிநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழ்ச் சங்கத் தலைவர் த.சிவகு மாரன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் மங்கல விளக்கினை தம்பையா சிவபாலன் மனோஞ் சிதம் தம்பதியர் ஏற்றிவைக்க திரு வாசகத்தினை க.குலேந்திரன் ஓத வுள்ளார்.

தமிழ் வாழ்த்தினை வவுனியா இலங்கைத் திருச்சபை தமிழ் மகா வித்தியாலய இசைத்துறை ஆசி ரியை திருமதி கணேசநாதன் தாட் சாயணியும் தொடக்கவுரையினை கிறைநகர் மணிவாசகர் சபையின் தலைவர், பண்டிதர் மு.சு.வேலாயுத பிள்ளை நிகழ்த்தவுள்ளார்.

இதில் சிறப்பு நிகழ்வாக நான் பாடுங்கால் என்னும் மகுடத்தில் இடம்பெறும் கருத்துக்களில் விலங்கு மனம் எனும் பொருளில் சிவகஜ னும் சித்தம் அழகியர் எனும் பொரு ளில் தமிழ்மணி கே.கே. அருந்த வராஜவும் அடியாரிற் கூட்டிய அதி சயம் என கவியெழில் திருமதி த.நிறைமதியும் வான்கருணை வள்ளல் என ல.சதீஸ்குமாரும் யார் கொலோ சதுரர் எனும் பொரு ளில் சி.வரதராஜனும் புகழில் திக ழும் அழகன் எனும் பொரு ளில் சொல் வேந்தன் செ.ஸ்ரீநிவாச னும் கருத்துரைகள் வழங்கவுள்ளனர்.

இவ் விழாவில் திருவாசகத் திரு முறைக்குத் தொண்டாற்றி வரும் கலாபூஷணம் வை.செ.தேவராசா, நாதஸ்வர வித்துவான் கலாபூஷ ணம் அ.பாலச்சந்திரன் ஆகியோர் தமிழ்ச் சங்கத்தால் கௌரவிக்கப் படவுள்ளார்கள். (அ-9-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அனல் பறக்கும் உரைகள்; ஆக்கபூர்வமான பணிகள் எங்கே?

வடக்கு மாகாண அரசின் பணிகள் குறித்த மக்களின் கருத்துக்கள் என்ன என்பதை அறிவது அவர்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண அரசின் தலையாய கடமையாகும்.

அந்த வகையில் வடக்கு மாகாண அரசு தமிழ் மக்களின் கருத்து நிலைகளை கண்டறிய வேண்டியது அவசியமாகும்.

அவ்வாறானதொரு நிலைமையில் வடக்கு மாகாண அரசு தனது பணிகளை ஊடகங்களின் ஊடாக செய்வதை மட்டுமே அவதானிக்க முடிகின்றது.

அதாவது பொது மேடைகளில் வடக்கு மாகாண அரச பிரதிநிதிகள் ஆற்றுகின்ற உரைகளும் தனித்தனியாக அவர்கள் விடுக்கின்ற அறிக்கைகள் மற்றும் பேட்டிகளுமாக அனைத்துமே ஊடகங்களின் ஊடாக பரிணமிக்கின்றதே தவிர செயற்பாடாக-செயல்வடிவமாக நடந்தேறிய பணிகள் என்று குறித்துக் கூறுவதற்கு எதுவும் இல்லை என்று கூறலாம்.

வடக்கு மாகாண அரசு பதவியேற்றுள்ள குறுகிய காலத்தினுள் எதனையும் முழுமையாக செய்து முடிக்க முடியாது என்று யாரேனும் கூறினால் அதனை ஒட்டு மொத்தமாக நிராகரிக்க முடியாது என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும். ஆனால் அதற்காக வடக்கு மாகாண அரசு பதவியேற்ற இக் குறித்த காலப் பகுதிக்குள் தான் முன்னெடுக்க வேண்டிய கடமைப்பாடுகளை பட்டியல் படுத்த வேண்டும் என்பதும் அதற்கான திட்டமிடல்களைத் தயார் செய்வதும் அவசியமாகும்.

எனினும் வடக்கு மாகாண அரச பிரதிநிதிகள் இதுவரை தங்கள் அலுவலகங்களில் முழுமையாக குந்தியிருந்து நிர்வாக பணிகளை மேற்கொள்வதில் கவனம் செலுத்தவில்லை என்பதை சொல்லித்தான் ஆக வேண்டும்.

அவர்களை பொறுத்தவரை இதுவரை காலமும் ஆளுநர் பங்கேற்ற விழாக்களை தாங்கள் கைப்பற்றுவதே வடக்கு மாகாண அரசின் முதற் பணி என்பது போலக் காட்டிக் கொள்கின்றார்கள்.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறுவதற்கு முன்னதாக வட பகுதியில் நடந்த அத்தனை விழாக்கள் வைபவங்களில் ஆளுநரே பிரசன்னமாகியிருந்தார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுத்தால் அந்த விழா கான்சல் என்பதாகவே நிலைமை இருந்தது.

இந்நிலையில் நாங்கள் கடந்த கால விழாக்களுக்கும் சேர்த்து இப்போது விழாக்கள் கொண்டாடியாக வேண்டும் என்று வாதிட்டாலும் அதனை நாம் மறுதலிக்கப் போவதில்லை.

ஏனெனில் வடக்கு மாகாண அரசின் உருவாக்கம் ஆளுநரின் கழுத்து மாலையை இடம் மாற்றிவிட்டது என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும். அதற்காக வடக்கு மாகாணத்தின் ஒட்டுமொத்த அரசும் மேடைகளில் குந்தியிருந்து முழு நேரத்தையும் செலவிட்டால் மாலை மட்டுமே எங்களுக்கு மிஞ்சும்.

எனவே மாலை கலாசாரத்துக்கு ஓரளவு இடம் வைத்துக் கொண்டு பெரும் பகுதி நேரங்களை நிர்வாக பணியிலும் மக்களின் குறைகளை கேட்டு அவற்றை நிவர்த்திப்படுத்துவதிலும் செலவிட வேண்டும்.

அப்போதுதான் மாகாண அரசின் பயனை தமிழ் மக்கள் அனுபவிக்க முடியும்.

# பதவி ஆசையினாலேயே பட்ஜெட் தோற்கடிப்பு!

## சுரேஸ் எம்.பி ஆதங்கம்

வரவு செலவுத்திட்டத்தை சிலர் தோற்கடிப்பதற்கு பதவி ஆசையே காரணமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

வவுனியா நகர சபையின் கலாசார மண்டபத்தில் நேற்று காலை 9 மணி முதல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத்திட்ட தோல்விகள் குறித்து கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன்,

தாம் தவிசாளராக வரவேண்டும் உதவித் தவிசாளராக வரவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே சிலர் வரவு செலவுத்திட்டத்தை தோற்கடிக்கின்றனர்.

வரவு செலவுத்திட்டத்தில் குறைபாடுகள் உள்ளதாகவோ அல்லது வேறு எந்த குற்றச்சாட்டுக்களும் உள்ளதாகத் தெரியவில்லை.

அவ்வாறு குற்றச்சாட்டுக்கள் வரும் போது கட்சி விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஆனால் கட்சியின் தலைமைப் பீடம் கூறியதன் பின்னரும் கூட குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, வல்வெட்டி த்துறை நகரசபை என்பவற்றின் பிரதிநிதிகளுடன் நானும் மாவை சேனாதிராஜா, சீ.வீ.கே. சிவஞானம் போன்றோரும் கலந்துரையாடி வரவு செலவுத்திட்டத்தை தோற்கடிக்கக் கூடாது என தெரிவித்தும் அங்கு மாறான வாக்களிப்பு இடம்பெற்றிருக்கின்றது.

வல்வெட்டித்துறையில் குலநாயகம் தலைமையிலும் வலிகாமம் கிழக்கில் ஈ.பி.டி.பியுடன் இணைந்து சில தமிழரசுக் கட்சியினர் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

எனவே இவர்களுக்கு கூட்டமைப்பை பலப்படுத்தி ஒற்றுமையாக கொண்டு செல்லும் நோக்கமல்ல. மாறாக தமது சுயநல நோக்கத்திற்காக தற்போதுள்ள தவிசாளர்களை தோற்கடித்து தாம் தவிசாளராக வரவேண்டும் நோக்கமே உள்ளது என்றார். (செ-11)

# இளையோருக்கு நல்வழிகாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

## வடக்கு கல்வி அமைச்சர் த.குருகுலராஜா

(சாவகச்சேரி)

பாடசாலை கல்வியை முடித்த இளைஞர்கள் கற்றுக் கொள்வதற்கான விடயங்கள் பலவுள்ள போதிலும் அவர்கள் அவற்றை மேற்கொள்ளாமல் சந்திகளிலும் கடை முன்றல்களிலும் கூடி நின்று செய்யதகாதனவற்றை செய்து வருகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளை இல்லாமல் ஒழித்து நல்வழிப்படுத்துவதற்கான முன்னாயத்தங்களை மேற்கொள் ளவுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்துள்ளார்.

அமெரிக்கன் சிலோன் மிஷன் நுணாவில் திருச்சபையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நல்லாயன் அரங்கத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

30 வருட காலம் இடம்பெற்ற யுத்தத் தினால் நாம் முக்கிய பலவற்றை இழந்துள்ளோம். அவற்றை மீள கட்டியமைக்க வேண்டும்.

அத்தோடு எம் இளம் சமூகம் வழி தடுமாறிப் போகாமல் இருப்பதற்கான வழிவகைகளையும் கண்டுபிடிக்க வேண்டியது கட்டாயமாகவுள்ளது.

இதற்கெல்லாம் விடை காண்பதற்கான மகாநாடு ஒன்றை விரைவில் கூட்ட இருக்கின்றோம்.

அத்தோடு எமது மாணவர்கள் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொள்வதில்லை என தெரிவிக்கப்படுகின்றது. எனவே இவற்றை நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

இன்னொருசாரார் ஞாயிற்றுக் கிழமைகளில் மாணவர்களுக்கான வகுப்புக்களை இல்லாமல் செய்ய வேண்டுமெனவும் மறுசாரார் மாணவர்களின் கல்வி எவ்விதத்திலும் பாதிக்கப்படக்கூடாது எனவும் கருத்துரைகளை வெளியிட்டு வருகின்றனர்.

அடுத்து பிறக்கப்போகின்ற புது வருடத்துடன் எல்லாவற்றிற்கும் வழி பிறக்கும் என்றார். (அ-9-29)

# யாழ். நங்கையின் சிலை நேற்று திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட யாழ். நங்கையின் சிலையை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்தார்.

யாழ்.மாநகரசபையின் ஒளிவிழா நிகழ்வு நேற்று மாநகரசபை வளாகத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர் யாழ்.நங்கையின் சிலையை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் உள்ளிட்ட மதகுருமார்கள், வடக்கு மாகாண சபையின் செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஷ், யாழ்.மாநகரசபையின் செயலாளர் செ.பிரணவநாதன் மற்றும் மாநகர சபையின் உறுப்பினர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கலை நிகழ்வுகளுடன் இடம் பெற்ற இந்த ஒளிவிழா நிகழ்வில் யாழ்.மாநகர சபையினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (அ-6)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## சூரியன் எழும் முன் நீ எழு!



❖ நான் பெரிய பணக்காரன் என்று ஒரு போதும் பெருமை பேசாதே. நட்சத்திரங்களின் பிரகாசத்தின் முன், மின்மினிப்பூச்சியின் கர்வம் காணாமல் போய் விடும். இயற்கையின் பேராற்றலின் முன், நம்முடைய செல்வமும் செல்வாக்கும் மிக அற்பமானவை.

❖ நீ இறைவனைத் தேட விரும்பினால், முதலில் மனிதனைத் தேடு. தெய்வீகசக்தி மற்ற எல்லா பொருளைக் காட்டிலும் மனிதனிடமே விசேடமாக இருக்கிறது.

❖ சூரிய உதயத்திற்கு முன் எழுந்து, அன்றாடப் பணிகளைத் தொடங்குபவன் வாழ்வில் வெற்றி பெறுவது போல, சிறுவயதில் இருந்தே ஆன்மீக நாட்டத்தை வளர்த்துக் கொள்பவன் இறைவனை அடைவது உறுதி.

❖ உலக ஆசைகளின் நடுவில் இருந்து கொண்டே மனதைக் கட்டுப்படுத்த பழகியவனே உண்மையில் வீரன்.

❖ மனத்தூய்மை பெற்றவனின் வாய் வார்த்தைகள் மந்திரம் போல காந்தசக்தி பெற்றுவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வதிரி டயமன்ஸ் வி.கழகத்தின் நூற்றாண்டு காற்பந்து போட்டி
# சென்.மேரிஸ் சம்பியன்

வதிரி டயமன்ஸ் அணியின் நூற்றாண்டு காற்பந்தாட்ட போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியனாகியது.

வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி தனது 100 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி வட மாகாண ரீதியில் அணிக்கு 7 பேர் கொண்ட காற்பந்தாட்டச் சுற்றுப் போட்டியினை தமது விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தி வந்தது.

வட மாகாணத்திலிருந்து 54 அணிகள் பங்குபற்றிய மேற்படி சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது.

இதில் மன்னார் சென்.லூசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியினை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

போட்டி ஆரம்பித்த 2 ஆவது



நிமிடத்தில் சென்.மேரிஸ் அணி வீரர் அருள்ராசா யூட் முதலாவது கோலினைப் பெற்றார். இதற்கு பதிலடி கொடுக்கும் விதத்தில் 8 ஆவது நிமிடத்தில் சென். லூசியன்ஸ் அணி வீரர் பிராங்கிளின் கோலொன்று அடித்தார்.

எனினும் 21 ஆவது நிமிடத்தில் சென்.மேரிஸ் அணி வீரன் யூட் தனதும், தனது அணிக்குமான இரண்டாவது கோலினைப் பெற்றுக் கொடுத்தார். தொடர்ந்து 23 ஆவது நிமிடத்தில் சென்.மேரிஸ் அணி வீரர் நிதர்சன் மேலும் ஒரு கோல் அடித்தார்.

இருந்தும் சென்.லூசியன்ஸ் அணி வீரன் எடிசன் பதிலுக்கு ஒரு கோல் போட்டார். முதல் பாதியாட்டத்தில் சென்.மேரிஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளும் தாக்குதல் ஆட்டம் மேற்கொண்டமையினால் கோலடிக்கும் வாய்ப்புக்கள் வீணாகின.

போட்டியின் 55 ஆவது நிமிடத்தில் சென்.மேரிஸ் அணி வீரர் நிதர்சன் ஒரு கோல் போட்டு சென். மேரிஸ் அணியின் வெற்றியினை உறுதி செய்தார்.

இறுதியில் சென்.மேரிஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக சென்.மேரிஸ் அணியின் அருள்ராசா யூட்டும், சிறந்த கோல் காப்பாளராக அதே அணியின் சார்ள்ஸ"ம், தொடர் ஆட்டநாயகனாக சென்.லூசியன்ஸ் அணியின் எடிசனும், தொடரில் அதிக கோல் அடித்த வீரராக யங் கென்றீஸ் அணியின் ஞானமும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன், இத்தொடரில் சிறந்த ஒழுக்கமிக்க அணியாக யாழ். விண்மீன் அணி தெரிவு செய்யப் பட்டுள்ளது.

சம்பியனாகிய சென்.மேரிஸ் அணிக்கு 50 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் இடம்பெற்ற சென். லூசியன்ஸ் அணிக்கு 20 ஆயிரம் ரூபாவும் பணப்பரிசில் வழங்கப் பட்டது. (க-23)

## வெற்றிக் கிண்ண தாச்சிப் போட்டி; ஆலடி சிந்து வி.கழகம் வெற்றி

வலி. தெற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் யாழ் மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தும் இளைஞர் வெற்றிக கிண்ண தாச்சி சுற்றுப் போட்டியின் காலிறுதிப் போட்டிகள் உடுவில் உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

அண்மையில் இடம்பெற்ற போட்டியில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணியும் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணியும் மோதின.

ஆரம்பம் முதலே போட்டியை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணி முதல் அரைப் பாதியின் போது 5:3 என்னும் புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையிலிருந்தது.

இரண்டாவது அரைப்பகுதியில் மேலும் 11 புள்ளிகளை தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி பெற பதிலுக்கு ஒரு புள்ளியையே மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணி பெற்றது.

இதனால் போட்டி நிறைவில் 16:4 என்னும் புள்ளிகளின் அடிப்படையில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது. (க-23)

## மத்தியஸ்தர்களுக்கான வகுப்புக்கள்

வலிகாமம் லீக்கின் புதிதாக பரீட்சைக்கு தோற்றவுள்ள உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை வகுப்புகள் இன்று காலை 9 மணிக்கு அளவெட்டி கோணேஸ்வரா கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இவர்களுக்கான விரிவுரைகளை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் உடற்கல்வி விரிவுரையாளர் சலுஜன் நடத்தவுள்ளார்.

எனவே, உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சைக்கு விண்ணப்பித்த சகலரையும் தவறாது சமுகம் அளிக்குமாறு வலிகாமம் லீக்கின் செயலாளர் யுவராஜ் அறிவித்துள்ளார். (க-9-23)

## ஸ்ரீமுருகன் அணியை வீழ்த்தியது திருநெல்வேலி முத்துத்தம்பி



கொம்மாந்தறை விளையாட்டுக் கழகத்தின் கிரிக்கெட் இறுதி போட்டிக்கு முத்துத்தம்பி விளையாட்டு கழகம் தகுதி பெற்றது.

கொம்மாந்தறை விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் அணிக்கு 8 வீரர்கள் 8 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி கொம்மாந்தறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இடம்பெற்ற அரையிறுதி போட்டியில் மல்லாகம் ஸ்ரீமுருகன் அணியும் திருநெல்வேலி முத்துத்தம்பி அணியும் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி முத்துத்தம்பி அணி 8 ஓவர்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் திருநெல்வேலி முத்துத்தம்பி அணி சார்பாக லவன் 40 ஓட்டங்களையும் ராஜ் 18, கிஷோ 14, கோபி, சுரேந்திரன், கவிந்தன் ஆகியோர் தலா 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மல்லாகம் ஸ்ரீமுருகன் அணி 8 ஓவர்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பந்துவீச்சில் திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டுக் கழகம் அணி சார்பாக் கிஷோ மற்றும் கோபி தலா 2 இலக்குகளையும் ராஜ், சுரேந்திரன் தலா 1 இலக்குகளையும் கைப்பற்றினர். இறுதி போட்டி இம் மாதம் 31 ஆம் திகதி இரவு கொம்மாந்தறை விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளது. (க-23)

## வலிகாமம் லீக் உதைபந்தாட்ட போட்டி

வலிகாமம் லீக்கில் பதிவு செய்த அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்தவுள்ளது.

இப் போட்டிகள் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகவுள்ளன. இப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் அணிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அவ்வாறு பங்குபற்ற விரும்பும் வலிகாம லீக்கினைச் சேர்ந்த அணிகள் லீக்கின் செயலாளர் இ.யுகராஜ்ஜினை தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி இன்று 25 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

அத்துடன் ஏனைய லீக்குகளிடம் போட்டிகளில் பங்குபற்றும் முகமாக வலிகாம லீக் அணியொன்றும் தெரிவு செய்யப்படவுள்ளது.

இதற்கு வலிகாம லீக்கில் அங்கத்துவம் பெற்ற அணிகள் ஒவ்வொன்றும் 5 வீரர்களை செயலாளரிடம் பரிந்துரை செய்யுமாறும் கோரப்பட்டுள்ளது.

அண்மையில் உருவாக்கப்பட்ட வலிகாம லீக்கின் முதற்சுற்றுப் போட்டியாக இது அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-23)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

தெல்லிப்பழை கிழக்கு கலைச் செல்வி இளைஞர்கழகம் ஏற்பாடு செய்து நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்று இடம்பெறவுள்ளது.

அணிக்கு ஆறு பேர் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட போட்டியாகவே இச் சுற்றுப்போட்டி இடம் பெறவுள்ளது.

இப் போட்டிகள் இம் மாதம் 28,29,30 ஆம் திகதிகளில் தெல்லிப்பழை கட்டுவன்புலம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இச் சுற்றுப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் அணிகள் இம் மாதம் 28ஆம் திகதிக்கு முன்பாக 0774646173. 0756362353 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

வெற்றி பெறும் அணிக்கு பெறுமதியான பரிசில்களும் வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படவுள்ளது.(க-23)

# பாகிஸ்தானுக்கெதிரான இலங்கை டெஸ்ட் குழாம் அறிவிப்பு



ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்குபற்றவுள்ள இலங்கை டெஸ்ட் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அஞ்சலோமத்தியூஸ்தலைமையில 16 பேர் கொண்ட குழாமாக இக்குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள குழாமில் 2012ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிரசன்ன ஜெயவர்தன முதன் முறையாகச் சேர்க்கப்பட்டுள்ளார். துடுப்பாடடத்தில் போதுமான திறமையை வெளிப்படுத்தாததன் காரணமாக அவர் அண்மைக்காலத்தில் சேர்க்கப் படாத போதிலும், அண்மைக்காலத்தில உள்ளூர்ப் போட்டிகளில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியதன் காரணமாக இக்குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தவிர, சுழற்பந்து வீச்சாளரான சச்சித்திர சேனநாயக்க, சகலதுறை வீரரான டில்ருவான் பெரேரா, வேகப்பந்து வீச்சாளரான விஷ்வா பெர்ணான்டோ ஆகியோர் இது வரை டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றாத வீரர்களாக இக்குழாமில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் ஓய்வுபெற்ற திலகரட்ண டில்ஷானுக்குப் பதிலாக விக்கெட் காப்பாளரான கௌஷால்சில்வா இக்குழாமில் இணைக்கப்பட்டுள்ளார்.

டிசெம்பர் 31ஆம் திகதி அபுதாபியில் ஆரம்பிக்கவுள்ள முதலாவது டெஸ்ட் போட்டியுடன் இந்தத் தொடர ஆரம்பிக்கவுள்ளது.

தலைவர் அஞ்சலோ மத்தியூஸ், டினேஷ் சந்திமால், குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்தன, கௌஷால சில்வா, திமுத் கருணாரத்ன, லஹிரு திரிமன்ன, பிரசன்ன ஜெயவர்தன, நுவான் குலசேகர, சுரங்க லக்மால், ஷமின்ட எரங்க, நுவான் பிரதீப், சச்சித்திர சேனநாயக்க, ரங்கன ஹேரத், டில்ருவான்பெரேரா, விஷ்வா பெர்னான்டோ. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தடை ஊசி...

தையை என்னிடம் தந்துவிட்டு வைத்தியரின் அறைக்குள் சென்றார்.

சிறிது நேரத்தில் அறையை விட்டு வெளியேவந்த மகள் ஊசி போடப்பட்டுள்ளதாக தெரிவித்தார். சிறிதுநேரம் அவ்விடத்தில் இருந்தோம். அப்போது தனக்கு மயக்கம் வருவதாகக் கூறி மகள் கீழே விழுந்து விட்டாள்.

இதன் பின்னர் நான் குறித்த வைத்தியரைச் சப்தமிட்டு அழைத்து மகளுக்கு கடுமையாக உள்ளது. என்ன நடந்தது எனக் கத்தினேன். வெளியில் வந்த வைத்தியர் தனது காரில் மகளை ஏற்றிக்கொண்டு வைத்தியசாலைக்குச் சென்றார்.

கற்பிட்டி வைத்தியசாலையில் வைத்தியர்கள் பலர் மகளுக்குச் சிகிச்சை வழங்கியதன் பின்னர் மகளை அம்புலன்ஸ் மூலம் புத்தளம் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று சிகிச்சை வழங்கினார்கள். பின்னர் எனது மகள் உயிரிழந்து விட்டதை நான் அறிந்து கொண்டேன் என்றும் அத்தாய் மேலும் தெரிவித்தார்.

இவ்வருடம் ஜனவரியில் திருமணம் முடித்து ஒரு குழந்தைக்குத் தாயான தனது மனைவி குழந்தையுடன் முதலாவது நத்தாரை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை செய்திருந்ததாக அவளது கணவரான தினேஸ் குமார அல்மேதா (வயது 26) தெரிவித்தார்.

உயிரிழந்தவரின் வழக்கு விசாரணை நேற்று பகல் புத்தளம் பதில் நீதவான் முஹம்மட் இக்பால் முன்னிலையில் புத்தளம் வைத்தியசாலையில் இடம்பெற்றபோது பிரேத பரிசோதனை அறிக்கை பெறுவதற்காக சிலாபம் சட்ட வைத்திய அதிகாரியிடம் பிரேதத்தை ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு அந்த தனியார் வைத்தியசாலையில் குறித்த கருத்தடை ஊசி பாவனையானது விசாரணை முடியும் வரை விற்பனை செய்வதற்கும் மற்றும் பாவிப்பதற்கும் நீதவானால் தடைவிதிக்கப்பட்டுள்ளது (செ-11)

## இலங். படை...

தமிழர்களுக்கு மத்திய அரசு துரோகம்தான் இழைத்து வருகிறது. இதில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தாலும், பாஜக ஆட்சிக்கு வந்தாலும் இலங்கைக்கு போர் கப்பல் கொடுத்து உதவுகிறார்கள்.

இந்திய அரசு இலங்கை ராணுவத்திற்கு பயிற்சி அளிப்பதை உடனே நிறுத்த வேண்டும். இல்லை என்றால் ஒட்டுமொத்த தமிழக மக்களின் எதிர்ப்பை சந்திக்க நேரிடும் என்றார். (செ-11)

## கடற்புலிகளின்...

கூட ஈடுசெய்ய முடியாது.

நாமே கிழக்கை கைப்பற்றினோம். கடற்புலிகளின் முதுகெலும்பையும் முறித்தோம்.

சந்திரிகா தலைமையிலான அரசாங்கமும் கூட விடுதலைப் புலிகளுடன் போரிட்டது. யாழ்ப்பாணத்தில் அவர்களைத் தோற்கடித்தது.

அவர் 2005இல் பணியில் இருந்து விலகிய போது, 1.8 ரில்லியன் ரூபா கடன்தான் இருந்தது.

ஆனால், ராஜபக்ஷ அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் வன்னியில் இருந்து புலிகளை அகற்றுவதற்கும், சில வீதிகளை அமைப்பதற்கும் 4.8 ரில்லியன் ரூபா கடன் பெறப்பட்டுள்ளது. என்றும் அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

## இந்திய மீனவர்...

மீண்டும் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். நீதவான் யு.எல்.எம். அஸ்ஹர் இம்மீனவர்கள் 32 பேரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை இம்மாதம் 12ஆம் திகதி வியாழக்கிழமை காலை 15 படகுகளுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 111 மீனவர்களும் நாளை வியாழக்கிழமை மீண்டும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இந்.வியாபாரிகள் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

இந்தியாவைச் சேர்ந்த இரு புடைவை வியாபாரிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தின் தலைமை பொலிஸ பொறுப்பதிகாரி சிறிநிக சஞ்சீவ ஜெயக்கொடி தெரிவித்தார்.

குறித்த நபர்கள் யாழ்.கல்வியங்காடு பகுதியில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றசாட்டின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய திருப்பூர் மாவட்டத்தை சேர்நத 24 வயதான நடராஜன் நாச்சிமுத்து மற்றும் 27 வயதான பழனிச்சாமி ஆனந்தபாகு ஆகியோரே இவ்வாறு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர். (செ-6)

## தனித்து போட்டியிட...

கூட்டணி சேர்ந்து தேர்தலில் போட்டியிட இதுவரையில் எந்தவொரு கட்சியும் அழைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும் தேர்தலில் தனித்து போட்டியிடவே உத்தேசித்துள்ளதாகவும், கட்சியின் அதி உயர் பீடம் இறுதித் தீர்மானம் எடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## விஜயலட்சுமிக்கு...

கொண்டு அவரது பூரண பாதுகாப்பை தான் உறுதி செய்துள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளர்.

அத்துடன் அரசாங்கத்தின் சிரேஸ்ட அரசியல் தலைவர்களின் கவனத்திற்கும் இவ்விடயத்தை தான் கொண்டு வந்துள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

வட மாகாணத்தின் பிரதம செயலாளர் ரமேஸ் விஜயலட்சுமி அவர்களை மிரட்டிப் பயமுறுத்துவதன் மூலம் அவரது உள உறுதியைக் குலைத்து அவரைப் பதவியிலிருந்து விலகிப்போகக் செய்வதே அத்தீயசக்திகளின் நோக்கமாகும் என ஆளுநர் தெரிவித்துள்ளார். (செ-11)

# உலக கிண்ண கால்பந்தாட்டம் பேயர்ன் முனிச் சாம்பியன்



பிபா கிளப் அணிகளுக்கான உலக கிண்ண கால்பந்து தொடரில் ஜேர்மனியின் பேயர்ன் முனிச் அணி சம்பியன் பட்டம் வென்றது. கால்பந்து கூட்டமைப்பு சார்பில்(பிபா) கிளப் அணிகளுக்கு இடையே உலக கிண்ணத் தொடர் மொராக்கோவில் நடந்தது. இதன் இறுதிச்சுற்றில் ஜேர்மனியின் பேயர்ன் முனிச், மொராக்கோவின் ராஜா கசபிளான்கா அணியை எதிர்கொண்டது.இதில் தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்தி வந்த முனிச் அணியின் வீரர் டான்டே, 7-வது நிமிடத்தில் முதல் கோல் அடித்தார். தொடர்ந்து அசத்திய இந்த அணிக்கு தியாகோ(22வது நிமிடம்) இரண்டாவது கோல் அடித்தார், இதற்கு எதிரணியால் பதிலடி கொடுக்க முடியவில்லை. பரபரப்பான இரண்டாவது பாதியில் இரு அணி வீரர்களின் கோல் முயற்சி எதுவும் பலிக்கவில்லை. முடிவில், பேயர்ன் முனிச் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை தட்டிச்சென்றது. அந்த அணியின் பிரான்ஸ் வீரர் பிராங்க் ரிபரி தங்கப்பந்து விருதும், ஜேர்மனி வீரர் பிலிப் லாம் வெள்ளிப்பந்து விருதும் கைப்பற்றினர்.


# சாவகச்சேரி பிரதேச சபை - கொடிகாமம்

## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்-2014

சபையானது 2014 ஆம் ஆண்டுக்கான கீழ்க் குறிப்பிடப்பட்ட பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் 1000.00 ரூபாவை செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பங்கள் யாவும் 15.02.2014 ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

01.பொருட்கள் வழங்குதல் (பொது)

1. காகிதாதிகள் எழுதுபொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள்
2. தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/உருக்கு)
3. கணனிகள் கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள் ,றிபன்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள்
4. யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள்
5. நீர்க்குழாய் பைப்புகள் ,பைப் இணைப்புக்கள் மற்றும் அதனோடு இணைந்த பொருட்கள்
6. கட்டட இரும்புப் பொருட்கள் ,பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருட்கள்
7. மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள் ,மின் மோட்டர்கள் மின்சார பல்புக்கள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்கள்
8. தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம் மொப்பர் மற்றும் ஏனையவை
9. அழுக்கு நீக்கும் பவுடர்கள், விம் ஹார்பிக் மற்றும் கிருமி நாசினிகள் ஏனையவை
10. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் ரயர்,ரியூப் மற்றும் ஏனையவை
11. தோல் உற்பத்திப் பொருட்கள், சப்பாத்துக்கள்
12. இறப்பர் முத்திரை வகைகள் 13. நூலகங்களுக்கான நூல்கள்.

02.பொருட்கள் வழங்குதல் (மருத்துவம்)

1. சித்த மருத்துவ மருந்துகள்
2. மருத்துவ உபகரணங்கள்

03.சேவை விபரம்

1. உருக்கு மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல்.
2. மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல். ( தொலைநகல், நிழற்படப்பிரதி இயந்திரம்)
3. மின்மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள் ஜெனரேட்டர்கள் திருத்தலும் மீள முறுக்குதலும்
4. பதிப்பக வேலை – சகல வித படிவங்கள் ஏனையவை
5. கட்டட திருத்த வேலை , உள்ளகத் தொலைபேசி பராமரித்தல்
6. வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல் , உலோக வேலைகள்
7. கணனிகள் பழுதுபார்த்தலும், சேவிஸ் செய்தலும்

04.வாகனத் திருத்தமும் சேவிஸ் செய்தலும்

1. சகல விதமான வாகனத்திருத்தம், மின்சார வேலை, வாகன உட்பக்கம், சீற் என்பவற்றுக்கான குசன் வேலை
2. சகலவிதமான வாகனங்களும் சுத்திகரிப்பு செய்தல்

05.ஒப்பந்தகாரர் பதிவு செய்தல்

1. இக்ராட் பதிவு உள்ளவராக இருத்தல் வேண்டும்
2. பதிவின் போது இக்ராட் பதிவுப் புத்தகம் சமர்ப்பிக்க வேண்டும்
3. பதிவின்போது இக்ராட் பதிவுத்திகதி காலவதியற்றதாக இருத்தல் வேண்டும்.
4. செய்யப்பட்ட வேலைகளின் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

நிபந்தனைகள

1. வழங்கல்கள்/ சேவைகள் 2014 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
2. திருப்திகரமற்ற வழங்கல்கள்/ சேவைகள் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.
3. பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.
4. பதிவு செய்யப்படாதவர்களிடமிருந்தும் வழங்கல்களையும் சேவைகளையும் பெற்றுக் கொள்ளவும் ஒப்பந்தங்களை வழங்கவும் தவிசாளருக்கு அதிகாரம் உண்டு.

திரு.சிற்றபலம் துரைராஜா
தவிசாளர்
சாவகச்சேரி பிரதேசசபை
கொடிகாமம். 24.12.2013

(சி-5984)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்கேற்க முடியாது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விசேட கூட்டம் வவுனியா கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்றதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

இந்த தெரிவுக்குழுவில் பங்குபற்றாமல் இருக்க வேண்டும் என்பதே கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற பலரது கருத்தாகும்.

இந்த விசேட கூட்டத்தின்போது வடக்கு கிழக்கில் இடம்பெறும் பல விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன. விசேடமாக காணி அபகரிப்பு, இராணுவம், பெண்கள் விவகாரம் குறித்து பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. விசேடமாக புள்ளி விபரத் திணைக்களம் தற்போது சேகரிக்கும் புள்ளிவிபரம் தொடர்பாக பலருடைய கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதன் பின்னர் புள்ளி விபரத்திணைக்களத்தின் விபரம் திரட்டும் செயற்பாட்டை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முற்றாக நிராகரிப்பதாக தீர்மானம் எடுத்துள்ளோம்.

இதற்கு மேலதிகமாக வலிகாமம், சம்பூர் உட்பட ஏனைய பிரதேசங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இராணுவ பிரசன்னம் குறைக்கப்பட்டு மக்களுக்கு ஏற்படும் அசௌகரியம் இல்லாது ஒழிக்கப்பட்டு பெண்களுக்கு ஏற்படும் ஆபத்துக்கள் நீக்கப்பட்டு மக்கள் தொழில் செய்வதற்கு இடையூறாக உள்ள பல விடயங்கள் நீக்கப்படவேண்டும் என்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை ஜனாதிபதியினால் அண்மையில் விடுக்கப்பட்ட அழைப்பு குறித்து கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. தற்போது அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழு நம்பகத்தன்மை அற்றது எனத் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் இதன்மூலம் நியாயமான அரசியல்தீர்வை அடைய முடியாது என்பதே அனைவரது கருத்தாகவும் இருந்தது.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிகாரத்திற்குள் உள்ள சில உள்ளூராட்சி மன்றங்களில் வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. அவ்வாறு வரவு செலவுத் திட்டத்தை தோற்கடிப்பதற்காக எதிர்த்து வாக்களித்தவர்களுக்களை கட்சியில் இருந்தும் உறுப்பினர் பதவியில் இருந்தும் நீக்குவது உட்பட கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை இவ்வாறான ஒற்றுகூடல்கள் எதிர்காலத்தில் கிரமமாக முன்னெடுப்பது தொடர்பிலும் ஆலோசிக்கப்பட்டது என தெரிவித்தார். (செ-11)

## தீயில் எரியுண்ட...

அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினம் பிரஸ்தாப பெண் சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலமானது மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உயிரிழந்த பெண்ணின் கணவன் சந்தேகத்தின் பேரில் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (செ-24)

## பட்டதாரி பயிலுநர்...

ளனர்.

இக்கவனயீர்ப்பு போராட்டத்தின்போது, பட்டதாரிகள் அனைவரும் கையொப்பமிட்டு மகஜர் ஒன்றையும் பிரதேச செயலரிடம் கையளித்தனர்.

கடந்த ஆண்டில் அரசாங்கத்தால் 51 ஆயிரம் பட்டதாரிகள் பிரதேச செயலகங்களுக்கு பயிலுநராக இணைக்கப்பட்டிருந்தார்கள்.

இந்நிலையில், யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலக பிரிவுகளுள் சாவகச்சேரி பிரதேச செயலகம் தவிர்ந்த 14 பிரிவுகளுக்கும் கடந்த 15ஆம் திகதி யாழ். மாவட்டச் செயலகத்தில் வைத்து பாராளுமன்ற உறுப்பினர்களாலும், அரச அதிகாரிகளாலும் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த நியமனங்கள் தொடர்பாக சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் இணைக்கப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் எதுவும் விடுக்கப்பட்டிருக்கவில்லை.

இதனையடுத்தே, நியமனம் வழங்கப்படாமையைக் கண்டித்து கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதாக பட்டதாரி பயிலுநர்கள் தெரிவித்தனர். (செ-11)


## பணி நிலை வேண்டுகை

கிளிநொச்சி நகரில் உள்ள கணனி பயிற்சி நிலையம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. நிலைய இயக்குநர் (ஆண்) - முழுநேரம்
2. கணனி போதனாசிரியர் (பெண்) - முழுநேரம்
3. அலுவலகர் (பெண்) - முழுநேரம்

சுய விபரக் கோவைகளை 28-12-2013க்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

லிட்டில் எய்ட் இலவச கணனி கல்லூரி,
திருநகர், கிளிநொச்சி.

மேலதிக விபரங்களுக்கு :- 0774700468

(5146)

FLC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH

FRENCH CLASSES

French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Belgium, Swiss திருமணம் முடித்து செல்வோர், வேலை தேடுவோர் இலகுவாக பெறலாம்.

ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007)

இது வரைக்கும் 750 க்கும் மேற்பட்டோர் French கற்றுள்ளனர்..

கடந்த International French Diploma exam இல் வடமாகாணத்தில் எமது மாணவர்கள் மட்டுமே சித்தி.....

Deutsch & Sinhala Classes உம் நடை பெறுகிறது...

No. 40, Palaly Road, ஆரியகுளம். | No.181, 1st Floor, Main Street, Nelliady. | 0779 789 456


## மரண அறிவித்தல்



சுப்பையா பொன்னம்பலம்

(முன்னாள் உரிமையாளர் முருகானந்த ஸ்ரோர்ஸ் அடம்பன்)

இணுவிலைப் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா பொன்னம்பலம் 24.12.2013 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற சுப்பையா சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இரத்தினபூபதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தங்கச்சியம்மா, இராசம்மா, வைத்திலிங்கம் மற்றும் தருமலிங்கம் (இந்தியா) அமரர் குமாரசாமி (கனடா) மற்றும் நாகம்மா, சீனியம்மா, பத்மாதேவி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமரர் பரமேஸ்வரி மற்றும் இராசகோபாலசிங்கம் (இலண்டன்) அன்னலட்சுமி, சந்திரவதனா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பொன்மலர்ச்செல்வி, பொன்தாமரைச்செல்வி, பொன்சிவசோதி (சுவிஸ்), பொன்மோகனச்செல்வி, பொன்மதிச்செல்வி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாதம், புஸ்பராசா (ஆசிரியர் - முல்/பாரதி வித்தியாலயம்), சயந்தி (சுவிஸ்) ஜனார்த்தனன் (ஸ்ரீலங்கா ரெலிக்கொம், யாழ்ப்பாணம்) கிருஷ்ணகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் யோகலட்சுமி (லண்டன்) பிரகானன், பிரகர்ஷிகா, (சிவனுயா, சிவார்த்தி, சிவாரணி, சிவறூபி, சிவசுதன் - சுவிஸ்) கிசோரன், கிருசாணு, நயனி, (கிஷாந், கஜந் - சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், றொக்சியின் (லண்டன்) அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25.12.2013 புதன்கிழமை பி.பகல் 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொலைபேசி : 0213214040,
0212241515
0041442723463

தகவல்
- பொன்சிவசோதி - மகன் (சுவிஸ்)

(5147)


NEW SCIENCE WORLD

VICTORY MUST

Navalar road junction, Brown road, Jaffna.

2016 A/L SCIENCE ஆரம்பம்

28.12.2013

7.30 A.M

பௌதிகவியல்
திரு. R. குமரன்
திரு. R. குகன்

இரசாயனவியல்
திரு. டயஸ்
Tamil & English Medium
திரு. T. சிவகுமார்

உயிரியல்
திரு. R. பொன்திவாகரன்
திரு. R. உமாசங்கர்

(C-5990)

விசேட அறிவித்தல்

நான்காவது வருட சேவையில் கால் பதிக்கும் ஈஸ்வரன் பயணிகள் போக்குவரத்துச் சேவை





இன்று தொடக்கம் முதலாம் திகதி வரை ஈஸ்வரன் பயணிகள் போக்குவரத்துச் சேவை வழங்கும் விசேட கட்டணக் கழிவு ~~1300/-~~ 1000/-

முதலாம் திகதி வரை பொதிகள் விஷேட கழிவில் ஏற்றுக் கொள்ளப்படும்.



குறிப்பு : 24 மணிநேரமும் தொடர்பு கொள்ளுங்கள் எமக்கு வேறுமுகவர்கள் இல்லை. நேரடியாக தொடர்பு கொள்ளுங்கள். முகவர்களின் போலிவார்த்தைகளை நம்பி உங்கள் பயண நேரங்களை வீணடிக்காதீர்கள்.

உடன் அழையுங்கள்
யாழ். : 0777 806 573 (கோபி)
கொழும்பு : 0777 806 583 (குமார்)

முறைப்பாடுகளுக்கு : 0777674119

(C-5989)

ஜனவரி 5 காலை 9 மணிக்கு

A/L 2016

கலை, வர்த்தக, தொழில்நுட்ப பிரிவுகள்

(C-5976)

D.C.M | யாழ் நகர்

A/L DAYCLASS

கலை, வர்த்தகம்

ஆரம்பம் 30.12.2013

காலை 9 மணிக்கு

(C-5975)

D.C.M | யாழ் நகர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.